www.padippakam.com



# தரகர் தொண்டமான்

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

# பனிமலர்

இதழ் 5 - ஜனவரி 1992



| | |
|---|---|
| U.K. | 90p |
| FRANCE | 9Fr |
| GERMANY | 3DM |
| SWISS | 3SF |
| CANADA | 2C$ |
| SRI LANKA | Rs10 |
| INDIA | Rs5 |

## சும்மா கிடந்த சங்கு

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் பக்கம்

பனிமலர்-3 பார்த்தேன். முந்தி நான் பார்த்த 1ம் இதழைவிட (2ம் இதழும் வந்ததா??) இந்த 3ம் இதழ் நன்றாக உள்ளது. அழகு, தெளிவு எனக்குப் பிடித்தது. அச்சுத் தொகுப்பும் நன்று. இவையெல்லாம் First lookலேயே ஒரு நல்ல Impressionஐத் தந்தன. ஆனால் கண்டனங்களும் இல்லாமல் இல்லை. ஒரு நல்ல கட்டுரையாக உள்ள 'முறிந்த பனைமர' விமர்சனம் சொல்லும் விமர்சனங்களை மென்மையாக வாழைப்பழத்தில் ஊசிபோல சொல்லப்போய் விமர்சனக் கூர்மை மழுங்கி விட்டது. சிவரமணியின் நல்ல கவிதைகளைப் போட்டிருக்கலாம். சோலைக்கிளி அறிமுகம் நன்றாக இருந்தது. குர்திஷ் ஏன் இப்படி அரைகுறையாகத் தொகுக்கப்பட்டது? அதை இன்னும் சிறப்பாக எழுதமுடியும். தலையங்கம், ராஜீவ் இரண்டுமே திட்டவட்டமான கருத்து ஏதும் இல்லாமல் அலைபாயும் மனதுடன் எதிர்எதிர் நியாயங்களைப் போட்டுக் குழப்பிக்கொண்டதைக் காட்டுகிறன. ஒரு தெளிவான கருத்துக்கு வந்தபின்னரே அதனை முறையாக எழுத்தில் வைக்கவேண்டும். இல்லாதபோது vague ஆகவும், மூடுமந்திரத்தைப் போலவும் குழப்பியடிப்பதாக இருந்துவிடும். மாதொருபாகனின் 'சினிமா போராட்டத்தைக் கெடுக்கிறது' என்ற கருத்தை துளிக்குக்கூட நான் ஏற்கவில்லை. கடவுளும் கதைகளும் மனித வாழ்வில் துயரங்கள் நிலவும்வரை வாழும் ( மனிதனின் ஆக்கவல்ல செயல் அதனை செல்வாக்கிழக்க வைக்கக்கூடும் எனினும்). ஆனால் நாங்கள் விழுந்து விழுந்து சிரித்து ரசித்த கட்டுரை அது.
-ஈஸ்வரன், சென்னை-35

---

தங்கள் ஆடிமாத பனிமலரில் முறிந்த பனை மரம் நூல் விமர்சனத்தில் சி.சிவசேகரம் என்பவர் விமர்சனம் என்ற பெயரில் சில குதர்க்கக் கருத்துக்களை வெளியிட்டு இருந்தார்.
உதாரணமாக 'முறிந்த பனைமரத்தில் புலிகளை மாத்திரம் ஒட்டுமொத்தமாக குறை கூறவில்லை. எல்லா இயக்கங்களினதும் குறைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. புலிகளினது குறை குற்றங்கள் கூடுதலாகச் சுட்டிக்காட்டப் பட்டதென்றால் அதற்குக் காரணம் உண்மையிலேயே மற்ற இயக்கங்களைவிட, ஏன் இலங்கை இராணுவத்தைவிட, புலிகள் மிக மோசமாக நடந்துள்ளனர் என்பதுதான். இன்றைக்கு நமது விடுதலை இந்தளவு மோசமாகப் போனதற்கு முழுப்பொறுப்பும் புலிகள்தான்.
1. வல்வெட்டித்துறை வாசிகசாலையில் 40க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களைப் பூட்டிவைத்துச் சுட்ட இலங்கை இராணுவத்திற்கும் கிட்டுவிற்குக் குண்டெறிந்தார்கள் என்ற (இது உள்வீட்டுப் பிள்ளைகளின் - புலிகளின் - வேலை என்பது வேறு விடயம்) காரணத்துக்காக கைதுசெய்து காவலில் வைத்திருந்த 60க்கு மேற்பட்ட ஈபிஆர்எல்எ:ப் இயக்க இளைஞர்களை சுட்டுக்கொன்ற புலிகளுக்கும் என்ன வித்தியாசம் என்று சொல்லமுடியுமா?
2. இலங்கை இராணுவத்தால் வடகிழக்குப் பிரதேசங்களில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் சம்பவங்களுக்கும் புலிகளால் வட கிழக்கு மற்றும் தென்னிலங்கைப் பிரதேசங்களில் கொல்லப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களின் சம்பவங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?
3. வவுனியா தண்டிக்குளம் போன்ற இடங்களில் இலங்கை இராணுவம் தடைமுகாம்களை அமைத்து வட பகுதிக்குப் போவோரையும் வருவோரையும் சோதனை செய்கிறது என்றால் அதை ஏற்றுக்கொள்ளலாம். காரணம், ஆயுதம் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை கடத்துவதைத் தடுக்கவும் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் என்று சொல்லலாம். ஆனால் புலிகளும் இலங்கை இராணுவத்தைப்போல் தடைமுகாம் அமைத்து மக்களைத் துன்புறுத்துகிறார்கள். பின்பு இவர்களுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் என்ன வித்தியாசம்? இராணுவத்திற்கு 50ரூபா 100ரூபா கொடுத்தால் போதும். ஆனால் புலிகளுக்கோ 10,000ரூபா அல்லது இரண்டு பவுண் நகை என்று அழவேண்டி இருக்கிறது.
4. இலங்கை இராணுவத்தினர் சந்தேகத்தின்பேரில் கைது செய்து போபவர்களை படுகொலைசெய்து புதைக்கிறார்கள் என்றால் புலிகள் அதைவிட மோசமாக மாற்று இயக்கத்தவர்களையும் மற்றும் சந்தேக நபர்களையும் கடத்திச் சென்று அல்லது கைதுசெய்து கொண்டுபோய் மிருகத்தனமாக சித்திரவதை செய்கிறார்கள். உயிருடன் எரிக்கிறார்கள். சில இடங்களில் உயிருடன் புதைத்த சம்பவங்கள்கூட நடந்துள்ளன. பின்பு இவர்களுக்கும் இராணுவத்தினர்க்கும் என்ன வித்தியாசம்?
சிவசேகரம் ஓர் இடத்தில் உதாரணம் காட்டுகிறார். அதாவது பிற போட்டி இயக்கங்கள் மட்டுமன்றி அரச படைகளும் அந்த இயக்கத்தின்மீது சந்தேகம் விழுமாறு சில காரியங்களைத் தாமே செய்யக்கூடும் என்கிறார். உண்மைதான். ஆனால் இதில்கூட புலிகள்தான் முதலிடம் வகிக்கிறார்கள் என்பதைச் சிவசேகரம் அறிவாரா? உதாரணத்துக்கு ராஜனி திராணகமவின் படுகொலையை எடுத்துக் கொள்ளலாம். புலிகள் தாங்களே செய்துவிட்டு E.P.R.L.Fஐயும் இந்திய இராணுவத்தையும் சாட்டவில்லையா? இப்படிப் பல சம்பவங்கள் புலிகளால் செய்யப்பட்டு மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தினார்கள். அண்மையில் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் புலிகள் இயக்கத்தைவிட்டு வெளியேறி இங்கு வந்திருக்கிறார். (பெயர் "XXX" தயவுசெய்து பெயரை வெளிப்படுத்தவேண்டாம்). அவருடன் நட்புரீதியாக பேசியபோது சொன்னார்,

(39ம் பக்கம் பார்க்கவும்)





படிப்பகம்

www.padippakam.com

2/2/1992

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

# ஊரிலும் உலகிலும்

## பதவி அகற்றல் அரசியல்

திரு பிரேமதாஸவை ஜனாதிபதி பதவியினின்று அகற்றும் முயற்சியின் தோல்வி பலருக்கு ஏமாற்றமளித்திருக்கும். திரு பிரேமதாஸ மட்டுமன்றி முழு அரசாங்கமும் ஜனநாயக விரோதமான முறையிலேயே தமது அதிகாரத்தை நீடித்து வந்தனர். பதவி விலக்கல் முயற்சியை முறியடிப்பதில் ஜனாதிபதியின் வெற்றி ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம், வன்முறை, மிரட்டல் ஆகிய ஆயுதங்களின் வெற்றி என்பதில் ஐயமில்லை. இந்த முயற்சியின் முக்கியமான விளைவை இலங்கையின் எதிர்க்கட்சிகள் கவனிக்கத் தவறிவிட்டன. அரசாங்கத்தினுள் இருந்த பிளவு அதன் பலவீனத்தின் வெளிப்பாடு என்பதை மக்கள் உணர்ந்ததனால் ஜனாதிபதிக்கு எதிரான பொதுக்கூட்டங்களில் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றினர். இந்த உற்சாக அலையை ஒரு வெகுஜன சக்தியாகக் கட்டியெழுப்பும் வாய்ப்பு சரியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் இன்று ஜனநாயக மனிதஉரிமை இயக்கம் ஒரு வலிய சக்தியாக உருவெடுத்து அரசாங்கத்திற்குச் சவாலாக அமைந்திருக்கும். எதிர்க்கட்சிகள் பதவி அகற்றும் முயற்சியைப் பாராளுமன்ற அரசியலின் வரையறைகட்கு அப்பால் வளர்க்கத் தவறியதால் இன்று திரு லலித் அத்துலத்முதலியும், திரு காமினி திஸ்ஸாநாயக்கவும் முக்கிய எதிர்க்கட்சியினராகப் பவனிவரும் நிலை உருவாகியுள்ளது. திரு பிரேமதாஸவைவிட எவ்வகையிலும் இலங்கையின் மக்களின் நலனுக்கு உதவாத இவர்களை மாற்று அரசியற் தலைமையாக்கும் நிலை வருந்தத்தக்கது. இவர்கள் ஒரு ஜனநாயக அணிக்குத் தம் உதவியைத் தரும் நிலைக்கும் இவர்களே ஜனநாயக அணியின் வழிகாட்டிகளாகக் காணப்படும் நிலைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் என்றுதான் மக்களிடமிருந்து கற்பார்களோ?

## மக்களுக்காகவா, புலிகளுக்கு மூக்குடைக்கவா?

ஈ.பி.ஆர்.எல்.எப். ஜனாதிபதியைப் பதவி விலக்கும் தீர்மானத்தை ஆதரித்தது மிகவும் பாராட்டத்தக்க ஒரு காரியம் என்றே கருதுகிறோம். ஆயினும் அதற்காக அவர்கள் தந்துள்ள காரணங்கள் அவர்களது அரசியல் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது. அவர்கள் தந்த பத்து முக்கிய காரணங்களில் ஐந்து விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டவை. ஒன்று இந்தியாவின் நலன் சம்பந்தப்பட்டது. இந்த விளக்கத்தை வாசிப்பவர்களின் மனதில் என்னவகையான பாதிப்பு ஏற்படும் என்று அதை எழுதியவர்கள் சிந்தித்திருப்பார்களாயின், ஜனநாயகம், மனித உரிமை மீறல், அரச பயங்கரவாதம் போன்ற விஷயங்கள் மேலும் முக்கியம் பெற்றிருக்கும். திரு பிரேமதாஸவுக்கும் இந்திய அரசுக்குமிடையிலான உறவின் தன்மையோ விடுதலைப் புலிகளுடன் அவரது தொடர்புகளோ அவரைப் பதவி இறக்கும் காரணங்களாயின் அவர்மீது குற்றஞ்சாட்டுவோர் பலரும் அதிற் பங்குடையவர்களே. இவ்வாறான விஷயங்களில் இலங்கை அரசாங்கம் எடுத்த நிலைப்பாடுகளைவிட அதன் அடிப்படையான அரசியற்தன்மை முக்கியமானது. அதற்கு அழுத்தந்தராத அரசியல் ஆய்வுகள் மீண்டும் பழைய தவறுகட்கே வழியமைக்கும். சரியான காரியங்கள் பாராட்டுக்குரியன. சரியான காரணங்கட்காகவும் செய்யப்படுமாயின் அவை நம்பிக்கையூட்டுவன.

Panimalar - 5
(Snow Blossom)
A Tamil Magazine

Published by:
Tamils' New Cultural Group
BCM POLARIS
LONDON WC1N 3XX

Editors:
M.Arudkumaran
N.Sabesan
S.Sivasegaram

Type-set by: R.Gurunathan
Printed by Set Line Data Ltd.



படிப்பகம்

www.padippakam.com

பனிமலர் - 5
ஜனவரி 1992
வெளியீடு:
தமிழ்மக்கள் புதிய கலாச்சாரக்குழு

தொடர்புகளுக்கு:
BCM POLARIS
LONDON WC1N 3XX
U.K.

ஆசிரியர் குழு:
ம.அருட்குமரன்
நா.சபேசன்
சி.சிவசேகரம்

**இதழ் 4 இன் அட்டைப்படம் கே.கிருஷ்ணராஜாவினால் எடுக்கப்பட்டது**

எழுத்துப்பதிவு: இ.குருநாதன்
அச்சுப்பதிவு: Set Line Data Ltd.

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Denmark

## குத்திரப் பாவைகள்

ஈரொஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்பதாகத் தீர்மானித்ததும் அதற்கு விடுதலைப் புலிகள் அவர்களை அனுமதித்ததும் பதவி ஏற்ற நபர்களின் பட்டியலும் இந்த ஈரொஸ் எம்.பி.க்கள் யாருடைய கைப்பாவைகள் என்பதைத் தெளிவாக்கிவிட்டன. இப் பதவியேற்பு நாடகம் திரு பிரேமதாஸவைப் பதவியில் நீக்க விடுதலைப் புலிகள் தயாரித்த ஒன்று என்ற சந்தேகம் நியாயமானது. ஈரொஸில் இது ஒரு பகிரங்கமான பிளவை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் கைப்பாவைகளாக இயங்க மறுக்கும் ஈரொஸ் பிரிவினர் தமது சுதந்திர உணர்வைக் காலந் தாழ்த்தியே காட்டியுள்ளனர். விடுதலைப் புலிகளின் மறைமுக ஆசியுடன் தேர்தலில் போட்டியிட்ட வேளையிலயே இந்த ஞானம் வந்திருந்தால் இன்று ஈரொஸ் இலங்கை மக்கள் மத்தியில் ஓரளவு நல்ல மதிப்புள்ள ஒரு சக்தியாக இருந்திருக்கலாம்.

## ஐரோப்பாவில் பிரித்தானியா: இது யாருக்காக?

ஐரோப்பிய சமுதாயத்துடன் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தும் விஷயத்தில் பிரித்தானியா மற்ற நாடுகளைவிட மந்தமான வேகத்திற் செயற்படுவதற்கான உரிமையை மற்ற ஐரோப்பிய சமுதாய நாடுகள் பதினொன்றும் ஏற்றுக்கொண்டுள்ளன. அண்மைய 'மாஸ்ற்றிஹ்ற்' சந்திப்பில் பிரித்தானிய பிரதமர் ஜோன் மேஜரின் மகத்தான வெற்றி இதுவென்று அரசாங்க ஆதரவு ஏடுகள் பாராட்டுகின்றன. ஐரோப்பாவினின்று பிரித்தானியாவைத் தனிமைப்படுத்தும் செயலென்று எதிர்க்கட்சி அனுதாப ஏடுகள் விமர்சிக்கின்றன. எவ்வாறாயினும் ஒன்று மட்டும் நிச்சயம். ஐரோப்பிய நாடுகள் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பாகவும் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கைகளை பிரித்தானிய வலதுசாரி அரசாங்கம் ஏற்கத் தயாராக இல்லை. பிரித்தானிய முதலாளிகளின் நலன்களை பிரித்தானிய பொருளாதாரத்தின் நலன்களாகக் காட்டும் முயற்சியில் பத்திரிகைகள் அவர்கட்குத் துணைபோகின்றன. பிரித்தானியத் தொழிலாளரும் ஒடுக்கப்பட்ட மக்களும் அரசாங்கத்தின் இந்த மோசடியை அடையாளங்காணத் தவறுவார்களாயின் அதன் விளைவுகளை நீண்ட காலத்துக்கு அவர்களே அனுபவிக்க நேரிடும்.

## MIRJE மீதான தாக்குதல்.

சில மாதங்கள்முன்பு இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) சிங்கள ஏடான 'யுக்திய' தடைசெய்யப்பட்டது. செப்டெம்பர் 18ம் திகதி அதை வெளியிடும் நவமக அச்சக உரிமையாளர் கெலி சேனநாயக்க பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஒக்ரோபர் 4ம் திகதி இலங்கைப் பொலீஸார் அச்சகத்தை மூடி 'சீல்' வைத்தனர். அச்சுச் சாதனங்கள் சேதப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக, தடை நீக்கப்பட்ட பின்னும் அச்சகம் இயங்கமுடியாது தொழிலாளர்கள் தவிக்கின்றனர். அத் தொழிலாளர்கட்கு மனிதாபிமான அடிப்படையிலான உதவி தேவைப்படுகிறது. அவர்கட்கு வழங்கப்படும் உதவி அரசாங்க அடக்குமுறைக்கு எதிரான ஒரு குரலாகவும் அமையும் என்பது நமது கருத்து.



படிப்பகம்

www.padippakam.com

விடிய விடிய நல்லா மழை பெய்ஞ்சு கொண்டிருந்தது. இறுக்கிப் போர்த்துக் கொண்டு படுத்திருந்தன். புலிகளின்ரை போக்குப் பற்றி என்ரை மனம் அலட்டிக் கொண்டிருந்தது. முல்லைத்தீவுப் பக்கத்திலை கொஞ்ச மாவது நிண்டு பிடிப்பாங்கள் எண்டு இஞ்சினை கதைச்சினம் அது நடக்கேல்லை. ஆனையிறவு, முல்லைத் தீவு, பூனகரி எண்டு எல்லாத்தையும் பறிகுடுத்தாச் சுது. முந்தி எல்லாத்தை யும் குடுத்துக் கடைசியாய் வட மராட்சியையும் குடுக்க வேண்டி வந்தது போலைத்தான். நல்லவேளையா அந்தநேரம் இந்தியாக் காறன் வந்து சேர்ந்தான். இல்லாட்டி வரலாறு எப்படிப் போயிருக்குமோ? சிங்கள ஆமியள் அந்தநேரம் வல்லு வெட்டித்துறையிலை செய்த அனியா யத்தைப் பார்த்தால் விளங்கியிருக்கும். வடமராட்சியை அவங்கள் பிடிச்ச வேகத்தைப் பார்த்தால் அப்பிடியே முழுவதையும் பிடிச்சிருப் பாங்கள் போலதான் இருந்தது. அந்த நிலைமை தான் இப்ப திரும்பவந் திருக்கு.

இப்பவாவது இவங்கள் கொஞ்ச மேனும் சிந்திப்பாங்களே.. அதுதானே கிடையாது. கெடுகுடி சொல்கேளாது சாகிறவனுக்கு மருந்தேறாது எண்ட மாதிரி இவங்களுக்கு ஒரு ஞாயமும் விளங்குதில்லை. ஆனையிறவுச் சண்டை முட்டம் இந்தாபிடி இது தான் கடைசிச் சண்டை, இதோடை இரண்டத்தா ஒரு முடிவு வரப்போகுது எண்டு சொன்னாங்கள். ஐநூறு சவப்பெட்டி அடிச்சுச்சுத் தயாராய் வெச்சிட்டு சண்டைக்குப் போனாங் கள். பார் அனையிறவு விழுகுது எண்டு பேச்சு நடந்தது.

கடைசியில் அரசாங்கப்படையள் வெத்திலைக் கேணியிலை இறங்கிவர இவங்களாலை தாக்குப் பிடிக்கேலாமல் போட்டுதாம். ஐநூறு சவப் பெட்டி காணாமல் போட்டுது. கன சனங்களை எடுக்கவும் ஏலாமல் போட்டுதாம். ஆமிக்காறன் வெத்தி லைக் கேணியிலை இறங்கிவருவான் எண்டு இவை கொஞ்சம் கூட எதிர் பார்க்கேல்லையாம். இதை ஆரிட் டைப் போய்ச் சொல்ல..

சண்டை பிடிக்கிறது எண்டு வந்தால் எப்பிடிச் சண்டை பிடிக் கிறது எண்டதுக்கும் சில வழிமுறை இருக்குது. எதிரியை மோடன் எண்டு நினைச்சுக் கொண்டு சண்டை பிடிச்சால் ஒரு நாளும் வெல்லேல் லாது. ஏதாவது அதிர்ஷ்டத்தாலை தான் வெல்லலாம். எதையும் பிளான் பண்ணிச் செய்து பழக்கமே இவங்களுக்கு? சும்மா போற போக்கிலை நடந்துதான் பழக்கம். இல்லாட்டி எதிரி, அவன்ரை ஆக்கள்,



ஒகஸ்ட் - செப் - ஒக்டோபர்

அவனுக்குத் துணையான வாய்ப்பான சங்கதிகள், எங்கட ஆளணி எல்லாத் தையும் பாத்து எப்பிடி என்ன மாதிரி சண்டையை நடத்திறது எண்டு ஒரு திட்டமிருக்கோணும்.

கனக்க வேண்டாம் இவங்கள் திருவள்ளுவரைப் படிச்சிருந்தாலே விளங்கும்.. ஆனால் ஆர் படிக்குது கள்.. இதுகள் தானே படிப்பு வேண்டாம் எண்டு நிக்குதுகள்!

எல்லாத்துக்கும் முதல் ஏன் சண்டை பிடிக்கிறம் எண்டதிலை தெளிவு இருக்க வேணும். இல்லாட்டி அவனாரோ சொன்னமாதிரி குளிக்கப் போய் சேறு பூசின கதைதான் நடக்கும். விடுதலைப் போராட்டம் எண்டது விடுதலைக்கான போராட்டமே ஒழிய மாறிமாறி அடிபடுகிற பந்தடியில்லை. இதிலை எதிரியை ஒழித்துப் போட்டு எங்கடை அதிகாரத்தை நிலைநாட்டிற தெண்ட தெளிவிருக்க வேணும் அந்த அடிப்படை யிலை வேலை நடக்க வேணும்.

இதென்னடா வெண்டால் ஒரு யோசனையுமில்லாமல் போகிற போக் கில போறது. எனக்கு ஒரு கூத்துப் பாட்டுத்தான் ஞாபகம் வருது:

சாய்ஞ்சா சாயுற பக்கமே

சாயுற செம்மறி ஆடுகளா..

மேயுற பக்கத்தை விட்டுப் போட்டுச் சும்மா

மேலையும் கீழையும் பாக்கிறி யள்.. (சாஞ்சா.)

இவங்கடை போக்கை யோசிக்க விசர்தான் வருகுது. முதல்லை ஒவ்வொண்டொவண்டா எல்லா இயக்கத்தையும் தடை செய்தாங்கள். பிறகு சனத்தின்ரை முதுகிலை ஏறிச் சவாரி விடுகிற மாதிரி நடக்கத் துவங்கினாங்கள். தாங்கள் என்ன செய்யிறம், இதுக்கு ஆர்ஆர் தங்க ளோடை நிப்பினம் எண்டு ஒண்டும் யோசிக்கிறேல்லை. இப்ப அந்தரிச்ச நிலையிலை இருக்கிறாங்கள். ஒரு பக்கத்திலை அரசாங்கம், இன்னொரு பக்கத்திலை இந்தியா, உள்ளுக்கை சனங்களையும் (வெளியில சொல்லாட் டியும் அரைக்கரவாசி எதிர்ப்புத் தான். இது சரியான இக்கட்டான நிலை ஆனால் இவ்வளவுக்குப் பிறகும் கூட ஏதாவது யோசினை..

புலி பசிச்சாலும்புல்லைத் தின்னாது. பட்டினி கிடந்து செத்தாலும் சாகுமே ஒழிய எண்டு ஒருத்தர் சொன்னார். அது உண்மை தான் போல கிடக்குது..

---

என்டாலும் இவங்கடை பாஸ் முறை ஆகலும் அனியாயம். ஏதும் ஆபத்து அந்தரம் எண்டு கொழும்புக்கு வாற சனத்தையும் இவங்கள் போக விடுறாங்கள் இல்லை. பவுண் கட்டு, கட்டிப் பாஸ்எடு, பிணை நில், பத்து வயதுக்கும் இருபத்தொன்பது வயதுக் குமிடையிலை ஆண் பெண் ஒருத்தரும் போகேலாது, குடும்பமாய்ப் போற தெண்டால் வீட்டை எங்களிட்டைத் தந்திட்டுப் போ எண்டு எத்தினை சட்டம் போடுறாங்கள்.

பவுண் கட்ட வழியில்லாமல் பாசும் எடுக்கேலாமல் கொழும்புக்கு மருந்தெ டுக்கவும் வரேல்லாமல் எவ்வளவு சனம் கவலைப்படுகுது. பவுண் கட்டுறதெண் டால் சும்மா வேலையே.. அதைக் கொண்டு போய் அவங்கடை ஒவ்பிசிலை காவல் நிண்டு அவங்கள் வருமட்டும் காத்திருந்து நிறுத்துக் குடுத்திட்டு வரவேணும். தற்சேலா அவங்கள் வராட்டில் திரும்பி வரவே ணும். கியூவில காவல் நிக்கிற தெண்டால் எவ்வளவு நேர மெண்டு நிக்கிறது. அதுவும் ஆமிக் காறன் எந்தநேரம் குண்டு போடுவான் ஹெலியிலை வருவான் எண்டு தெரி யாமல் இருக்கேக்கை.

கொஞ்சநாளைக்கு முதல் பிறவி என்டொரு மலையாளப்படம் காட்டி னாங்கள் கொழும்பிலை. அதைப் பாத்திட்டு வரேக்கை எனக்குத் தோன்றினது இந்த விழுவாங்கள் இந்தப் படத்தைப் பாக்கவேணும் எண்டுதான். மகனைப் பொலிஸ்



படிப்பகம்

www.padippakam.com

பிடிச்சுக் கொண்டு போக தகப்பன் படுகிறா அவஸ்த்தைகளைப் படம் பிடிச்சிருக்கிறாங்கள் புத்திரசோகத் தின்ரை அருமை இவங்களுக்கு எப்படித் தெரியப் போகிறது. ஒவ் வொரு நாளும் இவங்கடை காம்பு களுக்கு முன்னாலை எவ்வளவு சனம் கண்ணீரும் கம்பலை யுமா நிண்டு அழுகுது. பிள்ளையளை அதிலை இருந்து இதிலை இருந்தது அதோட தொடர்பு இதோட தொடர்பு எண்டு எவ்வளவு பேரை அள்ளிக் கொண்டு போய் வைச்சிருக்கிறாங்கள். விடுதலை க்கு போராடுறதெண்டால் மற்றவங் களைப் பிடிச்சுக் கொண்டு போய் கசக்கிப் பிழியிறது என்னத்துக்கு எண்டு எனக்கு விளங்கேல்லை. இப்பிடி எல்லாரிலையும் சந்தேகமும் பயமும் இருக்கிறது ஏன்? தாங்கள் செய்யுறது பிழையெண்டு தங்களுக்கே தெரியிற படியால் தானே இப்படி அளவுக்கு மிஞ்சிப் பயப்பிடுறாங்கள்...

ஒரேயொரு இயக்கந்தான் இருக்க லாம், ஒரேயொரு கருத்துத்தானிருக்க லாம் எண்டு சொல்லுறது எவ்வளவு மடைத்தனம். எல்லாற்றை கருத்துக் களையும் மோதவிட்டு சரியானதைக் கண்டு அதின்படி போறதுதானே நாட்டுக்கும் சனத்திற்கும் நல்லது. யாழ்ப்பாணத்திலை தாங்கள் கருத்துச் சுதந்திரத்தை மதிக்கிறம் எண்டு கதை விடுறாங்கள். அங்கையிருந்து வாற பேப்பர், போடுற நாடகம் எல்லாத் திலையும் தங்களைகொஞ்சமேனும் விமர்சிக்கிற மாதிரி ஏதேனும் வந்தால் அவ்வளவு தான். தாங்கள் விமர் சனத்துக்கு அப்பாற்பட்ட புனிதமான வர்கள் எண்ட கருத்தை இவங்கள் பேண விரும்புறது எவ்வளவு விசர்த்தன மான எண்ணம். மனிசன்ரை விடுதலைக்காண்டி மனிசர் போரா-டுறபோது பிழைசரி களைக் கதைக்க உரிமையில்லையெண்டால் ஆர் ஒத்துப் பேசி வருவான். முதல்லை இது முழுச் சனத்தின்ரையும் போராட்டம் எண்டதை இவங்கள் விளங்கிக் கொள்ள வேணும் அப்பதான் சனங்களின்றை கூட்டு முயற்சி யில்லாமல் இது முன்னேற ஏலாது எண்டு விளங்கும்.

முத்தமிழ் விழாவும் மாவீரர் தினமும் நடாத்தி மக்களை தங்கடை பக்கம் வென்றெடுக்கிறதுக்குப் பதில் மக்களுக்கு குடுக்க வேண்டிய சனநாய கத்தின்ரை முக்கியத்துவத்தை இவங்கள் விளங்கிக் கொண்டாலே போதும். சனம் இவங்களோடை நிக்கும்.

---

இவங்கடை செயலுகள் எவ்வளவு சிரிப்புக்கிடமாக இருக்குது எண்டு சிலவேளையள்ளை பார்த்தால் விளங் கும். யாழ்ப்பாணத்திலை திருவிழா நடந்து கொண்டிருந்த கோயில் வீதியின்ரை ஒதுக்குப் புறத்திலை ஒரு இளம் சோடி இருந்து தங்களுக்கை கதைச்சுக் கொண்டிருக்குது.

இது நடந்தது ஒரு நாலைஞ்சு மாதத்துக்கு முதல். திடீரெண்டு ஐஞ்சாறு பெடியள் வந்து 'றவுண்ட் அப்' பண்ணியிட்டாங்கள்.

சோடிக்கு என்ன செய்யிறதெண்டு தெரியல்லை பிறகுதான் விசயம் விளங்கிச்சுது அவையள் அப்பிடி யிருந்து கதைக்கிறது தமிழ்ப் பண்பாட்டுக்கு விரோதமாம்.

சோடியைப் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள்.

அதுகள் தாங்கள் கலியாணம் முடிக்கிறதாய் இருக்கிறதை சொன் னாப் பிறகு உடனை ரிஜிஸ்டர் பண்ணிப்போட வேணும், பண்ணாமல் உப்பிடி கண்டபடி திரியக்கூடாது எண்டு உத்தரவு போட்டுட்டு விட்டாங்கள்.

எனக்கு உண்மையிலை இவங்கடை தமிழ்ப் பண்பாடு எது எண்டு விளங்கேல்லை.

---

தொண்டமான் புலியளோடை பேசப் போகிறார் எண்டு கதை வந்திருக்கு. புலிகள் இவருக்கு கடிதம் போட்டதாயும் இதுக்குப் பிறேமதாஸ 'ஓம்' எண்டிட்டார் எண்டும் கதை நடக்குது.

தொண்டமான்ரை விளையாட்டு எல்லாருக்கும் தெரிஞ்சது தானே. எப்படா இதுக்குள்ளை என்னைப் பெரியாலாய் மதிச்சுக் கூப்பிடுவாங்கள் எண்டு வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்தவர் அவர். அரசாங்கத் தோடை கூட்டுச் சேர்ந்து அசல் யூ என்பிக் காரங்களைவிட தடிச்ச யூ என் பியாக மாறிவிட்டவர் அவர்.

புலியளை சம்மதத்துக்கு கொண்டு வர தனக்கு முடியும் எண்டு அவர் வெளிக்கிட்டிருக்கிறார்.

இதை மற்ற எதிர்க்கட்சி ஆக்களும், தமிழ்க் கட்சியள் சிலதும் எதிர்க்குது. ஆதரிக்கிறதுக்கும் எதிர்க் கிறதுக்கும் எங்கடை அரசியல் வாதி களுக்கு ஒரு காரணமும் தேவை யில்லை. எதிர்ப்பதற்காகவே எதிர்ப் பினம். பிறகு சும்மா ஆதரிப்பினம் தங்கடை தனிப்பட்ட காரணங்களை பின்னாலை ஒழிச்சு வைச்சுக் கொண்டு அதுக்காகத்தான் எதிர்க் கிறது.

தொண்டமான் புலியளோடை பேசப் போற அடிப்படையை அவர் விளங்கப் படுத்தின விதம் அசல் புறோக்கர் முறையில் தான் அரசாங்கம் தனிநாடு தரமுடியாது எண்டு சொல்லுது. புலியள் தனிநாடு வேணும். வேறை ஒண்டும் வேண்டாம் என்னினம் இவை இரண்டுபேரையும் சமப்படுத்த இடை யிலை ஒரு தீர்வைக் கண்டு பிடிச்சு சமாதானப்படுத்திறது தான் என்ரை பணி என்கிறார் அவர். அவரைச் சொல்லிப் பிழையில்லை. அவர் ஒரு நல்ல தரகர் எண்டு பேரெடுத்தவர். பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல்ட அடிச்சதாகப் பேர் பண்ணிறதிலை ஆள் வலுசூரன். இப்ப அவர் சொல்லியிருக் கிற விசயங்களையிட்டு புலியள் என்ன சொல்லப் போயினம், மற்றச் சிங்களக் கட்சிகள் என்ன சொல்லப் போயினம், இது நடைமுறைக்குவர இவை விடுவினமோ எண்டதெல்லாம் ஒரு புறமிருக்க புலியள் இப்ப பேசுவாற தாலை ஒரு யுத்த நிறுத்தம் வரலாமோ எண்டதுதான் ஒரே கதையாயிருக்கு.

வாற தைமாதம் பொங்கலோடை அவர் போவார். மாத்தையாவோடை பே-சுவார் எண்டு கதை அடிபடுகுது.

மாத்தையா தொண்டமானுக்கு எழுதின கடிதத்திலை யுத்த நிறுத்தத் தை நடைமுறைப்படுத்த எந்த நிபந்த னையும் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறாராம். எப்படியோ தொண்டமான்ரை இந்தப் பேச்சுவார்த் தைப் பிளானிலை ஆருக்கு லாபம் வருதோ இல்லையோ தொண்டமானு க்கு நல்ல லாபந்தான்.

மலையகத்தில உள்ள தோட்டங் களைத் தனியாக்களுக்கு விக்கிற அரசாங்கத்தின்ரை திட்டத்துக்கு இவர் குடுக்கிற ஆதரவாலை வரப்போற பேர் இழப்பை இது ஈடுசெய்து போடும்.

---

நவம்பர் - டிசம்பர்

---

எதிர்பார்த்த மாதிரி தொண்ட மானின்ரை பேச்சுவார்த்தை விசயம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கு. அந்தச் சூட்டிலை தோட்டங்களைத் தனிப்பட்ட முதலாளிகளுக்கு விக்கிற விசயம் எடுபடவே இல்லை. அதை இரகசியமாக நசுக்கிப் போட்டினம். பிரேமதாஸவுக்கு எதிராகக் கொண்டு வந்து போன ரண்டு மூண்டு மாசமா அடிபட்ட 'இம்பீச்மென்ற்' பிரச்சினை போக இப்ப தொண்டமான்ரை பேச்சுவார்த்தை பெரிசா அடிபடத் தொடங்கியிருக்கு. மார்கழியிலை போகாமல் பொங்கலோட யாழ்ப்பாணம் போய் தான் புலியளோடை பேசப் போறதா தொண்டமான் அறிவிச்சி ருக்கிறார். இவற்றை திட்டத்தின்படி வடக்குக் கிழக்கு இணைஞ்ச ஒரு மாநிலம் வரும். இந்த மாநிலத்தின்ரை தலைமைக்கு கீழ் முஸ்லிம் மக்களுக்கான பிரதேசசபை இருக்கும். பாதுகாப்பு பொருளாதார, அந்நியத் தொடர்பு உள்ளிட்ட பல அதிகாரங்கள்



படிப்பகம்

www.padippakam.com

இதுக்கு இருக்குமாம். இன்னும் இதைப்பற்றின விவரங்கள் வெளியாலை வரேல்லை. இதை அரசாங்கம் ஏற்குமோ இல்லையோ என்டது இன்னமும் தெரியேல்லை. இது தொண்டமான்ரை தனிப்பட்ட முயற்சி என்ட அளவுக்கு மேலை வேறை எந்த அக்கறையும் அரசாங்கம் காட்டேல்லை. இப்பவே இதை எதிர்த்துக் கனக்க புத்தபிக்குகள் அறிக்கைகள் விடத் தொடங்கியிட்டினம். எதிர்க் கட்சியளும் எதிர்க்குது. இதைப் பற்றி பிரேமதாஸ இன்னமும் பகிரங்கமாக மூச்சுக்கூட விடவில்லை!

என்னவோ எனக்கென்டால் இதொண்டும் சரிவாற விசயமாய்த் தெரியேல்லை. புலிகளும் அரசாங்கமும் பேச்சுவார்த்தையைத் திரும்பத் தொடங்க வேணும் எண்டு பேசிற எல்லாரும் யுத்த நிறுத்தம் ஒண்டு வந்தால் நல்லது என்டதை அடிப்படையாக வைச்சுக் கொண்டு பேசுகினமே ஒழிய பிரச்சினையைத் தீர்க்கிறதை அல்ல. புலியள் ஒரு சமஷ்டி முறையான அரசுக்கு ஒத்து வருவாங்கள் எண்டு எல்லாரும் சொல்லினம். ஆனால் ஆரும் அப்பிடி விசயங்களை வெளிப்படையாப் பேசேல்லை. பேசுறதைச் சனத்துக்குத் தெரியத்தக்கதா வெளிப்படையா வைச்சுப் பேசாட்டி போனமுறை நடந்ததுபோல திரும்பவும் அரசாங்கம் புலியளையும் முழு உலகத்தையும் நல்ல வடிவாப் பேக்காட்டிப் போடும் என்டதிலை பிறகு எதேன் சந்தேகமே?

பெடியளின்ரை விளையாட்டு இதுக்கிள்ளை ஒரு பக்கம். சனம் தின்னக்குடிக்க வழியில்லாமல் சாகக் கிடக்குது. இவங்கள் என்னடா என்டால் இதுக்குள்ளை கொண்டாட்டங்கள். முதல் முத்தமிழ் விழா எண்டு கொண்டாடி எக்கச் சக்கமாய்ச் செலவழிச்சாங்கள். பிறகு மாவீரர் தினம் கொண்டாடினாங்கள். இப்ப என்னடா என்டால் கட்டுப்பாட்டு விலை அது இதெண்டு பேந்தும் பேந்தும் சனத்தைச் சுரண்டித் தள்ளுறுங்கள்.

அரசாங்கம் நிவாரணம் எண்டு குடுத்த சாமானுக்கு இவங்கள் காசு வாங்கிறாங்கள் என்டால் பாக்க வேண்டியதுதானே. உண்மையில என்ன தான் மனதிலை வைச்சிருக்கிறாங்களோ தெரியேல்லை.

ஆனையிறவோடை சனத்துக்கு மனம் விட்டுப் போச்சு. அதுக்குப் பிறகும் பாஸ் எண்டும் பவுன் எண்டும் சனத்தைக் கஸ்டப்படுத்தினால் என்னண்டுதான் சனம் சமாளிக்கிறது.

இப்ப பேந்து ஆமி பலாலியிலை இருந்து வெளிக்கிடுறான். காம்மைப் பெருப்பிக்கிற பிளான். இடைக்காட்டுப் பக்கமாய் அவன் 'மூவ்' பண்ணி நிறைய இடத்தைப் பிடிச்சிட்டான். எக்கச் சக்கமான குடும்பங்கள் - 1200 எண்டு வீரகேசரி எழுதுது- அகதியாய் போயிருக்கினம். கனபேரைக் காணவேயில்லையாம். போர் நிறத்தம் பேச்சுவார்த்தை எண்டு ஒரு பக்கத்தில கதை விட்டுக் கொண்டு மற்றப் பக்கத்திலை பெரிய பிளானோடை சண்டைக்கு ஆயுத்தம் நடக்குது. ஏற்கனவே எக்கச் சக்கமான 'சாமான்கள்' கொண்டந்து பலாலியிலை இறக்கியிட்டாங்கள்.

எஸ்ஸேசி - ஓ- இப்ப அது ஜிசிஈ எல்லே - சோதினை நடக்க எண்டு அனுமதிக்கிற எண்டுபோட்டு சோதினை எழுதிற பரீட்சை நிலையங்களுக்கு செல் அடிச்சாங்கள். பண்டிவிரிச்சானிலை 89 பெடியங்கள் காயப்பட்டு சோதினை குழம்பியிட்டுது. பிறகு அதுகள் இரவு பெற்றோமாச் வெளிச்சத்திலை சோதினை எழுதிச்சுதாம்.

இந்த லட்சணத்திலை இருக்குது தேசம். இந்தியா சாக் மாநாட்டை நடக்காமல் பின்போடப் பண்ணி இலங்கையையும் பிரேமதாஸவையும் அவமதிச்சுப் போட்டுதெண்டு இஞ்சை கனக்கப் பேருக்குப் புழுகு. எங்கடை தமிழ்க் கட்சியளுக்குந் தான். ஆனால் வெளியிலை காட்டிக் கொள்ளேல்லை.

---

ஒரு நாள் மாநாடு நடத்தி இவங்கள் என்ன கோதாரிதான் பேசினாங்களோ தெரியேல்லை. எல்லாம் சுத்தப் பேய்க்காட்டல். பிரேமதாஸவின்ரை சாக் மாநாடு முடிஞ்சபிறகு அறிவிச்ச அறிக்கை வழமைபோலை பயங்கரவாதத்தை ஒழிக்க ஒத்துழைப்பு எண்டு சொல்லிச்சுது.

பயங்கரவாதத்தைத் துவக்கி வளர்த்து விடுகிற இவங்களே பயங்கரவாதம் பற்றிக் கதைக்கிறது சிரிப்புத் தான். இதைப் புலிகளும் மற்ற எங்கடையளும் எப்ப விளங்கிக் கொள்ளப் போகுதுகளோ?

**இன்னும் வரும்**

---

நடந்த கதை-1

பதினைந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு மாக்ஸிய சித்தாந்த சிங்கள ஏட்டின் ஆசிரியரை ஒரு இளைஞர் சந்தித்தபோது அந்த ஏட்டில் அவர் எழுதுகிற விஷயங்களை விளங்குவது கஷ்டமாக இருப்பதாகக் குறை சொன்னார். ஆசிரியர் அந்த இளைஞரிடம், "தோழரே, இந்தக் கட்டுரைகள் சிந்திக்கத் தெரிந்தவர்கட்காகவே எழுதப்படுகின்றன" என்று இளக்காரமாகச் சொன்னார். இளைஞர் அதைப் பொருட்படுத்தாது, "சரிதான் தோழரே, சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு எல்லாமே விளங்கும். பிறகு நீங்கள் ஏன் எழுதவேண்டும்?" என்றார். ஆசிரியர் திகைத்துப் போனார். அடுத்த இதழிலிருந்து கட்டுரைகள் ஓரளவு எளிமையாக இருந்தன. -SJ-

நடந்த கதை-2

கலாநிதி 'X' தன்னை மாமேதை என்றே நினைப்பவர். அவருடைய கருத்தில் மாக்ஸ் ஓரளவு முக்கியமான மெய்யியலாளர் (அதாவது தத்துவ ஞானி). ஒரு மாணவர், மாஓ சேதுங்கின் 'மெய்யியல் தொடர்பான நான்கு கட்டுரைகள்' பற்றி அவரது கருத்தைக் கேட்டபோது அவர், "அவை வெகு சராசரிப் படைப்புகள்" என்றார். மாணவரோ விடாப்பிடியாக ஏன் அவர் அவ்வாறு நினைக்கிறாரென்று கேட்டார். கலாநிதி 'X' மிகுந்த பெருமையுடன் "அந்தக் கட்டுரைகளை எல்லாராலும் வாசித்து விளங்கிக் கொள்ள முடியும்' என்றார். மாணவர் மனதுக்குட் சிரித்துக் கொண்டார். -SJ-



படிப்பகம்

www.padippakam.com



# மிஸிஸிப்பிமசாலா

## இயக்குனர் மீரா நாயருடன் ஒரு நேர்முகம்

*சந்திப்பு: அன்'றியா ஸ்ருவட் (Andrea Stuart)*

*தமிழில் மு.நித்தியானந்தன்*

மிஸிஸிப்பி மசாலா என்ற தனது புதிய திரைப்படத்தை "பனித்துளிக்குள் ஒரு காவியம்" என்று ஆசையாய் வர்ணிக்கிறார் இயக்குநர் மீரா நாயர். 6 மில்லியன் டொலர் செலவில் 79 உரையாடற் காட்சிகளுடன் உகண்டா, ஐக்கிய அமெரிக்கா என்று இரண்டு கண்டங்களில் மிஸிஸிப்பி மசாலா படமாக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆசிய இளம் பெண்ணுக்கும் ஆபிரிக்க அமெரிக்கர் ஒருவருக்கும் இடையில் ஏற்படும் காதல் விவகாரம் பற்றிய கதை இது. 1988இல் Cannes திரைப்பட விழாவில் சிறந்த கமராவிற்கான விருதைப் பெற்றுக் கொண்ட இவரது முதலாவது திரைப்படமான 'சலாம் பம்பாயை' விட உன்னதமான படத்தை 'மிஸிஸிப்பி மசாலா'வில் தரப்பார்த்திருக்கிறார் மீரா.

"சலாம் பம்பாயைத் தயாரித்தபோது அந்தப் படத்தை லண்டனிலுள்ள 'லெஸ்ரர்' சதுக்கத்தில் காட்டக்கூடிய அதே நேரத்தில் இந்தியாவில் ஒரு சின்ன ரவுணிலும்கூட அதனைத் திரையிட முடியும் என்பதே எங்களுக்கு அப்போது பெருமிதமாக இருந்தது. ஆனால் திட்டவட்டமான சர்வதேச ரசிகர்களை மனதில் வைத்துக்கொண்டுதான் மிஸிஸிப்பி மசாலா தயாரிக்கப்பட்டது" என்கிறார் மீரா.





**FILMOGRAPHY**

1979: Jama Masjid Street Journal (docu)
1982: So Far from India (docu)
1985: India Cabaret (docu)
1987: Children of Desired Sex (docu)
1988: Salaam Bombay!
1991: Mississippi Masala

*(லண்டன் திரைப்பட விழாவையொட்டி The Guardian பத்திரிகை Sight & Sound சஞ்சிகையுடன் இணைந்து வெளியிட்ட அநுபந்தத்தில் வெளியானது).*



படிப்பகம்

www.padippakam.com

அடுத்து வரப்போகும் நூற்றாண்டின் சமூக நிலைமைகளைப் பற்றிய அனுமானம்தான் மிஸிஸிப்பி மசாலா என்ற இந்தத் திரைப்படம். இதுகாலவரை 'இனப்பிரச்சனை' என்று சொல்லிக்கொண்டு வந்த படங்கள் எல்லாம், ஸ்பைக் லீயின் Jungle Fever ஆக இருந்தாலென்ன அல்லது அலன் பாக்கரின் Missisippi Burning என்ற சமூக விவரண நாடகமாக இருந்தாலென்ன, கறுப்பு-வெள்ளை இன மக்களின் உறவுகளைப்பற்றியே பேசின. ஆனால் மிஸிஸிப்பி மசாலாவில் கறுப்பு-அதிய (மண்ணிற) சிறுபான்மை இன சமூகங்களுக்கிடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள், பிரச்சனைகளைப்பற்றி தன் பார்வையைத் திருப்பி இருக்கிறார் மீரா.

சரித்திரத்தைச் சரியாக எதிரொலிப்பதற்கு, ஐக்கிய அமெரிக்காவை விடச் சிறந்த இடத்தை மிஸிஸிப்பி மசாலா திரைப்படத்திற்காக இவர் தேர்ந்தெடுத்திருக்க முடியாது. அண்மைக்காலம் வரையில் மீரா நாயர் தனது வாழ்விடமாகக் கொண்டிருந்த நியூயோர்க்கின் சரிபாதிக் குடித்தொகையினர், வெள்ளையரல்லாத இனத்தைச் சேர்ந்தவராவர். ஐக்கிய அமெரிக்காவின் வேறு பதினைந்து பெரிய நகரங்களில் ஐரோப்பிய வழிவந்தவர்களைவிட வெள்ளையரல்லாத சிறுபான்மை



மிஸிஸிப்பி மசாலாவில் டென்ஸில் வோஷிங்டனும் சரிதா சௌத்ரியும்

இனங்களைச் சேர்ந்தவர்களே அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர். அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளை அமெரிக்கரைவிட அமெரிக்கர் அல்லாத சிறுபான்மை இனத்தவரே பெரும்பான்மையினராக இருக்கப்போகிறார்கள். கறுப்பு இனத்தவர்களுக்கு இடையிலான உறவுகளில் நிறபேதங்கள் இன்றுபோல் வேறு எப்போதாவது இவ்வளவு தீவிரங் கொண்டதில்லை.

சிலருக்கு இந்த விபரங்கள் எல்லாம் அவர்கள் ஏற்கனவே கொண்டிருக்கும் விபரீத அச்சங்களை இன்னும் கூட்டுவதாகவே அமையும். ரொம் வொல்ஃப்பின் Bonfire of the Vanities என்ற திரைப்படத்தில் வரும் ஒரு மேயர் ஒரு கட்டத்தில் பின்வருமாறு பேசுவதை நினைவு படுத்திப் பார்க்கலாம். "இன்னும் இது உங்களுடைய ஊர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? கொஞ்சம் கண்களைத் திறந்து பாருங்கள்! உங்களின் பெரியதனத் தோரணையை விட்டுவிட்டு கீழே இறங்கி வாருங்கள். உங்களுக்கு நேர்கீழே ஒரு மூன்றாம் உலகம் இருப்பதைப் பார்ப்பீர்கள்.

பாரதி முகர்ஜி போன்ற அமெரிக்காவில் குடியேறி வாழும் ஆசியர்களைப் பற்றிய சரித்திரத் தொகுப்பாளரைப் பொறுத்தவரையில் நிலைமை பிரகாசமாக இருப்பதாகவே படுகின்றது. "சுரங்கப்பாதை வழியே உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தால் என்னைச் சுற்றி கறுப்பு முகங்களையும், பிறவுண் முகங்களையும்தான் பார்க்கிறேன். அவர்களுடைய முகங்களும் என்னுடைய முகத்தைப் போலத்தான் இருக்கிறது. எனக்கு இது சந்தோஷமாக இருக்கிறது என்கிறது அவருடைய பாத்திரமொன்று.

தான் தயாரித்த 'சலாம் பம்பாய்'யின் வெற்றி தந்த அபாரமான உற்சாகத்தில் ஹொலிவூட் அழைப்புகளைக்கூட மீரா நாயர் நிராகரித்து விட்டார். "எனக்கு வந்த மாமூல் அழைப்புகளைச் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்", என்கிறார் அவர். 1983 ஆம் ஆண்டில் இருந்தே தன் மனதைப்போட்டு அரித்துக் கொண்டிருந்த ஒரு கருத்தை வைத்துக்கொண்டு மிஸிஸிப்பி மசாலா என்ற படத்தை எடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அழைப்புகளைத் தள்ளிவிட்டேன் என்கிறார். "ஆனால் எனது படத்தைப் பற்றிய திட்டத்தை அவர்கள் முன்னால் வைத்தபோது வொல்ஃப் (Wolf) இன் நகர அதிகாரிகளைப்போலவே ஹொலிவூட் நிர்வாகிகளும் இப்படத்தின்மீது தமது அதிருப்தியைத்தான் தெரிவித்தார்கள். "ஏதாவது ஒரு முக்கியமான வெள்ளைக் கதாபாத்திரத்திற்காவது உங்கள் படத்தில் இடந்தர முடியாதா? என்று அவர்கள் என்னிடம் கேட்டனர். தாராளமாக! எனது படத்தில் வரும் எல்லா வெயிட்டர்களுமே வெள்ளைக்காரர்கள்தான் என்று அவர்களுக்கு உறுதியளித்தேன்" என்று சொல்லிவிட்டுக் கேலியாகச் சிரிக்கிறார்.

குறுகியகால இலாபங்களைமட்டும் அடிப்படையாக வைத்துத்தான் அவர்களுடைய பதில் இருந்தது என்று மீரா நாயருக்கு மனதில் பட்டது. இந்தக் கருத்துச் சரிதான் என்பதை Boyz N the Hood, New Jack



படிப்பகம்

www.padippakam.com

City போன்று தொடர்ந்து வந்த திரைப்படங்கள் அடைந்த வர்த்தகரீதியான வெற்றி ஊர்ஜிதம் செய்தது. தன்னுடைய படத்தைப்பற்றி ஸ்ரூடியோக்கள் காட்டிய அச்சத்திற்கும் திகைப்பிற்கும், வசூல் பற்றிய கவலை காரணமா அல்லது வழமையான 'நிற' பாத்திரங்களைக்கொண்ட படங்கள் தற்போது அவ்வளவு பெரிய ஆர்வத்தை ஈர்ப்பதாக இருப்பதில்லை என்ற கிலேசம் காரணமா என்பதைப் பற்றி ஆராயாது அவர்களின் தயக்க மனோபாவத்தையே நல்ல சகுனமாகக் கருதி படப்பிடிப்பில் இறங்கிவிட்டார் மீரா. எதிர்ப்புகளையே சௌகரியமாக ஏற்றுக்கொண்டு வளரப் பழகிக்கொண்டு விட்டேன். நான் ஏதோ சரியாகத்தான் செய்து கொண்டிருக்கிறேன் என்கிறமாதிரித்தான் எனக்குத் தோன்றுகிறது."

எழுபதுகளில் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து ஆசியர்கள் பெருந்தொகையாக வெளியேற்றப்பட்ட சம்பவத்திலிருந்துதான் தனது திரைப்படத்திற்கான கதையை யோசித்தார் மீரா. தனது நீண்டகால சகாவான எழுத்தாளர் சூனி தாராப்பூர்வாலாவைக் கொண்டு இக்கதைக்கான திரைப்படப் பிரதியைத் தயாரித்தார். 1972இல் உகண்டாவில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட லோகா குடும்பத்தின் கதையை இத் திரைப்படம் விபரிக்கிறது. தாய், தகப்பன், மகள் என்று மூவரைக் கொண்ட ஒரு குடும்பம். பதினெட்டு ஆண்டுகள் கழிந்து போகின்றன. மிசிஸிப்பியின் கிறீன்வூட்டில் நெடுஞ்சாலை விடுதியைச் சொந்தமாக வைத்திருக்கும் செல்வந்த இந்தியக் குடும்பமொன்றின் ஏழை உறவினர்கள் என்ற கீழ்மட்ட நிலைக்கு இவர்கள் மூவரும் தள்ளப்பட்டு விடுகிறார்கள்.

உகண்டாவில் தனது காலத்தின்போது ஒரு முற்போக்கு வக்கீலாக இருந்த ஜைமினி லோகா (Roshan Seth) ஆபிரிக்காவைப் பற்றிய கனவுகளிலும்; தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியமைக்காகவும், தனது சொத்துக்களுக்கு ஏற்பட்ட நட்டங்களுக்காகவும் உகண்டா அரசுக்கு எதிராக வழக்குத் தொடரவேண்டும் என்ற நினைப்பிலும், அவர் தனது நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறார். அவருடைய மகள் மீனா அந்த உள்ளூர் நெடுஞ்சாலை விடுதியில் வேலை பார்த்து வருகிறாள். அதிருப்தியிலும் விரக்தியிலும் மூழ்கிப்போன தந்தை, இப்போது தனது மகளைப்பற்றிய லட்சியங்களிலேயே கவனம் செலுத்தி வருகிறார். ஆனால் அவளோ அந்த விடுதியில் தரைவிரிப்புகளைச் சுத்தம் செய்ய வருகின்ற டெமெற்றியஸ் (Denzel Washington) என்ற கறுப்பு இன இளைஞரோடு காதல் கொள்கிறாள். இக் காதல் தொடர்புகள் வெளியே தெரிய ஆரம்பித்ததும் பிரச்சனைகள் கிளம்புகின்றன. ஜைமினி கடந்த காலத்தில் தனக்கு ஏற்பட்டிருந்த இழப்புகளுக்கு நிவாரணம் தேடி ஆபிரிக்கா திரும்புகிறார். மனதுக்குத் தூரமான ஒரு எதிர்கால முடிவைநோக்கி நகர்கிறாள் மீரா.

"சரித்திரத்தின் இந்தக் கட்டத்தில்தான், கறுப்பு இனத்தவருக்கும் பிறவுண் இனத்தவருக்குமான நிறபேத முரண்பாடுகள் பற்றிய கருத்துக்கள் வந்து மோதிக்கொண்டிருப்பதாக எனக்குப் படுகிறது", என்கிறார் மீரா நாயர். எழுபதுகளின் முற்பகுதியில் ஆசியர்களுக்கும் ஆபிரிக்கர்களுக்குமிடையில் விருத்தியடைந்த விரோதம் பற்றி அவர் இங்கே குறிப்பிடுகின்றார். இக்கட்டத்தில் ஆசியர்கள் தனித்து வாழுகின்ற போக்கைக் குறிப்பிட்டு, இவர்கள் ஆபிரிக்காவில் ஒரு 'குட்டி இந்தியாவை' உருவாக்கப் பார்க்கிறார்கள் என்று சில ஆபிரிக்கர்கள் கருதினார்கள். "எங்களை வைத்து நீங்கள் நிறைய இலாபம் அடைந்திருக்கிறீர்கள். ஆனால் எங்களுடைய பிள்ளைகள் உங்களுடைய மகள்களைக் கல்யாணம் செய்ய மட்டும் விடமாட்டீர்கள்" என்று ஆசியர்களை வெளியேற்றும் உத்தரவுகளைப் பிரகடனம் செய்யும்போது இடி அமீன் அறிவிக்கிறார்.

ஐக்கிய அமெரிக்காவில் தென்பகுதியில் நெடுஞ்சாலை விடுதிகளை வைத்து நடத்தும் தொழிலில் ஆசியர்கள் பெருந்தொகையில் குவிந்து வருவதைச் சித்தரித்துக் காட்டுவதில் மீரா அக்கறை கொண்டிருக்கிறார். சரித்திரம் திருப்பியும் பழைய இடத்திற்கு வருவதையே இது காட்டுகிறது. கறுப்பு, வெள்ளை இன மக்களுக்கு மத்தியில், ஆனால் ஒரு வித்தியாசமான பின்னணியில் இப்போது ஆசியர்கள் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் தனது இனத்தை விட்டுவிட்டு இன்னொரு நிற இனத்திற்குள் நுழையும்போது எத்தகைய பிரச்சனைகள் ஏற்படும் என்று ஆராய விரும்பினேன். ஆகவே ஒரு அறிவுபூர்வமான அணுகுமுறையோடுதான் இப்படத்தில் நான் இறங்கினேன். இந்த அணுகுமுறை, அந்நியதேச ஜீவனம், பழைய நினைவுகள், நினைவு ஏக்கங்கள், இடம்பெயர்தற் குழப்பங்கள் - இவை எல்லாவற்றையும் நமது வீடு என்று சொல்லத்தக்க பல அம்சங்களையும் ஆராய இது எமக்கு உதவும் என்கிறார் மீரா.

இந்த நூற்றாண்டின் நீண்டகாலப் பகுதியில் பாரிய கலாசாரக் கரிசனையை ஈர்த்த ஓர் முக்கியமான அம்சமாக நாடுவிட்டு நாடுபெயரும் அனுபவங்கள் அமைகின்றன. ஆனால் 'ஒஸ்கார்' பரிசு பெற்ற Journey of Hope என்ற படத்தில் இடம்பெயர்ந்து வந்தவர்கள் வழமை போலவே பலிக்கடாக்களாக்கவும் அவர்களுடைய சகல செயற்பாடுகளும் அவர்கள் கால்பதித்த சமூகத்தில் எப்போதுமே எதிர் மறையாகவே அமைவதாகவுமே சித்தரிக்கப்பட்டிருக்கும். நம்பிக்கைக்குப் புத்துயிர் ஊட்டுவதாக அல்ல. மன விசாரத்தின் மையமாகவே இது கருதப்பட்டது. ஆனால் இத்தகைய அணுகுமுறை இன்று காலாவதியாகிவிட்டது என்று குடிபுகுந்தோரே தமக்குள் இப்போது நினைக்கத் தொடங்கி விட்டார்கள். 'சாத்தானின் வரிகள்' என்ற தன் நூலை ஆதரித்துச் சல்மான் றுஷ்டி இதுபோலவே பிரகடனம் செய்கிறார்,

"எனது சிருஷ்டி இரு இனங்கள் இணைந்து போவதை - ஒரு இனத்தின் தூய்மை சிதைந்து போவதை - ஒன்றுக்குள் ஒன்று சங்கமிப்பதை - மனித ஜீவிகள், கலாசாரங்கள், சிந்தனைகள், அரசியல், திரைப்படங்கள், பாடல்கள் ஆகிய பல்வேறுபட்ட எதிர்பாராத அம்சங்களின் சேர்க்கையில் இருந்து எழுகின்ற புதிய மாற்றங்கள் - ஆகியவற்றை மகிமைப்படுத்துகின்றது; இது கலப்பில் திளைக்கிறது. சுத்ததூயவாதத்தைப்பற்றி அஞ்சுகின்றது. Melange - ஒரு கதம்பம், ஒரு கூட்டுச் சாம்பார்: கொஞ்சம் அதில்,



படிப்பகம்

www.padippakam.com

கொஞ்சம் இதில்; இப்படித்தான் புதியன உலகிற்கு அறிமுகமாகின்றன. அந்த மிகப்பெரிய அனுகூலத்தை நாடுவிட்டு நாடு பெயரும் தன்மைதான் உலகத்திற்கு அளித்திருக்கிறது. இந்தப் போக்கில் என்னை நான் இனங்காண முயல்கிறேன்."

மீரா நாயரைப்போன்ற இந்த 'புதிய உலகின் திடீர் பிரபல்யங்க'ளுக்கு, நாடுவிட்டு நாடு பெயர்வதென்பது, ஈடுசெய்யமுடியாத நஷ்டத்தைக் கொண்டுவருகின்ற துயரக்கதையாகத்தான் அமையவேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. மிஸிஸிப்பி மசாலாவில், இதுகாலவரை பலிக்கடாக்களாகக் கருதப்பட்டவர்களே கதாநாயகர்களாகிறார்கள். துயரங்களிற் குமைந்து போவதற்குப் பதிலாக இத்தகைய சாம்பார் சூழலில் குடிபெயர்வு நிகழ்வுகள் புதிய சிருஷ்டிகளைப் பிரசவிக்கின்றன. பழைய நினைவு ஏக்கங்களில் மூழ்கிப்போவதற்குப் பதிலாக இவருடைய கதாபாத்திரங்கள் தாங்கள் கஷ்டப்பட்டுப்பெற்ற இந்தப் புதிய இடத்தைநோக்கி நம்பிக்கையோடு முன்னோக்கி நடக்கின்றன.

"ஒரு மசாலாவாக இருப்பதென்பது அல்லது மிக்ஸ் பண்ணுவது என்பதுதான் இன்றைய புதிய உலகின் விதி என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். எங்களில் பலர் ஏதோ ஒரு மொழியில் சிந்தித்து இன்னுமொரு மொழியில் பேசுவதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றோம். இனிவரும் காலங்களில் ஏற்படக்கூடிய கூட்டு என்பது கறுப்பு இனத்தோருக்கும் பிறவுண் இனத்தோருக்கும் இடையிலான கூட்டுத்தான். தென்னாபிரிக்காவைப் பாருங்கள். தங்களுக்கிடையிலான அந்தஸ்து வேறுபாடுகளை மறந்துவிட்டு தென்னாபிரிக்காவின் அரசியல் போராட்டத்தில் இந்தியர்கள் தீவிரமாக இறங்க ஆரம்பித்திருக்கிறார்கள்."


மிஸிஸிப்பி மசாலா திரைப்படத்தைப் பார்க்கும்போது எவ்வளவோ விடயங்கள் இரண்டு இனங்களுக்குமிடையில் பொதுவானதாக இருக்கிறதென்பதும் இரண்டு இனங்களின் மீதும் இயக்குனர் காட்டும் பரிவும் சுவீரிடுகிறது. "நான் இந்தப் போலி மதிப்பீடுகளுக்கு மதிப்புக் கொடுப்பவள் இல்லை; ஆனால் அனுதாபம் இல்லாத வெற்று நிராகரிப்புகளால் ஒரு விதமான பயனும் ஏற்படப்போவதில்லை; எந்த சமூகமும் அல்லது எந்த நபரும் கூடாதவர் என்று காட்டுவதில் எனக்கு உடன்பாடு இல்லை." என்கிறார் மீரா. இந்தத் திரைப்படத்தில் ஓரமாக மங்கலாக வந்துபோகும் பாத்திரங்கள் வெள்ளையர்கள் மட்டுமே. இது பிரக்ஞை பூர்வமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்தான் என்கிறார் மீரா. "வெள்ளைக் கதாபாத்திரங்களே இந்தத் திரைப்படத்தில் தலைகாட்டக்கூடாது என்றுதான் நான் விரும்பினேன். எங்களுக்குச் சொல்வதற்கு வேறு கதைகள் இருக்கின்றன."

இருந்தும் மிஸிஸிப்பி மசாலா வெறும் வர்ணஜாலக் கலவையும் அல்ல. செறிவான கலாசார மோதல்கள். அங்கு மிகுந்துள்ள இந்த பிறவுண்-கறுப்புச் சேர்க்கை பல விமர்சகர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தும் என்று மீரா உணர்ந்திருக்கிறார். Denzel Washington னின் ஆலோசனையையும் அவரைப் படத்திற் போட்டிருப்பதையும் மீறி ஒரு ஆசியப்பெண் என்ற வகையில் ஆபிரிக்க-அமெரிக்க வாழ்க்கையைத் தான் சித்தரித்துக் காட்டியிருப்பதைப்பற்றி எளிதான விமர்சனத்திற்கு உட்படுத்தப்படக்கூடும் என்பதை அவர் தெரிந்துதான் வைத்திருக்கிறார்.

Spike Lee போன்ற இயக்குனர்கள் மத்தியில் இப்படத்தைப் பற்றிய எதிர்வினை எவ்வாறு இருக்கும் என்று பார்ப்பது சுவராஸ்யமானது. இவர்களது திரைப்படங்கள் காட்டும் பிரிந்து போகின்ற தேசியவாதப் போக்குகளுக்கு முற்றிலும் மாறாக மீரா நாயரின் படங்கள் இனங்கள் இணைந்து போவதைப்பற்றியும் இனக்கலப்பு பற்றியும் தீர்க்கமான முன்னோக்கிய பார்வையை முன்வைக்கின்றன.

மீரா நாயரின் திரைப்படங்களில் தூக்கலாகத் தெரியும் அகலுலகத் தன்மை குறித்தும், ஒரு ஸ்தூல வெளியில் இருந்து பிறிதொன்றுக்குப் பார்வையை நகர்த்துவதில் காட்டும் நம்பிக்கையைப் பற்றியும் விளக்கும்போது அவர் நேருவை மேற்கோள் காட்டுகிறார்: "உலக வியாபகமாக இருப்பதற்கு முதலில் உங்கள் மண்ணில் ஆழமாக வேரூன்ற வேண்டும். நான் எனது தளத்தில் ஊன்றி நிற்கிறேன், வேரோடி நிற்கிறேன்".

இந்தியாவின் பின்தங்கிய ஒரிஸா மாநிலத்தில் - 'ஒரு ஒறிஜினல் நாட்டுப்புறமான ரவுணில்' - பிறந்த இவர் 18வது வயதில் ஹவார்ட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இந்தப் பல்கலைக் கழகம்தான் இவருக்கு முழுப் புலமைப்பரிசிலை வழங்க முன்வந்தது. ஆரம்பத்தில் நாடகத்துறையில் ஆர்வங் கொண்டிருந்த இவர் 'ஒக்லஹோமாவின் இன்னுமொரு நாடகத்தயாரிப்பு' பற்றிய பிரச்சனையில் நாடகத்தை விட்டுவிட்டுப்





படிப்பகம்

www.padippakam.com

படமெடுக்கும் துறைக்குள் நுழைந்தார். ஹார்வாட் பல்கலைக் கழகத்தில் படம் தயாரிப்பதென்பது விவரணப் படங்கள் தயாரிப்பதுதான்.

இவர் தயாரித்த விவரணப்படங்கள் மிகப்பலரின் உன்னதமான பாராட்டுக்களைச் சுவீகரித்தன. மான்ஹட்டனில் ஒரு சுரங்கப்பாதை அருகே நியூஸ்ராண்டில் வேலைபார்க்கும் ஒருவன் இந்தியாவில் உள்ள தனது கர்ப்பிணி மனைவியுடன் ஒன்றுசேர்வதற்காகக் காத்துக்கிடப்பதை நன்கு சித்தரிக்கும் ஓர் படத்தையும் இவர் தயாரித்திருந்தார். பம்பாயின் துகில்உரி நடனத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் India Cabaret இவரது இன்னுமொரு தயாரிப்பு. இதுவும் மிஸிஸிப்பி மசாலாவைப்போல சமூக நடைமுறை அவலங்களிலிருந்து எழுந்ததாகும். ஒரு விவரணப் படத்தைத் தயாரித்துவிட்டு, அதற்காகக் 'காத்துக்கொண்டிருப்பது' என்பது விரைவிலேயே இவருக்குப் போரடித்துப் போய்விட்டது. படத்தின் மீதான அதிகாரம் என் கைகளில் இருக்கவேண்டும் என்கிறார் இவர். தனது முதற் படத்திற்கான தூண்டுதலை இந்தியத் தெருக்களிற்தான் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

பம்பாய் வீதிகளில் உழலும் சிறுவர்களின் தாறுமாறான வாழ்க்கையைப்பற்றிய சித்தரிப்புத்தான் சலாம் பம்பாய். கமராவிற்கான சிறந்த விருதோடு மிகச்சிறந்த வெளிநாட்டுப் படங்களுக்கான விருதிற்காக ஒஸ்கார் பரிசிற்கு இது சிபார்சு செய்யப்பட்டிருந்த போதும் மீரா நாயர் எதிர்பார்த்த பணபலத்தை இவருக்கு இது தேடித்தரவில்லை. சலாம் பம்பாயின் வெற்றியோடு நான் திவாலாகிப் போனேன் என்றுதான் சொல்லவேண்டும் என்று விசனிக்கிறார். "என்னை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்றே இவர்களுக்குத் தெரியவில்லை. தென்னாபிரிக்கச் சிறுவர்கள், ஐரோப்பியச் சிறுவர்கள் என்று சிறுவர்களை வைத்து நீங்கள் செய்யக்கூடிய அவ்வளவு கற்பனா ரூபங்களையும் இப் படத்தில் நான் சோதனை செய்து பார்த்திருக்கிறேன்."

பம்பாய்க்கும் மிஸிஸிப்பிக்கும் இடையில் மீரா தனக்குச் சுயாதீனம் இல்லாத ஒரு பின்னணியில் படத்தைத் தயாரிக்கும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருந்தார். இதன் விளைவுதான் அவர் தனது படப்பிடிப்புக்கான ஸ்தலமாக உகண்டாவை அவர் தெரிவு செய்தது. "இதுவரைகாலமும் நிஜரூபமான நம்பகத்தின் ஆதாரத்தில்தான் எனது படங்கள் அமைந்தன. எனது பார்வை வீச்சில் மட்டும் அல்ல அந்த இடத்து மக்களும்கூட அதை நிஜமென அங்கீகரித்தது முக்கியம். ஆபிரிக்காவைப்பற்றிய பெரும்பாலான படங்கள் - அவை எந்த விஷயத்தைப்பற்றியதாக இருந்தாலும் அவை கென்யாவிலும், ஸிம்பாப்வேயிலும்தான் - அது லேசு என்பதால் - படமாக்கப்பட்டன. எனது பாத்திரம் உகண்டாவைப்பற்றித்தான் கனவு கண்டுகொண்டிருக்கிறது என்றால் ஏன் நான் அங்கு போய்ப் படம் எடுக்கக்கூடாது என்று யோசித்தேன். உகண்டாவை விட்டு வெளியேறாமல், மிஞ்சியிருந்த கொஞ்சநஞ்ச இந்தியர்களை படத்திற்கு எக்ஸ்ராவாகப் பாவித்தோம். அவர்களது சொந்த சரித்திரத்திற்கு மீண்டும் ஒரு புத்தாக்கத்தை நாம் கொணர்ந்து சேர்த்ததற்கு அவர்களே சாட்சியாய் அமைகிறார்கள். இந்தப் படத்தைப் பற்றிய அவர்களின் அபிப்பிராயங்கள்தான் நாங்கள் சரியான பாதையில் இருக்கிறோம் என்பதை எங்களுக்கு உணர்த்தியது".

தனது படம் தத்ரூபமாய் அமையவேண்டும் என்பதற்காக உகண்டாவிற்கு இவர் மேற்கொண்ட விஜயம் இவர் எதிர்பார்த்ததைவிடக் கூடிய நன்மைகளைத்தான் இவருக்குத் தந்திருக்கிறது. இங்குதான் இவர் தனது கணவனைச் சந்திக்கிறார். "நான் ஏற்கனவே அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். அவர் ஒரு அரசியல் எழுத்தாளர், ஆராய்சியாளன். உகண்டாவில் இருந்து ஆசியர்கள் வெளியேற்றப்பட்டதைப்பற்றி ஓர் உணர்ச்சிகரமான நூலை இவர் எழுதியிருக்கிறார். நான் உகண்டாவைப் போய்ச்சேர்ந்ததும் இருவரும் சந்தித்துக் கொண்டோம். அவரோடும் அந்த நாட்டோடும் நான் காதல் கொண்டுவிட்டேன்", என்கிறார். கிரமமான படப்பிடிப்பிற்கு அவ்வளவு லாயக்கில்லாத நாட்டில் வேலை செய்வதானாலும் சரி அல்லது பின்னாளில் சினிமா நட்சத்திரங்களாக மாறக்கூடிய அல்லது மாறிவிட்ட தெருவழிச் சிறுவர்களோடு படப்பிடிப்பில் ஈடுபடுவதானாலும் சரி அவர் அந்தத்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வசதிகளை ஆக்கிக்கொண்டு சௌகரியமாக இருந்து விடுகிறார். இது பெரும்பாலான ஹொலிவூட் இயக்குனர்களுக்குச் சரிப்பட்டு வராது. உண்மையில் அமெரிக்காவில் படம்பிடிப்பது என்பது பெரும்சோதனைதான் என்கிறார். "உகண்டாவில் படம்பிடிப்பது என்பது மிகச் சௌகரியமாக - சுளுவாக இருக்கிறது. சனக்கூட்டத்துக்குள்ளிருந்து யாரையாவது ஒருவரைப் பிடித்து 'யோவ்! சிவப்பு சேட், உன்னைத்தான் கொஞ்சம் முன்னுக்கு வா' என்று கூப்பிட்டு படம் எடுத்துவிடலாம். அமெரிக்காவில் இது சரிவராது. படத்தில் உங்கள் பிறேமுக்குள் வந்து விழுகிற ஒவ்வொரு காருக்கும் மணித்தியாலத்தைக் கணக்குப் பார்த்து காசைக் கொட்டியாக வேண்டும். ஒரு பட பிறேமுக்கு உயிர் கொடுப்பதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடுகின்றது".

முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் பல கறுப்பு இயக்குனர்களைப் போலவே இவரும் பொதுவான திரைப்பட ஓட்டத்திற்கு வெளியே தனது சொந்தத் தயாரிப்புகளில் ஈடுபடுவதில் மகிழ்ச்சியடைகிறார். 'புதிய கறுப்புத் திரைப்படப்' பதாகைக்குள் உங்களையும் ஒருவராகக் கருதிக்கொள்கிறீர்களா?" என்று நான் கேட்டதும் அவர் சற்றுத் துணுக்குற்றதுபோல் தெரிந்தது. "நான் இன்னும் அதைப்பற்றி யோசிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். என்னுடைய தயாரிப்பின் போக்குகளை இன்னும் நான் நுணுக்கமாக வரையறுத்துக் கொள்ளவில்லை. நான் எங்கேயாவது என்னைஅடையாளங் காட்ட விரும்பினால் பிரதான திரைப்படப் போக்கினைவிட அவர்களோடு இனம் காணப்படுவதையே விரும்புவேன் என்கிறார்.

Martin Scorsese இல் இருந்து, Jane Campion இலிருந்து ஆபிரிக்க நாவலாசிரியர்கள் வரை ஒவ்வொரு துறையிலும் சிறந்த சாதனை படைத்தவர்கள் எல்லாருமே இவருக்கு ஆதர்ஸங்கள்தான். கறுப்பு படத்தயாரிப்பாளர்கள் பலரும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் இவருக்கும் இருக்கிறது. உதாரணமாக கறுப்பு, பிறவுண் நிறக்



படிப்பகம்

www.padippakam.com

கதாபாத்திரங்களைப் படம் எடுப்பதில் ஏற்படக்கூடிய சிக்கலான பிரச்சனைகள் பற்றி திரைப்படக்காரர்கள் அவ்வளவாக அதைப் பொருட்படுத்தியது கிடையாது. ஹொலிவூட் திரைப்படத் தயாரிப்பு நுட்பக்கலையானது ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு வாகாகவே உருவகிக்கப்பட்டது என்ற உண்மையை யாருமே கேள்விக்கு இலக்காக்கியதில்லை. கறுப்பு நிறங்களில் ஒளிப்பதிவு என்பது ஒரு பெரும் சவால்தான் என்கிறார் மீரா நாயர்.

எனது திரைப்படத் தயாரிப்புக் கலைஞர் Ed Lachman எவ்வாறு ஒளிப்பதிவு செய்வது என்பது பற்றி முன்னேற்பாடாகவே பல சோதனைகளை செய்து பார்த்து விடுவதால், எனது கதாபாத்திரங்கள் படங்களில் மிகவும் தத்ரூபமாகக் தெரிகிறார்கள். காதல் காட்சிகளைப் பொறுத்தவரையில் ஒரே நிறத்தில் பல சாயல்களைக் காட்டுவதுபோல் அமையவேண்டும் என்று நான் விரும்பினேன். அப்போதுதான் அந்த இரண்டு நிறங்களினதும் பாலியல் மென் உணர்வுகள் விசேடமாக வெளிப்படுத்தப்பட முடியும்.

ரோஷான் சேத்



மிஸிஸிப்பி மசாலா இருவேறு இனங்களின் கலப்பின் விளைச்சலை ஒவ்வொரு பரிணாமத்திலும் வெளிப்படுத்துகின்றது. இந்தத் திரைப்படத்தின் இசை, காட்சிகள், ஏன் நடிகர்கள்கூட பல்வேறு பாரம்பரியங்களைச் சார்ந்தவர்கள்தான். ஷர்மிளா தாகூரைப் போன்ற சிலர் இந்திய இசைத்துறையில் இருந்து வந்தவர்கள். ரோசான் சேத் என்பவர் றோயல் ஷேக்ஸ்பியர் கம்பனியைச் சேர்ந்தவர். டென்ஸில் வாஷிங்டன் போன்ற சிலர் ஹொலிவூட் திரையுலகைச் சார்ந்தவர்கள். இதைவிட சரிதா சௌத்திரி போன்றவர்களும் இருக்கிறார்கள். இவர் இதற்குமுன் எந்தப்படத்திலுமே தோன்றியிராதவர். இதிலே சாதனை என்னவென்றால் இவர்கள் அனைவரையும் ஓர் இழையில் இணைத்து அதே நேரத்தில், அவர்களது தனித்துவக் கூறுகளைப் பாவித்து ஒருங்கிணைந்த உண்மையான ஒரு உலகைச் சிருஷ்டிப்பது தானே தவிர, A Passage to India வில் வரும் Alec Guinness ஐப்போல முழுமையற்ற இந்தியர்களாக உருவாக்குவதல்ல.

இப்போது எட்டுமாதக் கர்ப்பிணியாக இருக்கும் மீராவுடன் இந்த நேர்முகத்தை முடித்துக்கொள்ளும் போது தனது 'வாழ்விடத்தைப்'பற்றி ஒளிவு மறைவின்றிச் சொல்வதானால் அது ஒரு 'இடமாறிக் கொண்டிருக்கும் உலகம்'தான் என்கிறார். நம்மில் பலரைப்போலவே எங்கோ ஓரிடத்தில் 'தரித்து நிற்க' விரும்புகிறார். அவருடைய சொந்தப் படத்தில் வரும் கதாபாத்திரத்தைப் போலவே நியூயோர்க்கிலிருந்து தப்பி வெளியேறியிருக்கும் இவர் தொழில் பூர்வமாயும் தனிப்பட்ட முறையிலும் தனது எதிர்காலத்தை கடந்த காலத்திற்குட்தான் கண்டுபிடித்திருக்கிறார். தன்னுடைய அடுத்த படம் இந்தியாவின் கடந்தகால - ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முற்பட்ட காலத்திய, பிரமாண்டமான திட்டம் என்று மட்டும் சொல்கிறார். தனிப்பட்ட வாழ்க்கையைப் பொறுத்தவரையில் உகண்டாவில் மிஸிஸிப்பி மசாலா படம் தயாரிக்கப்பட்ட அதே வீட்டிற்கு கணவரோடும், பிறக்கப்போகும் குழந்தையோடும் திரும்பியிருக்கிறார் மீரா.

சிவப்பு ஓடுகள் கொண்ட கூரையும் அடர்ந்த மாந்தோப்புகளும் இந்தியாவில் தனது பால்ய காலத்தை நினைவிற்குக் கொண்டுவருவதாக ஆசையோடு கூறுகிறார். ஆமாம், தனது 'வீட்டில்' இருப்பதைப் போன்ற உணர்வு அது.

Tamil TIMES

ANNUAL SUBSCRIPTION
UK / India / Sri Lanka . . . £ 10 / US $ 20
All other Countries . . . . . £ 15 / US $ 30

Published by
TAMIL TIMES LTD

P.O.BOX 121
SUTTON, SURREY SM1 3 TD
UNITED KINGDOM



படிப்பகம்

www.padippakam.com

# சிவரமணியின் மூன்று கவிதைகள்




## யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்.

யுத்தகால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்

ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதிதோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர்நிறைந்த
அவர்களின் சிரிப்பின்மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்,
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களல்லாது போயினர்

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக்குழந்தைக் கதைகளினதும் அர்த்தத்தை
இல்லாதொழித்தது

எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங் கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்து போனார்கள்.

அதன் பின்னர்
படலையை நேரத்துடன் சாத்திக்கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை இனம் காணவும்
கேள்வி கேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்
மந்தைகள்போல் எல்லாவற்றையும்
பழகிக் கொண்டனர்.

தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.

யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
"வளர்ந்தவர்" ஆயினர்.

●

புத்திசாலித்தனமான
கடைசி மனிதனும்
இறந்து கொண்டிருக்கிறான்....

கேள்வி கேட்பதற்கான
எல்லா வாசலும் அறையப்பட்ட பின்னர்
இருட்டின் உறுதியாக்கலில்
உங்கள் குழந்தைகளை விட்டுச் செல்லுங்கள்
அவர்களுக்குப் பின்னால் எதுவுமே இல்லை
சேலைகட்டிக் காப்பாற்றிய
சில நாகரிகங்களைத் தவிர....

வினாக்களுக்குரிய விடைகள் யாவும்
அச்சடிக்கப்பட்டுள்ளன
முடிவுகளின் அடிப்படையில்
வெற்றி பெற்றவர் வரிசையில்
யாரை இங்கே நிறுத்துதல் வேண்டும்?

தேசத்தின் புத்திசாலிகள் யாவரும்
சந்திக்குச் சந்தி
தெருக்களில் காத்துள்ளனர்.

வினாக்களும், விடைகளும், முடிவுகளும்
யாவருக்கும் முக்கியமற்றுப் போனது
"மனிதர் பற்றிய மனிதத்தின் அடிப்படையில்
வாழ்வதை மறந்தோம்" என்பது
இன்றைய எமது
கடைசிப் பிரகடனமாயுள்ளது.

●



படிப்பகம்

www.padippakam.com

மாலைநேரங்களில்
எல்லாச் சுமைகளும் அதிகரித்துப் போய்விடும்

செத்துப்போன பகல்களின் மீது
தவிர்க்க முடியாதபடி
உரசிக் கொண்டிருந்த ஒளியும் வெப்பமும்
சிலேட்டில் கிறுக்கப்பட்ட எழுத்துக்களைப்போன்று
அடையாளமற்று அழிந்து மறையும்போது
எனது மூச்சை
எண்ணி எண்ணி வெளியே விடுவது
நேரத்தைப் போக்க மட்டுமல்ல.

விளக்கின் அருகில்
ஈசல்கள் ஒவ்வொன்றாக விழுந்து இறந்துகொண்டிருந்தன.
எதை எண்ணுவது புத்திசாலித்தனம்-
ஈசல்களையா?
இறந்துபோனவர்களின் கண்களைப்போன்று
விளக்கமற்ற அர்த்தங்களை
விடுத்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களையா?

எனக்கு உண்மைகள் தெரியவில்லை;
பொய்களைக் கண்டு பிடிப்பதும்
இந்த இருட்டில் இலகுவான காரியமில்லை
ஆனால்
பரீட்சைக்குப் புத்தகம் படிக்கும்
என் தங்கையிடம்
உனது பழக்கத்திற்கான
அர்த்தங்களைத் தேடு என்று கூறமுடியாது.

மொத்தத்தில்
எல்லோரும் அவசரமாயுள்ளனர்
என்னிடம்
ஞாபகங்கள் மட்டும் எஞ்சியுள்ளன

வெளியே,
பதற்றமற்று மௌனமாய் நிற்கும்
மரங்களின் நிழல்கள்
கீழே கிழிந்து போயுள்ளன.

தெருவில்
அவலமும் பதற்றமுமாய்
நாய்கள் குரைக்கும்போது
பூட்டப்பட்ட கதவுகளை
மீண்டும் ஒருமுறை சரிபார்த்துவிட்டு
எல்லோரும் தூங்கப்போகும் நேரத்தில்
நான்,
நாளைக்குத் தோன்றுகிற சூரியன் பற்றி
எண்ணமுடியாது.

இரவு எனக்கு முக்கியமானது

நேற்றுப் போல்
மீண்டும் ஒரு நண்பன் தொலைந்து போகக்கூடிய
இந்த இருட்டு

எனக்கு மிகவும் பெறுமதியானது. ●

## அடுத்த இதழில்:

**சிறுகதை:** கலைஞன். ஒரு தெருவோரத்துக் கலைஞன் பற்றிய அனுதாபமான அவதானம் அழகான சிறுகதையாகிறது. எழுதியவர் பேர்லின் வாசியான கருணாகரமூர்த்தி.

**ஈழத்துக்கவிஞர் அறிமுகம்:** 'அலை' ஆசிரியரும் சிறுகதையாசிரியரும், விமர்சகருமான யேசுராஜாவின் கவிதைகள் இடம்பெறுகின்றன.

**சிறப்புக்கட்டுரைகள்:** தமிழீழ விடுதலையும் தமிழ் நாட்டு அரசியலும் பற்றிய இரண்டு விமர்சனக் கட்டுரைகள். எழுதுவோர் சகாதேவன், சிவசேகரம்.

**கவிதைகள்:** கி.பி.அரவிந்தன், ஊர்வசி, இளவாலை விஜயேந்திரன் ஆகியோரது கவிதைகள் உட்படத் தரமான பல.

**சந்திப்பு:** யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சித்திரலேகா மௌனகுருவுடனான கலந்துரையாடல்.

**ஓநாய்களின் கண்ணீர் மழை**

**மாதொருபாகன்**

**வழிப்போக்கன் டயறி**

(இன்னும் பல)



படிப்பகம்

www.padippakam.com



# கோபாலின் ஒருநாள் பங்கர் அனுபவங்கள்

பட்டினி மட்டுமே யாழ் குடாவினுள் அனுமதிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துவிட்டதைக் கோபாலின் குடும்பம் பட்டவர்த்தனமாய் வெளிக்காட்டத் தொடங்கி விட்டது. அதிகாலை எழுந்து கூலிவேலைக்குப் போகவேண்டியிருந்தும் வெறும் சாயந்தான் வயிற்றை நிரப்பக் கிடைத்தது. அப்படியே அனுப்புவதில் தாய்க்கு வருத்தமாயிருந்த போதிலும் அவளால் வேறொன்றும் செய்யமுடியவில்லை.

இரண்டு நாட்களாய் வெட்டிய பங்கர் வேலை இன்றைக்கு முடிந்துவிடும். மத்தியானத்துக்குள் முடித்துக் கூலிக்காசை ரொக்கமாய் வாங்கிவந்து விடலாம் என்று நேற்றே கோபால் தாயிடம் சொல்லியிருந்தான். அந்தக்காசு கையில் கிடைத்ததும் தரப்போகிற தேநீரையும் சாப்பாட்டையும் பற்றிய வாக்குறுதியைத்தான் அவளால் இப்போது தரமுடிந்தது.

கோபாலுக்கு காலையில் வயிறு நிறையாவிட்டாலும் மத்தியானம் சந்தோசமாய் அம்மாவுடனும் தம்பியர் தங்கையருடனும் சாப்பிடக் கிடைக்கும் வாய்ப்பினால் ஏற்பட்ட மனநிறைவு திருப்தியைத் தந்தது.

புறப்படும்போது வேலை முடிந்ததும் நேராக வீட்டுக்கு வந்துவிடும்படி சொல்வதற்குத் தாய் மறக்கவில்லை. அவன் வேலைசெய்கிற வேளைகளில் திடீர்திடீரென ஊருக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் 'பங்கர்' வெட்ட இளைஞர்களைப் பிடித்துச் செல்வதைப்பற்றி ஒவ்வொரு நாளும் கூறியிருக்கிறான். நண்பர்களும் சொல்லியிருக்கிறார்கள் — சிலர் பிடிபட்டு பகல் இரவு தொடர்ச்சியாக பங்கர் வெட்டிக் களைத்து வந்ததையும், அவர்கள் அங்குள்ள பயங்கரச் சூழலை வர்ணித்ததையும் கேட்டிருக்கிறான்.

எப்படியும் பிடிபடாமல் தன்னால் வந்துவிட முடியுமென்று தாய்க்கு வீறாப்புக் கூறிவிட்டுப் புறப்பட்டான் கோபால். பங்கர் வெட்டுகிற வீடு அதிக தூரத்தில்



படிப்பகம்

www.padippakam.com

இல்லை. நடந்துபோக முடிந்தது. அவன் போய்ச் சேருமுன் ஏனைய நாலு பேரும் வந்து விட்டார்கள். இன்றைக்கு 'ட' வடிவில் வெட்டிவிட்ட பங்கர் கிடங்கின்மேல் பனங்குற்றிகளை அடுக்கி, மேலே மண்மூட்டைகளை வைப்பது மட்டுமே வேலை.

சில நாட்களாக ஒரு நேரம் மட்டும் சாப்பிடுவதால் இந்தக் குறைந்த வேலைகூட கோபாலுக்குக் களைப்பைத் தந்தது. வீட்டுக்காரர் சாயத்தோடு தொட்டுக் குடிக்கச் சீனியும் தந்தார்கள். அதுவும் மற்ற நால்வரின் கூட்டும்தான் உற்சாகமாக வேலைசெய்ய உதவியது.

பதினொரு மணிக்குள் வேலையை முடித்துக்கொண்டு, கிடைத்த கூலிக்காசைப் பாகம் பிரித்துப் பெற்றுக் கொண்டு வீடுநோக்கி நடந்தான் கோபால். மற்ற நாலுபேரும் அவனைவிட வயதாளிகள்.

"நாளைக்கு எங்கையன் வேலை கிடைக்குமோ எண்டு நீதான் தேடவேணும். கிடைச்சா இருட்டமுந்தி வந்து சொல்லிப்போடு", என்று கோபாலுக்கு உத்தரவு பிறப்பித்து வழியனுப்பி வைத்தார்கள்.

வாசிகசாலையில் தம்பியைக் கண்டு, காசை அவன் மூலம் அம்மாவுக்கு அனுப்பிவிட்ட திருப்தியுடன், கொஞ்சநேரம் சிநேகிதர்களுடன் கதைத்துப் பொழுதுபோக்கும் எண்ணத்தோடு வாசிகசாலையினுள் சென்றான். சற்று ஆறிப் பின்னர் வீட்டுக்குப் போனால் ஒரு தேனீர் குடித்து, பிறகு முழுநாளுக்குமான சாப்பாட்டையும் முடித்து, நாளைய கூலிக்கு இடம்தேடியலையலாம்.

பதினாறு வயதில் குடும்பத் தலைவனாகிவிட்ட அதிர்ஷ்டக்கட்டை அவன். தகப்பன் இறந்தபின் ஆறேழு மாதங்களாய் முழுநேரத் தொழிலாளியாகி விட்டான். இந்த இரண்டு மாதங்களுக்கு முன்வரை வரவு நியாயமாய்க் கிடைக்கக்கூடியதாய் நிறைய வேலைகள் தேடிவந்தன. இப்போது சிலநாட்களாக எவ்வளவு தேடியும் யாரும் வேலை தரத் தயாராயில்லை. கூலி தரக் காசிருந்தாற்தானே வேலை தரமுடியும். ஆங்காங்கே சிலர் பதுங்கு குழி வெட்டக் கூப்பிடுவதுண்டு. உடம்பு மிகவும் அசதியாயிருந்தது. பேப்பரைக் கையிலெடுத்துக் கொண்டு சுவரோரமாய் நடந்தான். அலுப்புத்தீரும்படி நிலத்தில் குந்தியிருந்து சுவரில் ஒருக்களித்துச் சாய்ந்திருந்தான். நண்பர்கள் எல்லோரும் பேப்பர்களில் முகங்களைப் புதைத்திருந்தனர். வெளிவந்தால் பலவகைப் புதினங்களில் இறங்கி விடுவார்கள். கோபாலுக்குப் பேப்பர் படிப்பதைவிட அவர்களோடு சேர்ந்து புதினங்களைப் பரிமாறுவதில்தான் அலாதிப் பிரியமென்றாலும் மற்றவர்கள் வாசிப்பதை குழப்புவதற்கு அவன் விரும்பவில்லை. படிக்கிறேன் பேர்வழியென்று கண்களைப் பத்திரிகையில் மேயவிட்டால் கண்கள் சொருகிக்கொண்டு வந்தன. உள்ளே சிறுகுடலைப் பெருங்குடல் சற்றுநேரத்தில் கபளீகரம் செய்துவிடுமென்று தெரிந்தது.

எவ்வளவுநேரம் தன்னை மறந்த கிறக்கத்தில் இருந்தோம் என்பது அவனுக்குத் தெரியாது. எல்லோரும் வாங்குகளைத் தள்ளி விழுத்திக்கொண்டு வெளியே வேகமாக ஓடினர். யாரோ அவனையும் தட்டி எழுப்பியிருக்க வேண்டும். கஷ்டப்பட்டு விழித்தவன் அவர்களுக்குப் பின்னால் சேர்ந்தோடினான். "ஊரோடில் ஒத்தோடு, ஒருவனோடினால் கேட்டோடு" என்பதில் பின்பகுதி நடவாதபோதிலும், ஓடும் நதியில் எல்லோரும் கலப்பதில் மட்டும் தவறுவதில்லையே - கோபாலும் விதிவிலக்கில்லை.

லொறியொன்று வாசலில் வந்து நிற்பதற்குள் அவன் வாசலைக் கடந்துவிட்டான் என்றாலும் மற்றவர்களுக்கு ஈடு கொடுத்து ஓடமுடியவில்லை. இவர்கள் வாசிகசாலை ஓட்டப்போட்டியில் இவ்வளவு வேகமாய் ஓடக் கண்டதில்லையே என்று வியந்துகொண்டே, முடிந்தவரை தானும் வேகமாய் ஓடினான் கோபால். அதற்குள் லொறியிலிருந்து ஓடிவந்தவர்களில் ஒருவன் இவனைப் பிடித்துவிட்டான். மற்ற இருவரும் ஏனையவர்களைப் பிடிக்க முடியாதென்றறிந்து திரும்பி விட்டார்கள்.

தவறவிட்டவர்களை இழந்த கோபத்தை மூன்று பேரும் கோபால்மீது சாதித்தார்கள். கன்னங்களிலும், முதுகிலும், வயிற்றிலும் போதியளவுக்குச் சாத்தினார்கள். லொறியைக் கண்டபோதே கோபாலுக்கு ஓரளவு புரிந்து விட்டது. லொறி முன்சீற்றில் துப்பாக்கியுடன் ஒருவரைக் கண்டதும் முழுமையாய் ஊர்ஜிதமாயிற்று. "பங்கர் வெட்ட முறையாய் மாட்டுப்பட்டோம்".

அண்ணை, அடியாதையுங்கோ, நான் வாறன் அண்ணை", என்று கெஞ்சினான். இனி இவன் சம்மதம் கேட்டுத்தான் கூட்டிப் போகப்போகிறார்களா? அதற்குள் அவனுடைய தாய் கேள்விப்பட்டோ என்னவோ ஓடி வந்து விட்டாள்.

"ஐயோ! ராசாக்கள் அடியாதையுங்கோ. காலமை ஒரு சாயத்தோட கூலிக்கு பங்கர் வெட்டப் போனவன். இப்ப ஒரு தேத்தண்ணி குடிச்சவிட்டு வரட்டுக்கு, விடுங்கோ. கட்டாயம் கூட்டியாறன்".

"இஞ்சாய், அந்த இந்தக் கதை வேண்டாம். தள்ளிப்போ. போராட்டத்தக்குத்தான் விடமாட்டியள், கடைசி இந்த வேலைக்கெண்டாலும் விடமுடியாதோ? வேலைக்குக் கூட்டவந்தா ஓடிவந்துவிடுவியள், மீட்டுக்கொண்டு போக".

கோபால் லொறியினுள் தள்ளப்பட்டான். ஏற்கனவே வேறிடங்களில் ஏற்றப்பட்டவர்கள் புதிய நண்பரை வரவேற்றார்கள். லொறி உறுமிக்கொண்டு ஓடியது. ஆங்காங்கே நின்று ஒரு சிலரை உள்விழுங்கியது. மெயின் றோட்டில் ஏறிய பிறகு நல்ல வேட்டைதான். ஆரம்பத்தில் பயந்தது போலில்லை - உள்ளே வந்த கொஞ்ச நேரத்தில் எல்லோரும் குதூகலமாகி விடுகிறார்கள். பாடத் தெரிந்தவர்கள் விடுதலைக் கீதங்கள் இசைத்தனர். கோபாலும் உற்சாகத்தோடு கை தட்டித் தாளம் போட்டான்.

லொறி நின்றதும் எல்லோரும் குதித்து இறங்கினார்கள். சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது நேரிய பாதை. அங்கே தனித்திருந்தது அந்தப் பாடசாலைக் கட்டிடம். அதைச்சுற்றிலும் ஊடறுத்தும் கோலம் போட்டதுபோல ஏற்கனவே வெட்டப்பட்ட பதுங்குகுழி ஒடைகள்.

இறங்கிய அனைவரையும் பங்கர் பொறுப்பாளி மகிழ்வோடு வரவேற்றார். நல்ல பால் தேநீர்



படிப்பகம்

www.padippakam.com

கிடைத்தது. அப்படிக் குடித்து ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. மிகவும் மகிழ்வோடு கோபால் மண்வெட்டியைத் தூக்கினான். தன்னைப்போல் இளைஞர்கள் மட்டுமன்றி பல வயதுக்காரர்களும் அங்கே வேலை செய்துகொண்டிருப்பதை அவதானித்தான். அநேகமாக எல்லோரும் வெறுப்புக் காட்டாமல் மகிழ்வுபொங்க வேலை செய்து கொண்டிருந்தார்கள். பலர் கூடி, ஆடிப்பாடி வேலை செய்வது அளவற்ற ஆனந்தம் என உணர்ந்தான் கோபால்.

பொங்கிப் பிரவாகித்த அந்தக் குதூகலம் அதிக நேரம் நீடிக்கவில்லை. திடீரென்று 'ஷெல்' வந்து விழுந்து காது செவிடு படும்படி பேரிரைச்சலோடு வெடித்தது. கோபாலும் அவனோடு லொறியில் வந்த இளைஞர்களும் பெரிதும் பதகளித்து விட்டார்கள்.

ஏற்கனவே அங்கு நின்று வேலை செய்து கொண்டிருந்த பழையவர்களும், அங்கு நின்ற ஓரிரு துப்பாக்கி இளைஞர்களுந்தான் உடனடியாக ஆகவேண்டியதைக் கவனித்தார்கள். எல்லோரையும் ஏற்கனவே வெட்டிய பங்கருள் படுக்கச் சொல்லி வழிப்படுத்தினார்கள். படுத்த அந்தக் கணத்தில் மீண்டும் ஒரு ஷெல். ஏறத்தாழ அரை மணித்தியாலத்துக்கு ஒரே பதட்டம். ஐந்தாறு ஷெல் பெரும் முழக்கத்தோடு வெடித்துக் கதிகலக்கி விட்டது.

பெருஞ் சூறாவளி வடிந்து விட்டதுபோல் ஷெல் தாக்குதல் ஓய்ந்த பின்னர்தான் எல்லோரும் எழுந்து கொண்டார்கள். பங்கர் பொறுப்பாளி வந்து வேலைக்கு உற்சாகப் படுத்தினார். பழையவர்கள் அச்சத்துடன் "ஒருத்தருக்கும் ஒண்டுமில்லையோ?" என்று கேட்டபோது பங்கர் பொறுப்பாளி சென்றியில் நின்றவருக்கு பட்டுள்ள சிறுகாயம் என்று சாதாரண விடயம்போல் கூறினார். ஜீப் ஒன்று சீறிக்கொண்டு விரைந்தது. காயப்பட்டவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகிறார்கள் போலும்.

அரை கிலோமீற்றர் தூரத்துக்குள் வடமாகாணத்திலேயே அதிபலம் வாய்ந்த இராணுவ முகாம். அதற்கான இராணுவ 'சென்றி' சில நூறு மீற்றர் தூரத்துக்குள் உண்டு. இங்கே ஒரு தனித்த பாடசாலைக் கட்டிடத்தொகுதியில் மரணத்தை எதிர் நோக்கியவாறு பங்கர் வெட்டும் இவர்கள். ஹெலி, பொம்மர் இரையும் குரல் கேட்டாலும் பதுங்கி மறைய வேண்டும். ஷெல் மீண்டும் சீறி வந்தால் உடனே பங்கரினுள் படுத்து விடவேண்டும்.

பல தடவைகள் கேள்விப்பட்ட குலைநடுங்கும் மரணச் செய்திகள் கோபாலைப்போல் ஏனையவர்கள் எல்லோருக்குமே அச்சத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். நிசப்தம் மேலும் பயமூட்டியது. குண்டடிபட்டால் உடனே செத்துப்போய்விட வேண்டுமென்றுகூட கோபால் எண்ணினான். அதனால் தன் குடும்பம் நிர்க்கதியாகுமென்று வருந்தினாலும், அதைவிடக் கைகால்களை இழந்து வீட்டுக்குப் பாரமாக இருப்பது ஆக மோசம் என்று நினைத்துக் கொண்டான்.

மீண்டும் வேலையில் உற்சாகமானபோது பதட்டம் கொஞ்சம் தணிந்தது. பழையவர்கள் கோபாலின் சூழலில் வந்த இளைஞர்களின் வேலையை நெறிப்படுத்திக் கொண்ட விதத்தைப் பார்த்த கோபாலுக்கு அவர்கள் கைதேர்ந்த தொழிலாளர்கள் எனத் தெரிந்தது. பழையவர்களின் கவனத்தைப் புதிய இளைஞர்களில் கோபால் மட்டுமே ஈர்த்துக் கொண்டான். அவன் இப்படி எத்தனை பங்கர் வெட்டியிருப்பான்? மற்ற இளைஞர்கள் பாவம், அந்த விஷயத்தில் கன்றுக் குட்டிகள்.

மற்ற இளைஞர்களுக்கு மண்வெட்டவும் கல்லுடைக்கவும் அவசியமான நுட்பங்களைச் சொல்லிக் கொடுப்பதில் மினைக்கெடுவதுபோல், கோபாலுக்கு அவசியமில்லை என்பதால், அவனுக்கருகே நின்ற நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க இராமண்ணை பொதுக் கதைகளில் அவனை வலிந்திழுத்தார். அவனும் தன் குடும்ப நிலையிலிருந்து, அடிவாங்கி லொறியில் ஏற்றப்பட்டதுவரை எல்லாவற்றையும் ஒளிவுமறைவின்றிச் சொன்னான். இராமண்ணைக்கு அவன்மீது விஷேச பரிவு ஏற்பட்டிருந்தது.

சோழப் பெருமன்னர் காலத்தில் அணை கட்டுவதுபோன்ற பொதுவிடயங்களுக்கு கூலியின்றி வேலைசெய்கிற முறை இருந்ததாம். அதை 'வெட்டி' என்பார்களாம். அதனால்தான் 'சும்மா' செய்கிற வேலையை இன்றைக்கும் வீடுகளில் 'வெட்டிவேலை' என்கிறார்களாம். இராமண்ணை சொன்னார்.

இராமண்ணை, ஊத்தை உடுப்போடும், மெலிந்த உடம்போடும், துருத்திய பல்லோடும், ஒடுங்கிய முகத்தோடும் இருந்ததை வைத்து ஒன்றும் தெரியாதவர் என்றெண்ணியிருந்தான் கோபால். அவர் நிறைய விசயங்களைக் கூர்ந்த மதிநுட்பத்தோடு எப்படிச்சொல்ல முடிகிறதென்று அவன் வியந்தான்.

தமிழர் பொற்காலம் என்று சோழப் பேரரசு காலம் போற்றப்பட்டதே அந்த உழைப்பால்தான். இன்றைக்குப் போர்க்காலம். தமிழர் வாழ்வே பறிபோய் விடாமல் இந்த பங்கர் பயன்பட முடியுமென்றால் நாங்கள் ஏன் இந்த வேலையைச் செய்யக்கூடாது. இராமண்ணையின் குழு மாநகரசபைத் தொழிலாளர்கள், தாங்கள் வெறும் கட்டாயம் என்ற அடிப்படையில் இந்த வேலைக்கு வரவில்லை, விஷயங்களைப் புரிந்துகொண்டுதான் வந்தோமென்றார்.

சில நூறு இளைஞர்கள் போராடுவதால் மட்டும் விடுதலை வந்துவிடாது. தொழிலாளர்கள் தலைமையில் மக்கள் போராட்டம் மலரவேண்டும் என்றார். அதெப்பிடி, வெறும் கூலித்தொழிலாளர் நாங்கள் தலைமை தாங்க முடியுமோ என்று முழிபிதுங்கக் கேட்டான் கோபால். உலக வரலாற்றில் இருந்து தங்களுடைய மாநகரசபைத் தொழிற்சங்கப் போராட்டம்வரை பல உதாரணங்களால் முடியும் என்று எடுத்துக்காட்டினார் இராமண்ணை.

மக்கள் போராட்டத்தில் விருப்பத்துடன் ஈடுபடுவார்களா? முழுத் தமிழர்களின் பாதுகாப்போடு தொடர்பான இந்த அவசிய வேலைக்கே அடிபட்டு இழுபட்டுத்தானே வாறோம் என்றும் அவன் கேட்கத் தவறவில்லை. வரலாற்றோட்டம் இப்படிப் போனாலும் மக்கள் போராட்டத்தில் முன்னணியில் தன்னார்வத்தோடு வருவது தவிர்க்க முடியாமல் நிகழுமாம். ஒவ்வொன்றுக்கும் நல்ல சுவையான உதாரணங்கள் நிறையச் சொன்னார். கதைபோல சில, விளங்காத விசயங்களும் பல. விளங்கிய மட்டில் எங்கோ சங்கு முழங்கும் யுத்தகளத்தில் பிரவேசிப்பது போலிருந்தது. நல்ல சண்டைப்படம் பார்த்தது போன்ற திருப்தி கோபாலுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

இன்னும் அறியவேண்டும் என்ற அவன் ஆவலைக் கண்ட இராமண்ணை தன்னை வீட்டில் வந்து சந்திக்கச் சொன்னார். இலகுவில் புரியக்கூடிய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும். கண்டு கதைக்கவேண்டுமென்றும் விரும்பினான். பேப்பர் வாசிப்பதையே வெறுக்கும் கோபால் அவர் சொன்ன புத்தகங்களைப் படிக்க ஆர்வங்காட்டினான். விலாசங்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

ஒன்றரை மணிக்கு சாப்பாட்டுப் பாசல்கள் தரப்பட்டன. பசிக்களை தீர்ந்தால் போதும் என்றிருந்தவனுக்குத் தரப்பட்ட பாசல் சோறு தேவாமிருதம் போலிருந்தது. இறைச்சியும் முட்டையும் மஞ்சள் சோறும் பகலோடு இரவும் நின்று வெட்டலாம் என்ற தெம்பைத் தந்தன. இருந்தாலும் சாப்பிடும்போது அம்மாவையும் தம்பி தங்கையரையும் எண்ணி வருத்தப்பட்டான். இப்படிச் சாப்பிட்டேன் என்று சொன்னாலே அவர்கள் தாங்கள் சாப்பிட்டதுபோல் மகிழ்வார்கள்.

தன்னுடைய உற்சாகத்துக்கு என்ன காரணம் என்று தெரியாமல் அவன் மகிழ்வோடும் நம்பிக்கையோடும் தொடர்ந்து வேலை செய்தான். ஆயினும் மூன்று மணிக்குப் பிறகு ஏனைய தொழிலாளர்கள் இராமண்ணையை நச்சரிக்கத் தொடங்கி விட்டார்கள். மூன்று மணிக்குக் கொண்டுபோய் விடுவதாகக் கூட்டி வந்தார்களாம். ஓவர்ரைம் பதிய நாலு மணிக்கு மாநகர சபையில் நிற்கவேண்டுமாம். ஞாபகப்படுத்தச் சொன்னார்கள். இரண்டொரு தடவைகள் இராமண்ணை பங்கர் பொறுப்பாளிக்குச் சொன்னார். அவரும் சாட்டுக் கூறி நேரத்தை இழுத்தடித்தார்.

கடைசியாகக் கேட்டபோது இராமண்ணைக்குப் பேச்சு விழுந்தது. எப்படியும் ஓவர்ரைம் பதிந்து தருவேன், இனிக் கேட்கவேண்டாம், வெட்டிறதை வெட்டி முடியுங்கள் என்று சொல்லிவிட்டார். நாலரை மணியோடு அதிகாரிகள் காரியாலயத்திலிருந்து வீட்டுக்குப் போய்விட்டால், வீட்டிலிருந்து அவர்களைக் கூட்டிவந்து ஓவர்ரைம் பதிவிப்பேன் என்று வாக்குறுதியும் கொடுத்தார்.

இராமண்ணையால் அதற்குப்பின் உற்சாகமாகக் கோபாலுடன்கூடக் கதைக்க முடியவில்லை. கோபாலுக்கும் தான் பேச்சு வாங்கியதுபோல் தானிருந்தது – தன்னைப் பேசியிருந்தாலும் பரவாயில்லை, பங்கர் பொறுப்பாளிக்குத் தன்னைவிட மூன்றோ நாலோ வயசுகள் கூடவாயிருக்கலாமென்பது அவன் கணிப்பு. தொழிலாளர்கள் மதிக்கும், வயதில் மூத்தவரை, அப்படிப் பேசியிருக்க வேண்டாம் என வருந்தினான் கோபால்.

ஆயினும் விரைவில் தன்னை சுதாகரித்துக்கொண்ட இராமண்ணை மீண்டும் பழையபடி சுவைபடக் கதைக்கத் தொடங்கி விட்டார். கோவபாலுக்கு ஆறுதலாயிருந்தது. இராமண்ணை மாநகரசபை தொழிற்சங்கத் தலைவர் என்பதால்தான் அவர் முன்னுக்குப் போய்க் கதைத்துப் பேச்சும் வாங்கவேண்டியிருந்தது. கோபால் பலவகைப்பட்ட தலைவர்களைக் கண்டிருக்கிறான். இன்றைக்குப் புதிய வார்ப்பில் ஒரு தலைவரைக் காண்கிறோம் என்று தன்னுள்ளே பூரித்தான் கோபால்.

ஐந்தரை மணிக்கு கோபாலை ஏற்றிவந்த லொறியில் இராமண்ணை குழுவினர் ஏற, எல்வ் வானில் கோபால் குழுவினர் ஏற்றப்பட்டனர். ஒரு பொழுது கூடியுழைத்த நினைப்பே இல்லாமல் யுகம்யுகமாய் சேர்ந்திருந்த உறவு தெரிந்தது கோபாலுக்கு. இராமண்ணையை விட்டுப் பிரிவது வருத்தமளித்தது. கட்டாயம் பிறகு வந்து சந்திப்பேன் என்று கூறி விலாசம் வாங்கியதில் திருப்தியாயிருந்தது.

புறப்படத் தயாரானபோது பங்கர்ப் பொறுப்பாளி லொறியை நோக்கிப் போய் "இராமண்ணை உள்ளுக்கிருக்கிறாரோ? ஒருக்கா இறங்குங்கோ" என்றார்.

இராமண்ணை, "ஏன்?" என்று கேட்டுக்கொண்டே இறங்கினார். "பெரியவர் உங்களோடை கதைப்பார். உங்களை ஐஞ்சு நாளைக்கு தொடர்ந்து மறிக்கச் சொன்னவர்" என்றார் பங்கர்ப் பொறுப்பாளி. அவர் போயிருக்கும்படி கூறிய வாங்கை நோக்கி இராமண்ணை நடந்தார்.

அவ்வளவுதான், சொல்லிவைத்ததுபோல லொறியிலிருந்து எல்லாத் தொழிலாளர்களும் குதித்து இறங்கினார்கள். அவரை விட்டால் தவிர நாங்கள் நகரமாட்டோம் என்று நின்றார்கள். அதற்குள் ஒரு ஜீப்பில் பங்கர்ப் பொறுப்பாளி சொன்ன அந்தப் பெரியவர் வந்தார்.

கோபால் எதிர்பார்த்ததுபோல் பெரியவர் வயசாளியல்ல. இளைஞர்தான். கொஞ்சம் மதகளிப்பாய், பார்க்கக் குளிர்ச்சியாயிருந்தார். இருபத்தாறு இருபத்தேழு வயதிருக்கலாம். தொழிலாளர்கள் எல்லோரும் அவரிடம்போய் ஏன் மறித்தீர்கள் என்றபோது அவர் ஒன்றும் புரியாமல் திணறிப்போனார். கேள்விக்குறியோடு பொறுப்பாளியைத் திரும்பிப் பார்த்தார். பொறுப்பாளி பிறகு விளக்குவதாய்ச் சொல்லியும் கேளாமல் "என்ன விசயம்?" என்ற போது, "இராமண்ணை எல்லாரையும் குழப்புகிறார்" என்றார் பொறுப்பாளி.

பெரியவருக்கு எல்லாம் விளங்கியதோ, அல்லது இளகிய மனதோ என்னவோ, இராமண்ணையையும் லொறியில் போகச் சொல்லிவிட்டார். இராமண்ணை நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், திமிர்ந்த ஞானச்செருக்கும், சக தொழிலாளர்கள் கூட்டமும் கூடிவர லொறியை நோக்கி மிடுக்குடன் நடந்தார். முதற் பார்வையில் அவரைப் பலவீனர் என எண்ணிய கோபால் இப்போது அவரை உண்மை வீரர் எனக் கண்டான். மாநகரசபைத் தொழிலாளர்கள் எல்லோரும் வீறாப்புடன் ஏறியதும், லொறி விரைந்தது. - பின்னே சீறிக்கொண்டு 'எல்வ்'.

முச்சந்தியொன்றில் லொறி நேரே செல்ல 'எல்வ்' மேற்கு நோக்கித் திரும்பி விரைந்தது. தன் கண்களிலிருந்து மறைகின்ற அந்த லொறியைக்கூட கோபால் புனிதமுடையதாய்ப் பார்த்தான். லொறி மறைந்தபோதிலும் தன் இதய ஆழத்தில் அது பதிந்து விட்டதை அவனால் உணர முடிந்தது. இராமண்ணை திரும்ப லொறியில் ஏற்றப்படக் காரணமாயிருந்த தொழிலாளர்களும், தான் காலை ஏற்றப்பட்டபோது சிதறியோடிய



படிப்பகம்

www.padippakam.com

நண்பர்களும் கோபால் முன் மாறிமாறி வந்து போயினர்.

'எல்வ்' மெயின் றோட்டிலிருந்து பிரிந்து கிராமத்துக்குள் செல்லாமல், அங்கிருந்து ஏற்றப்பட்ட ஐந்தாறு பேரையும் கோபாலையும் இறக்கிவிட்டு மெயின் றோட்டில் தன் பயணத்தைத் தொடர்ந்தது. மற்றவர்களோடு கதைக்காமலே அன்றைய பொழுதின் அனுபவங்களோடு உறவாடியவாறு நடந்தான் கோபால்.

அவனது சிந்தனையைக் குலைக்குமாறு உறுமிக்கொண்டு வட்டமிட்டது பொம்மர். எல்லோரும் முன்னே தெரிந்த வீட்டை நோக்கி ஓடினர். வீட்டுக்காரர்களும் பங்கரினுள் நுழைந்து கொண்டிருந்தார்கள். 'ட' வளைவினுள் செல்லமுடியாமல் உள்ளே வீட்டுக்காரர்கள்.

வீட்டுக்காரி அழையா விருந்தாளிகள் உள்ளே வந்துவிடக்கூடாதென்பதில் கவனமாக இருந்தாள். மூன்று வயது மதிக்கத்தக்க தன் குழந்தையை நீட்டி நிமிர்ந்து படுக்கவைக்க முயன்றாள். அதன் வாயிலாக கணிசமான இடப்பரப்பை தன் வீட்டுப் பாவனைக்கு ஒதுக்கி வைத்துக்கொள்ள முடியுமென்பது அவளெண்ணம் என்பது விளங்கியது.

குழந்தை எழுந்திருக்க ஒவ்வொரு தடவையும் முயன்று, தாயால் மீண்டும் மீண்டும் சரிக்கப்பட்டது. குழந்தையின் விறிட்டழும் குரல் கோபாலை வருத்தியது. தானுங்கூட, ஏன் முழு மக்களும் அப்படி விரும்பாத ஒரு நிலைக்கு நிர்ப்பந்திக்கப் படுவதுபோலத் திணறினான். அவனது எண்ண அலைகள் அந்தச் சோகச் சூழலோடு ஒருங்கிசைவாய் வேறு பலவற்றையும் சிந்தித்தது. இராமண்ணை சொன்னவையுங்கூட நினைவில் வந்தன.

பொம்மர் எங்கோ அருகில் தன் தாக்குதலை முடித்து விட்டு வட்டப்பாதையை மாற்றி நேராய் விரைந்தது. தங்களை இயக்கிவிட்டுச் சென்ற 'எல்வ்' வானைக் குறிவைத்திருக்குமோ? இல்லையெனில் தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த அந்த லொறியைத்தான் தாக்கியிருக்குமோ? இந்த நினைப்பு கோபாலை ஒரு கணம் துயரிலாழ்த்தியது. அப்படி எதுவும் நடந்திருக்காதென்ற நம்பிக்கையை வளர்க்க விரும்பினான்.

குழந்தையின் தேவையைக் கண்டிப்போடு மறுத்த அந்தத்தாய் தங்களை இறங்கு பாதையிலாவது நிற்க விட்டதற்கு மனதால் நன்றி கூறி மற்றவர்களுடன் பங்கரைவிட்டு வெளியேறினான் கோபால். அவர்கள் வெளியேறிய பின் குதூகலத்தோடு எழுந்து வெளியே பாய்ந்து வந்து ஓடிக்களித்த குழந்தையின் மகிழ்ச்சி கோபாலிடமும் வியாபித்தது. என்றுமில்லாத சந்தோஷத்தோடு வீடு நோக்கி நடந்தான் கோபால்.

-நரேன்- (ஓகஸ்ட் 90)

## சுவிற்சலாந்தில் தமிழ் அகதிகள்

இது சுவிற்சலாந்தின் எழுநூறாவது பிறந்த ஆண்டு. ஐரோப்பாவின் முக்கிய நடுநிலை நாடெனவும் செல்வ வளமிக்க நாடெனவும் சுத்தமான நாடெனவும் கொண்டாடப்படும் இந்த நாடு அயலார் மீது சகிப்புத்தன்மை குறைந்த நாடு, இனவாதம் மிகுந்த நாடு என்ற உண்மைகளைச் சில வருடங்கள் முன்பு அங்கு வேலை தேடிச்சென்ற இத்தாலியரும் துருக்கியரும் கண்டனர். இன்று தமிழ் அகதிகள் காண்கின்றனர். வேறு யாருமே ஏற்கத் தயங்கும் வேலைகளே அகதிகளாக வரும் தமிழருக்குத் தரப்படுகின்றன. அதிகாரபூர்வமாக 10,000 தமிழ் அகதிகள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. மேலும் 2000 பேர் இருக்கலாம் எனவும் இன்னும் பலர் பிற ஐரோப்பிய நாடுகள் வழியாக வந்து சேரலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. இவர்கள் பெரும்பாலும் கல்வியறிவுடையவர்கள். ஆனாலும் ஜேர்மன் மொழி கற்குமாறு இவர்கள் ஊக்குவிக்கப் படுவதில்லை. இதனால் இவர்களால் சுவிஸ் சமுதாயத்துடன் தம்மை இணைக்கும் வாய்ப்பு இல்லாது போகிறது. யூகோஸ்லாவியா, ஸொமாலியா, எதியோப்பியா போன்ற நாட்டு அகதிகள் உட்பட்ட 70,000 அகதிகள் போன்று இவர்களும் சுவிஸ் தேசியவாத உணர்வின் இம்சைக்கு ஆளாகின்றனர். அண்மையில ராஜா என்ற இருபது வயது வாலிபர் மூன்று சுவிஸ் இளைஞர்களால் ஒருநாள் இரவு ரயில் நிலையத்தில் மூர்ச்சையாகும்வரை அடித்து நொறுக்கப்பட்டார். சென்ற வருடம் ஜீவன் என்ற வாலிபர் அடித்துக் கொல்லப்பட்டார். தேசபக்த முன்னணி எனப்படும் பாஸிஸ இயக்கமே இவ்வாறான தாக்குதல்கட்கு உற்சாகமளிக்கிறது. பொலிஸில் முறையிட்டு எதுவும் நடப்பதில்லை. திருப்பி அடித்தாலோ கொல்லப்படலாம் அல்லது நாடு கடத்தப்படலாம். எனவே தமிழ் அகதிகள் அஞ்சி வாழ்கின்றனர். தனியே இரவில் புறப்படுவதைத் தவிர்க்கின்றனர். அண்மையில் துருக்கிய குர்த் இனத்தவர் இருபத்துநான்மர் நாடு கடத்தப்பட்டதையடுத்துத் தம் கதி என்னவென்று கலங்குகின்றனர். இலங்கை அரசியல் நிலைமை சகஜமாயிற்று என்று சுவிஸ் அரசு தீர்மானிக்கும் பட்சத்தில் இவர்களைத் திருப்பியனுப்ப சுவிஸ் நிர்வாகம் தயங்காது. மனிதாபிமானம் இல்லாத ஒரு சூழலில் அகதி வாழ்வு இலங்கையின் அரச பயங்கரவாதத்தின் கீழ் வாழ்வதை விட மேலானதில்லை. மனித உரிமை பேசும் ஐரோப்பிய அரசாங்கங்கள், தம் நாடுகளில் யாருக்குப் பரிவு தேவையோ அவர்கட்கே அது மறுக்கப் படுகின்றமைபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

(ஆதாரம்: The Guardian, 19.7.91)



படிப்பகம்

www.padippakam.com



மாதொருபாகனார் சோபாசெற்றியில் கால்நீட்டிப் படுத்திருந்தார். வின்ரர் காலத்தில் மா.பா.வுக்கு அடிக்காலில் ஒரு கட்டி வருவதனால் உலாத்துகள் குறைவு. பெற்றோல் ஸ்டேசன், 'V'றெஜ் (அதாவது 1978ம் வருடத்துக்) கார், வீடு, *TV* என்றே பொழுதுபோகும். வேறுவழியின்றி *TV*யையே பார்த்ததனால் மா.பா. குரொவேசியா–யூகோஸ்லேவியாப் பிரச்சனைபற்றி ஒரு புளுத்தகம் (புளுகு+புத்தகம்) எழுதுவது பரிசீலனையிலுள்ளது. அவரது தர்மபத்தினி சறோஜினி தேவியாருக்கு 'வின்ரரும்' ஒன்றுதான், 'சமரும்' ஒன்றுதான். 'ரில்' அடித்து வந்து ஆடையலங்காரம் மாற்றிக் கச்சேரி செய்யப் போய்விட்டார். ஒரு நல்ல காரியமாகத்தான். அவவின்ரை மருமோள்ப் பெட்டையொருத்திக்கு கனடாவிலையிருந்து ஒரு பெடிப்பிள்ளை கல்யாணம் விடு தூது அனுப்பியுள்ளார். சீதனம் இல்லாமலில்லை. (காதல் விடு தூதுக்கு இப்போது லண்டன் தமிழ் மாதுகள் செவிசாய்ப்பதில்லை என்று கதை). அந்தத் தூதினை ஆராய்ந்து நல்லது கெட்டது பிரிக்கவும் கொள்வினை கொடுப்பினை தீர்க்கவுமே சகதர்மிணி *Cab* ஏறி விரைந்துள்ளார். 'V'றெஜ் கிழட்டுக்காரில் போனால் நல்ல காரியம் தடைப்படும் என்பதும் தர்மபத்தினியின் சமீப காலக் கோட்பாடுகளிலொன்று. மா.பா. நொந்துபோய்ப் படுத்திருந்தார்.

நேற்றைய தினம் அண்மைவந்து நிழலாடியது. அங்காங்கு உழைப்பு, தூக்கமென வாழும் இரு இளைஞர்கள் மா.பா.வை வந்து சந்தித்திருந்தனர். அவர்களது நொந்துகெட்ட 'ஸ்டோரிகளை' மா.பா.வின் உன்னத மூளை அசைபோடுகின்றது. மா.பா.வின் அருமை நண்பரொருவர் அடிக்கடி சொல்லுவார்: "இங்கு குளிரிலும், பனியிலும் நாங்கள் கொட்டும் உழைப்பில் பாதியை வன்னிக் காடுகளில் விட்டால் என்ன சந்தோசமாக வாழலாம்".

இங்க வந்தும் ஊர் வாழ்க்கையின் அத்தனை சாம்பிள்களையும் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காது வாழும் எம்மவர்கள் மத்தியில் புரோக்கர்களும் உண்டு. அங்கெல்லாம் சந்தைப் புரோக்கர், ஆட்டுப் புரோக்கர் என இருப்பதுபோல இங்கு 'சீப் லேபர்' ஏஜெண்டுகள் 'G'றெஜ், 'H'றெஜ் கார்களில் உலாவிவருகின்றனர். இவர்களைப் பலவேறு கடைகளில் நீங்கள் சந்திக்கலாம்.

உலகெல்லாம் அகதிகள் வேண்டப்படாத வந்தேறுகுடிகளாகவே மதிக்கப்பட்டு வருகின்றனர். அடிமைகளிடமிருந்து கறக்கப்பட்ட உழைப்பு இவர்களிடமிருந்தும் குறைந்த கூலியுடன் கறக்கப்பட்டு வருகின்றது. சங்கிலி மாமன்னன் வழிவந்த எம்மரும் யாழ்ப்பாணிகளும் மலையகத் தமிழரை "கள்ளத்தோணி பிடிச்சுக் கொடுப்பன்" என்று வெருட்டி வெருட்டி வேலை வாங்கியதை நாடறியும். இதுபோல 1983களின் பின்னால் இலங்கை அகதிகள் இங்கு திரள்திரளாக வந்தபோது இந்தியச் சிறு முதலாளிகளே அதன் பயனை நன்கு அநுபவித்தனர். சிறு முதலாளித்துவம் எப்போதும் குடும்ப உழைப்பினையும், குறைந்தகூலி உழைப்பையும் கொண்டே தன்னை வளர்த்தெடுக்கும். இன்றைய இந்தியச் சிறுமுதலாளிகளிற் பெரும்பான்மையோரும் 70களில் இடிஅமின் துரத்த ஓடி வந்து வெள்ளைக்காரர்களின் அடிமைகளாக அல்லல் பட்டவர்கள்தாம்.

இந்த அகதி வெள்ளத்தைக் கண்டே எம்மில் முன்வந்து குடியேறிவிட்ட மூத்தகுடி உசாராகி கல்வியறிவில்லாதவராகப் பார்த்து வீட்டுவேலைக்காரராக கொஞ்சப்பேரை வளைச்சுப் போட்டுது. இன்னும் சிலர் தமது லாபங்களுக்காய் இந்திய முதலாளிகட்கும், இதர நிறுவனங்களுக்கும் 'சீப்–லேபர்' ஏஜெண்டுகளாய் தம்மை மாற்றிக் கொண்டனர். இந்தச் சீப்–லேபர் ஏஜன்சி என்பது வெறுமனே கூலிக்குறைப்பு அல்ல. ஆட் குறைப்பினூடாக கூடுதல் வேலைக்கறப்பு, வேலைநேரக் குறைப்பினூடாக வயிற்றிலடிப்பு மற்றும் வேலைக்கறப்பு இவையோடன்ன பிறவும் அடங்கும். இவ்வகைச் சீப்–லேபர் ஏஜென்ட ஒருவரிடம் நொந்துபட்ட இரு இளைஞர்களே மா.பா.வை வந்து சந்தித்துச் சென்றவர்கள்.

இதோ வருகிறார் ஒரு சாம்பிள்ப் புரோக்கர். எமதூரின் சந்தைகளில் சற்று உயர்த்தி மடித்துக்கட்டிய சாரத்துடன் சண்டித்தனம் கலந்து தொழில் செய்வோரின் அதே வாரிசுதான். ஆனால் இயற்கையிலேயே பச்சோந்தித்தனம் உள்ளதால் சூழ்நிலைக்கேற்ப கோட்–சூட்டுடன் நுனிநாக்கு ஆங்கிலம் மணக்க (8–10 வருசத் தேம்ஸ் தண்ணிக் குளிப்பின் மகிமை), அடடா அந்த 'செட்–அப்'பே தனி. 'G'றெஜ் கார் குலுங்கி நின்கின்றது. கர்ணனின் கவச குண்டலம் போன்ற 'மோபைல்' போனை வலது கை தாங்க தரையில் கால் பதிக்கிறார். அருளேயுருவாய், அருளே பொருளாய் புன்னகை சிந்தும் வதனம். சீடப்பெடியொன்று ஓடிச் செல்கிறது. "*Boot*இல் ஒன்றுமில்லை" அண்ணன்





படிப்பகம்

www.padippakam.com



திருப்தியுடன் தலையசைக்கிறார்.

நாலைந்து பெரிய கடைகளை லண்டனின் மையப்பகுதியில் நடத்தும் ஒரு இந்திய முதலாளியின் கைத்தடிதான் இவர். இவரது நெற்றியில் முதலாளி 'ஏரியா மனேஜர்' என்ற லேபிளை ஒட்டி விட்டுள்ளார். அண்ணனுக்கு ஏரியா மனேச்சரென்றால் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இலங்கைத் தமிழ்ப் பிரதிநிதி என்ற நினைப்பு. ஏரியா மனேஜர் என்றவுடன் அண்ணனை ஒரு வியாபார விரிவாக்கற் புலி என்று நீங்கள் நம்பினால் அதன்மூலம் அன்னார் மட்டுமே மகிழ்வடைய முடியும். முதலாளி இவருக்கு காரையும் 'மோபைல்' போனையும் கொடுத்து லேபிளை ஒட்டிய காரணம் 'வெரி வெரி சிம்பிள்'.

1. மூன்றுவாரப்பவுணுக்கு வேலை என்றலைபயும் அகதிகளின் அவலம்
2. பெருமகனும் முன்பு படிக்கவென்று வந்த பொருளாதார அகதி.

நீண்டகாலம் 2 பவுணுக்கு மாரடித்து நொந்த இளைஞரொருவர் தலைவரை தொலைபேசிமூலம் தொடாபு கொண்டு கூலி உயர்வு பற்றிக் கெஞ்சினார். அதற்குத் தலைவன், "அகதிகள் வரமுன்பும்நாங்கள் கடை நடத்தினனாங்கள்தான் என்று முழங்கினான்.

இதே இளைஞர் தலைவனை மதியாத காரணத்தால் பின்னொருதரம் நியாயமான கூலியைக் கேட்டபோது (கனக்க இல்லை 2.50 பவுண்) வெளியில் போ என்று துரத்தப்பட்டார். குட்டக்குட்டக் குனிவதோ என்று மறுகிய அந்த இளைஞரும் தலைவனைக் கெட்டவார்த்தைகளின் துணையோடு திரும்பித் திட்டினார். உடனே தெருச்சண்டையிலிறங்கிய புரோக்கர் அம்மான் கெட்டவார்த்தைகளை அள்ளி இறைத்தார். சண்டைமுடிவில் மற்றைய இலங்கை இளைஞர்களின் மத்தியில் ஆங்கிலத்தில் சொற்பெருக்காற்றினார். அதன் சராம்சம் இதுதான். தலைவன் யாருக்கும் பயப்படத் தேவையில்லையாம். ஏனென்டால் இவருடைய மச்சான்தான் 'பெரிசுகளுக்கு' அவுஸ்திரேலியாவில் சோ் சேர்க்கிறாராம். ஏன், தான்கூட 'ஸ்ரான்டிங் ஓடரி'ல பெரிசுகளுக்கு மாதம் பத்துப் பவுண் கொடுக்கிறாராம். புதிய ஏற்பாட்டில் அல்லது வேதாகமங்களில் இடம்பெறாத 'பாவமன்னிப்போ' என்ன இழவோ தெரியவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளியின் சார்பாகப் பேசிய ஒரே காரணத்துக்காக இன்னொரு இளைஞருக்கு 'தண்ணியில்லாக் காடான' மற்றொரு கடைக்கு அடுத்தநாள் இடமாற்றல் உத்தரவும் வழங்கினார். இத்துடன் நின்றுவிடாது 'அவதானத்துக்குரிய குழப்பல் பேர்வழி என்றும் இரண்டாம் நபர் முத்திரையிடப்பட்டார். இந்த முத்திரை இடப்பட்ட பேர்வழி கனகாலத்தின் பின்னால் கூலி உயர்வு கேட்டபோது 2.30இலிருந்து 2.40க்கு (பத்தே பென்சுகள்) கடையின் மனேஜர் சிபார்சு செய்தார். முதலாளியும் அரை மனதுடன் சம்மதித்தார். ஆனால் அன்னார் விடவில்லை. தன்னை, இலங்கை மக்களுக்கான இலண்டன் பாராளுமன்ற உறுப்பினரைப் பார்த்து "சீப்-லேபர் ஏஜென்ட" என்று சொன்ன பேர்வழிக்கா பத்துப் பென்ஸ் கொடுப்பது? "திறமையும் கத்தரிக்காயும்! முதலில் எங்களை மதிக்கப் பழகவேண்டும்" என்று தத்துவம் பொழிந்தார்.

மதிப்பதா? எதனை மதிப்பது? உயிருக்கஞ்சி ஊரெல்லாம் கடன்பட்டு, ஏஜன்சிகளிடம் ஏமாந்து இங்கு வந்தும் மொழியறிவின்றி கழுவியும் துடைத்தும் கண்கலங்க வாழும் அகதிகள் வயிற்றிலே அடித்துப் பிழைப்பதை மதிப்பதா? இவர்களின் ஏமாற்று வித்தைகள் தெரிந்தும் சகோதரிமாரின் சீதனத்துக்காக, தலையாட்டல்களோடு இவர்களைத் தொடரும் இளைஞர் கூட்டத்தைத் தொடர்ந்தும் மென்னியைத் திருகி வாழ்வதை மதிப்பதா?

மேற்சொன்ன புரோக்கர் திருமகன் ஒரு சாம்பிள். இவரைப் போல பலர் 'சுப்பர் மாக்கற்'வழியே சுப்பவைசராயும், பெற்றோல் நிலையங்களில் மனேஜர்களாயும் உள்ளனர். இவர்களில் பலர் அடிக்கடி சொல்லும் வார்த்தை இதுதான். "எங்களுக்கு நல்ல அதிகாரமிருக்குது. ஆனால் எங்கடை பெடியள்தானேயெண்டிட்டு அதைப் பாவிக்கிறதில்லை".

இவர் கையிலுள்ள அதிகாரம் தும்புக்கட்டைக்குச் சமனானது. அகதி இளைஞர்களுக்குக் கிடைத்து வரும் குறைந்த கூலிப் பிச்சையை மேலதிகாரிகளிடம் அல்லது முதலாளியிடம் கோள்மூட்டி இல்லாமல்செய்து வயிற்றைக் காயவிடுவதுதான் அது.



படிப்பகம்

www.padippakam.com

-அனந்தன்-

# சும்மா கிடந்த சங்கு



சோவியத் யூனியனில் கடந்த ஐந்து வருடங்களாக, முக்கியமாகக் கடைசி இரண்டு வருடங்களாக, ஏற்பட்ட மாற்றங்களைக் கவனித்த எவருக்கும் சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரம் விரைவில் என்றைக்காவது ஒருநாள் பறிபோகும் என்று விளங்கியிருக்கும். சோவியத் யூனியனில் ஓகஸ்ட் 1991இல் மேற்கொள்ளப்பட்டுத் தோல்வியடைந்த சதிப்புரட்சி அம்மாற்றத்தைத் துரிதப்படுத்தியது. அவசரப்பட்டுச் செயற்பட்ட சில சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களும் இராணுவத் தலைவர்களும் ஆப்பிழுத்த குரங்குகள் போலத் தம்மைச் சார்ந்த எல்லாரையும் வம்பில் மாட்டிவிட்டார்கள்.

இந்தச் சதிப்புரட்சி வெற்றி பெற்றிருந்தால் சோவியத் யூனியனின் நீண்டகாலப் போக்கில் வித்தியாசம் ஏற்பட்டிருக்குமா என்பது ஒரு கேள்வி. கிளியோபாத்ராவின் மூக்கு அரைஅங்குலம் சப்பையாக இருந்தால் உலகவரலாறு வேறுவிதமாக அமைந்திருக்குமா என்று ஆராய்பவர்களுக்கு அது மிகவும் பிரச்சனைக்குரிய விஷயம்தான். வரலாற்றைச் சமுதாய அமைப்பு, சமுதாயப் பிரிவுகள், அவற்றுக்கிடையிலான உறவுகள் என்ற வகையில் பார்க்கிறவர்களுக்கு அச் சதியால் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சரிவைத் தடுத்திருக்க முடியாது என்றே தெரியும். உண்மையில் மக்களுடைய தேவைகளையும், மனநிலையையும் அறிந்தவர்கள் இந்தச் சதியில் இறங்கியிருக்க முடியாது. மக்கள் மீதும் சரித்திரம் படைப்பதில் மக்களது பங்கின் மீதும் நம்பிக்கை இல்லாதவர்களே ஆயுதங்களை முதன்மைப் படுத்துகிறார்கள். அத்தகையவர்களே சதிகளை நம்புகிறார்கள்.

சோவியத் யூனியனின் இன்றைய நிலை என்ன? இதற்குச் சரித்திர ரீதியான காரணமென்ன? சோவியத் யூனியனின் எதிர்காலமென்ன? உலகில் சோஷலிஸத்தின் எதிர்காலமென்ன? இக் கேள்விகட்கான விடைகள் பெரும்பாலும் ஒவ்வொருவரதும் மனவிருப்பிற்கும் உலகநோக்கிற்கும் ஏற்றபடி அமைவதில் அதிசயமில்லை. இந்தக் கட்டுரையில் சோஷலிஸம் பற்றிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ஏகாதிபத்திய விரோத உணர்வும் தமது முத்திரையைக் குத்தி இருக்கலாம். ஆயினும் உண்மைகளை நிராகரித்துக் கற்பனையின் அடிப்படையில் முடிவுகட்கு வராமல் இருக்க முயல்கிறேன். இன்று சோவியத் யூனியனில் நடந்தவை பற்றி ஒவ்வொருவரும் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தே சோஷலிஸம் பற்றி அவர்களது நிலைப்பாட்டை அறியலாம்.

சோவியத் யூனியனில் சோஷலிஸம் ஒழிந்து விட்டது. இனி சோஷலிஸத்துக்கு எதிர்காலமே இல்லை என்று கெக்கலிகொட்டிக் கூத்தாடுவோர் உள்ளனர். அது கௌரவ சேனை. நிக்கராகுவாவில் சூழ்ச்சியால் மக்களாட்சி விழுந்தபோதும் உலகெங்கும்



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்தியவாதிகள் தமது சதிகளால் நியாயத்தை விழுத்தும்போதும் குதூகலிக்கும் கூட்டம், பாரதப்போரில் நிராயுதபாணியான அபிமன்யு விழுந்தபோது பெருமை கொண்டாடிய அறந்தெரியாத கும்பல். அவர்களது மகிழ்ச்சியை நாம் குலைக்கமுடியாது. அவர்கள் வரலாற்றுக் குருடர்கள்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சி சோஷலிஸத்தின் வீழ்ச்சி என்று நினைத்து மனமுடைந்து போனவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் கடந்த சில தசாப்தங்களாகச் சோவியத் யூனியனில் என்ன நடந்தது என்று சரியாக அடையாளங் காணாதவர்கள். 'சோவியத் யூனியன் சமன் சோஷலிஸம்' என்ற சூத்திரம் என்றோ பொய்த்துவிட்டது. அதை இவர்களிற் பலர் விரைவில் உணரக்கூடும்.

சோவியத் யூனியனில் இருந்தது சோஷலிஸமே இல்லை, எனவே அதன் ஒழிவு நல்லதுதான் என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு எளிதாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக உலக வரலாற்றை ஆராயும் அபாரமான திறமை கொண்ட இவர்கள் பலவேறு இடதுசாரி முகாம்களில் உள்ளார்கள். பல சமயங்களில் தங்களோடு பூரணமாக உடன்படாத எவருக்கும் சகுனப்பிழை ஏற்படுத்தத் தம் மூக்கை அரியத் தயங்காதவர்கள். இவர்கட்குப் பிரதான எதிரியைவிட முரண்படுகிற சிநேகிதன் முக்கியமான பகைவன். இவர்கள் சோவியத் யூனியனின் வீழ்ச்சியை மட்டுமே பார்த்து அதன் உடனடியான விளைவுகளைக் காண மறுக்கிறார்கள். இவர்களும் ஈற்றில் ஏகாதிபத்தியவாதிகளின் நலனுக்கே துணைபோக இடமுண்டு.

சோவியத் யூனியன் பற்றிய அதிக எதிர்பார்ப்புக்கள் இல்லாது போனாலும் இன்றைய உலக நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விஸ்தரிப்புக்கு ஈடுகொடுக்கவல்ல ஒரு அமைப்பாக அது இருக்கவேண்டுமெனவும் சோவியத் யூனியனுள் உண்மையான சோஷலிஸம் மலரவேண்டுமெனவும் விரும்பியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சோஷலிஸத்தின் நண்பர்கள். இவர்களுக்கு சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றங்கள் வியப்பூட்டவில்லை என்றாலும் விசனமூட்டுகின்றன. என்னுடைய மனநிலையும் பலவகைகளில் இவர்களுடையது போன்றதுதான். என்றாலும் சோவியத் யூனியனில் ஏற்பட்ட பின்னிடைவு வரலாற்றில் தவிர்க்க முடியாதவொன்று என்பதை மனதிற் கொள்ளும்போது இது உண்மையிலேயே முதலாளித்துவத்தின் மாபெரும் வெற்றியுமில்லை சோஷலிசத்தின் படு தோல்வியுமில்லை என்பது தெளிவாகிறது. இது சோஷலிஸ இயக்கத்திற்கும், அதைவிட முக்கியமாக, ஏகாதிபத்திய விரோத எழுச்சிக்கும் ஒரு சிறு இடறல்; மனங்கலங்க அவசியமற்ற இடறலாயினும் மழுப்ப முடியாத இடறல்.

ரஷ்ய ஒக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவம் ரஷ்யாவில் அது ஏற்படுத்திய மாற்றத்தைவிடப் பன்மடங்கு பெரியது. உலகின் கொலனித்துவ விரோதப் போராட்டங்களுக்கும், சமுதாய மாற்றத்தை வேண்டிநின்ற பலவேறு எழுச்சிகட்கும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைக் கிளர்ச்சிகட்கும் அது உரமூட்டியது. இன்றும் அதன் பாதிப்புனின்று ஏகாதிபத்தியவாதிகளால் மீள முடியவில்லை. ஒக்டோபர் புரட்சியை ஏகாதிபத்தியவாதிகள் ஏற்கத் தயாராக இருக்கவில்லை. எனவே அதற்கெதிரான உள்நாட்டு யுத்தத்தை ஊக்குவித்ததுடன் சோவியத் குடியரசு முறையைக் கவிழ்ப்பதில் நேரடியாகவும் பங்குபற்றினர். அவர்களது முயற்சிகள் முறியடிக்கப்பட்டனவும் பின்தங்கிய தொழில் வளர்ச்சியையே பெற்றிருந்த சோவியத் யூனியனுள் சோஷலிஸ அடிப்படையில் தொழிலபிவிருத்தியையும் நிலச் சீர்திருத்தத்தையும் மேற்கொள்வது எளிதாக இருக்கவில்லை. இவற்றை மேற்கொள்வதற்கு இருந்த எதிர்ப்புகளைக் கையாள்வதிற் பல தவறுகள் இழைக்கப்பட்டன. இவை பெருமளவும் தவிர்த்திருக்கக் கூடியவை என்று வாதிப்போர் உள்ளனர். பின்னோக்கிய பார்வையில் விஷயங்களை மதிப்பிடுகிறபோது முன்னைய நிலவரங்களில் இருந்த நிலைமைகளை நிதானமாகப் பார்க்கமுடியும். அவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தோரின் நெருக்கடிகளையும் சிரமங்களையும் குறைவாகவே மதிப்பிடவும் இடமுண்டு. அனுபவமின்மையால் ஏற்படும் பிழைகளைப்பற்றிய விமர்சனங்கள் கடுமையாகவே இருக்கும். ஆயினும் நடைமுறையில் இறங்குகிறவர்களது சிரமங்கள் நடைமுறையில் இயங்குகிறவர்கட்கே விளங்கும். இதன் காரணமாகவே ஸ்டாலின் கீழ் ஏற்பட்ட பிழைகள்பற்றி மாஓசேதுங், ஹோ சி மின் போன்றவர்கள் தம் கடுமையான அபிப்பிராயங்களை மிகவும் கவனமாகவே தெரிவித்தனர். ஸ்டாலினுடைய தவறுகள் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் சோஷலிஸ இயக்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்டங்களுக்கும் கேடு செய்ததை அவர்கள் மறுக்கவில்லை. சீனாவிற்கூட ஸ்டாலினின் தவறுகள் புரட்சிகர இயக்கத்துக்கு ஊறு செய்ததை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆயினும் அத் தவறுகள் ஒரு எதிரியோ, துரோகியோ, தவறான சிந்தனையுடையவரோ செய்தவை என அவர்கள் கருதவில்லை. இக் காரணத்தாலேயே குருஷ்சொவ் ஸ்டாலினைப்பற்றிய தாக்குதலைத் தொடுத்தபோது அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்தச் சிந்தனைப் போக்குக்கு உரியோரின் கணிப்பீடு பின்வருமாறு:

ஸ்டாலினுடைய காலத்திலேயே சோவியத் யூனியனுக்குள் ஒரு புதிய அதிகார வர்க்கத்தின் வளர்ச்சியை அடையாளங்காண முடிந்தது. அது ஸ்டாலின் உருவாக்கியதல்ல. அதன் தோற்றுவாய் ரஷ்யப் புரட்சியுடனும் அதன் வளர்ச்சி நடந்த உள்நாட்டு வெளிநாட்டு நிலவரங்களுடனும் சேர்ந்த ஒன்று. ஒரு பின்தங்கிய சமுதாயத்தை நவீனமாக்கும் போக்கில் ஏற்படும் சிக்கல்களுடன் இணைந்த ஒன்று. சோவியத் யூனியனில் சோஷலிஸ நிர்மாணம் பற்றிய ஸ்டாலினின் தவறான மதிப்பீடுகளை அவர் அடையாளங் கண்டபோது காலங் கடந்துவிட்டது. அவரது தவறுகள் இந்தப் புதிய அதிகார வர்க்கத்தின் வளர்ச்சிக்கு உதவியது உண்மை. இந்த அதிகார வர்க்கத்தின் நலன்கள் சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் குலைவை வேண்டி நின்றன. அதே போன்று சர்வதேச அரங்கில் ஏகாதிபத்திய



படிப்பகம்

www.padippakam.com

நாடுகளுடனான சமரசத்துக்காக உலகின் விடுதலைப் போராட்டங்களைக் கைவிடவும் சிலசமயம் காட்டிக் கொடுக்கவும் அது ஆயத்தமாக இருந்தது. அதே வேளை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குச் சமமான ஒரு பலமான சக்தியாகத் தன்னை அது வளர்த்துக் கொள்ளவும் விரும்பியது.

குருஷ்சொவ் தலைமை சோவியத் யூனியனில் அதிகாரத்துக்கு வந்தபின் ஸ்டாலின்மீது கடுமையான தாக்குதல்களை நடத்தினாலும் ஸ்டாலினின் தலைமையின்கீழ் வென்றெடுக்கப்பட்ட சகலவற்றையும் புதிய அதிகாரவர்க்கத்தின் நன்மைக்காகவே பாவிக்க முயன்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒரு புதிய ரஷ்ய சாம்ராஜ்யத்தின் கொலனிகள்போல நடத்தப்பட்டன. சோவியத் யூனியனிலிருந்து பிரிந்துபோகும் சுயநிர்ணய உரிமை வெறும் வார்த்தைகளாகவே இருந்தது. பாஸிஸ மிரட்டலுக்கு எதிராகத் தம்மைச் சோவியத் யூனியனுடன் பிணைத்துக்கொண்ட லித்துவானியாவும் எஸ்தோனியாவும் லத்வியாவும் அதன் நிரந்தர அங்கங்களாகவே கருதப்பட்டன. ஸ்டாலினைக் கண்டித்தவர்கள் ஸ்டாலினின் தவறுகளின் விளைவுகள் தங்களது நலனுக்குச் சாதகமாக இருந்தபோது அவற்றைத் திருத்த விரும்பவில்லை. இதன் பயனாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதிருப்தி பரவியது. இவற்றின் விளைவுகளிற் சில அயலார் தலையீட்டால் ஊக்குவிக்கப்பட்டவை. எனினும் இந்தப் பிரச்சனைகளைக் கையாள்வதில் சோவியத் தலைமை விட்ட தவறுகள் மேலும் அதிருப்திக்கே வழிவகுத்தன. 1956இல் குருஷ்சொவ் தலைமை உள்நாட்டில் ஸ்டாலின் வளர்த்தெடுத்த தனிநபர் வழிபாட்டை எதிர்க்கும் போக்கில் தன் புதிய முனைப்பைத் தொடங்கியதைக் கிழக்கு ஐரோப்பாவின் அதிருப்தியாளர்கள் வேறுவிதமாக அடையாளங் கண்டனர்.

1956இல் ஹங்கேரியில் அயலார் தலையீடு நெருக்கடியான ஒரு சூழலை வளர்க்கும் வரை அனுமதிக்கப்பட்டது. அது முற்றிய பின் குருஷ்சொவ் அதிகாரம் எடுத்த குரூரமான ராணுவ ஒடுக்கல் நடவடிக்கை சோவியத் சோஷலிஸம் பற்றிய மேலைநாடுகளின் அவதூறுகட்கு உதவியது. 1957இல் போலந்தில் ஏற்பட்ட நெருக்கடியையும் அதேவிதமாக நசுக்க முயன்றபோது சீனப்பிரதமர் ஜோ என்லாயின் தலையீடு அப்பிரச்சனையைச் சுமுகமாகத் தீர்க்க உதவியது. இதன் பாடங்களைச் சோவியத் தலைமை உணரவில்லை. மாறாக, மேலும் சோவியத் யூனியனதும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும் மேலாதிக்கத்தை வலியுறுத்தும் போக்கிலேயே செயற்பட்டன. சோவியத் யூனியனுள் ஏற்பட்ட மாற்றங்களை நியாயப்படுத்தும் நோக்கில் மற்றைய கட்சிகளுடன் கலந்தாலோசனை இல்லாது யூகோஸ்லாவிய அரசை ஒரு சோஷலிஸ அரசாக குருஷ்சொவ் அங்கீகரித்தபோது அல்பானியக் கட்சி ஆட்சேபித்தது. இதை ஆரோக்கியமான விவாதத்தின்மூலம் தீர்ப்பதற்கு மாறாக அல்பானியா மீது கடுமையான தாக்குதலும் அல்பானியாவைத் தனிமைப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இப்போக்கின் விருத்தியே 1963இல் சர்வதேசரீதியாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பெரிய ஒரு பிளவை ஏற்படுத்தியது.

சமாதான முறையில் சோஷலிஸ மாற்றம் சாத்தியம் என்றும் ஆயுதப் புரட்சி அவசியமில்லை என்றும் சோவியத் தலைமை வாதித்தது. அதற்கு அனுதாபமான கட்சிகளும் சோஷலிஸ அரசுகளும் அதையே வலியுறுத்திப் பாராளுமன்ற அரசியலின் மூலம் சோஷலிஸத்தை அடையுமாறு மூன்றாமுலக நாடுகளின் மக்களை ஊக்குவித்தன. அதேவேளை சோவியத் யூனியன் தன்னை மேலும் மேலும் ஆயுதபாணியாக்கிக் கொண்டது. இந்த ஆயுதங்கள் அமெரிக்காவினால் மிரட்டப்படும் நாடுகட்குப் பாதுகாப்புத்தர அதிகம் உதவவில்லை. உதாரணமாக அமெரிக்க அணுஆயுத மிரட்டலுக்கு எதிராகப் பாதுகாப்புத் தருமாறு சீனா 1957இற் கோரிய உத்தரவாதம் மறுக்கப்பட்டது. கியூபாவில் 1962இல் ஏவுகணை ஆயுதங்களை நிறுவிய சோவியத் யூனியன் அமெரிக்க மிரட்டலுக்குப் பயந்து பின்வாங்கியது. 1961இல், சீனாவில் வேலைசெய்த சோவியத் நிபுணர்கள் முன்னறிவித்தலின்றி சோவியத் யூனியனுக்குத் திருப்பி அழைக்கப்பட்டது மட்டுமன்றி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் வேலைத்திட்ட






படிப்பகம்

www.padippakam.com

விபரங்களும் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. அதேவேளை கிழக்கு ஐரோப்பியப் பொருளாதாரங்களும் அரசுகளும் சோவியத் யூனியனுடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டன. சீனாவுடனான முறிவு சோவியத்-இந்திய நட்புக்கு மட்டுமல்லாது சோவியத் சார்பான பர்மிய ஆட்சியைக்கூட சோஷலிச ஆட்சியாக அங்கீகரிக்கத் தூண்டியது. சோவியத் நலன்களுக்குப் பாதகமான முனைப்புடைய விடுதலை இயக்கங்கள் தலைமை தாங்கிய நாடுகளில் பிளவுகள் ஊக்குவிக்கப்பட்டன. இயக்கங்களிடையிலான பிளவுகள் விடுதலைப் போராட்டங்களைப் பலவீனப்படுத்தின. அதேவேளை, சோவியத் யூனியனுக்குச் சார்பான ஒரு ஆட்சி அமையக்கூடிய நாடுகளில் தேசிய நலன்களைப் புறக்கணித்த அடக்குமுறை ஆட்சிகள் ஆதரிக்கப்பட்டன. (உதாரணமாக எதியோப்பியா, அண்மையில் ஆப்கானிஸ்தான்). சோவியத் தலையீடே உள்நாட்டுக் கலவரத்துக்குக் காரணமான நிலைமை அங்கோலாவில் ஏற்பட்டது. காம்போடிய உள்நாட்டு யுத்தமும், தென்னாசியாவில் இந்திய விஸ்தரிப்பும் சோவியத் ஆதரவின்றி நடந்திருக்கமுடியாது.

சமாதானமுறையில் சோஷலிசம் சாத்தியமில்லை என்ற உண்மையை 1972இல் சிலியில் சல்வடோர் அயன்டேயின் கொலையும் அதன்பின் ஏற்பட்ட ராணுவ சர்வாதிகாரமும் உணர்த்திய பின்பும் சோவியத் யூனியன் தனக்குச் சாதகமான அரசுகளை ஆதரிப்பதற்கு அல்லாமல் புரட்சிகர எழுச்சிகட்கு ஆதரவாகத் தன் ராணுவபலத்தைப் பயன்படுத்தவில்லை. மறுபுறம் 1968இல் செக்கோஸ்லவாக்கியாவில் சோவியத் ஆக்கிரமிப்பும் 1980களில் போலந்து மீதான இராணுவ மிரட்டல்களும் சோவியத் யூனியனின் ராணுவ பலம் யாருக்கு உதவியது என்று நிறுவின. சோவியத் யூனியனின் முனைப்பு சோஷலிசத்தினின்றும் விலகிவிட்டது; சோவியத்தின் புதிய அதிகார வர்க்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குப் போட்டியான ஒரு சக்தியாகத் தன்னை வளர்த்துக் கொள்ளவே முனைகிறது; இதன் விளைவே பெரு வல்லரசுகளிடையிலான ஆயுதப்போட்டி என்பது பாராளுமன்ற அரசியலை நிராகரித்த மாக்ஸிய-லெனினிஸவாதிகளது கணிப்பு. சோவியத் யூனியனின் ஆயுதப் பெருக்கம் மேலும் பொருளாதார நெருக்கடிகட்கும் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குமே வழிகோலும் என்பதும் குருஷ்சொவின் முனைப்புக்கும், பிரெஷ்னேவின் முனைப்புக்கும் அதிக வேறுபாடும் இல்லை என்பதும் அவர்களது கருத்து.

அதேவேளை, சோவியத் யூனியனின் முனைப்பை ஆதரித்தவர்கள் பாராளுமன்ற மார்க்கத்தில் பூரண நம்பிக்கையுடையவர்கள் மட்டுமல்லர். பலவேறு பிராந்திய அரசியல் நிர்ப்பந்தங்களாலும் கம்யூனிஸ இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு சீன-சோவியத் பிளவாகவே அடையாளங் காணப்பட்ட நிலைமைகளினாலும் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல்முறையை ஏற்காதவர்களும் நடுநிலைமை வகிக்கவோ சோவியத் சார்பான நிலைப்பாட்டை எடுக்கவோ நேரிட்டது. இவற்றின் சரி பிழைகள் இன்னொரு விரிவான விவாதத்துக்கு உரியன. எனினும் கணிசமானோர் சோவியத் யூனியன் ஒரு பலமான இராணுவ வல்லரசாக இருப்பதை விரும்பினர். சோவியத் யூனியனையே ஒரு ஆதர்ஷ்ய சோஷலிஸ நாடாகவும் உலகின் சோஷலிஸ இயக்கத்தின் வழிகாட்டியாகவும் கருதியவர்கள் சோவியத் தலைமையிலான சோஷலிச முகாம் ஒரு பலமான ராணுவ வல்லரசாக இருப்பதன் மூலமே ஏகாதிபத்தியவாதிகட்கு எதிரான போராட்டங்கள் வெல்லமுடியும் எனவும் சோஷலிசத்தின் வெற்றிகள் பேணப்படக்கூடுமெனவும் நம்பினார்கள். அந்தப் பார்வையில் அங்கோலா, எதியோப்பியா, ஆபிகானிஸ்தான் ஆகிய நாடுகளில் சோவியத் தலையீடு சரியானதாகவும் அவசியமானதாகவுமே தெரிந்தது. அணிசேரா நாடுகளிடையே சோவியத் செல்வாக்குக்குட்பட்ட கியூபாவும், சோவியத் ஆதரவுடைய இந்தியாவும் சோவியத் யூனியனுக்குச் சாதகமான அபிப்பிராயங்களை ஊக்குவித்தன. இந்த அடிப்படையில் மூன்றாமுலக நாடுகளின் இயல்பான நேசசக்தியாகவே சோவியத் யூனியன் காணப்பட்டது.

1960-80களில் சோவியத் யூனியன் மூன்றாமுலகின் ஏகாதிபத்திய விரோத புரட்சிகர எழுச்சிகட்கு எவ்வளவுதூரம் உதவியது என்பதும் சோவியத்-அமெரிக்க ஆயுதப் போட்டியும் மூன்றாமுலகநாடுகளின் அணிபற்றிய சோவியத் நிலைப்பாடும் இடதுசாரிப் போக்குக்களிடையில் கடுமையான விவாதத்துக்கு உரியவையாக இருந்து வந்தன. எவ்வாறாயினும், சோவியத் யூனியனுடைய ராணுவ வலிமை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விஸ்தரிப்புக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது உண்மை. சீன-சோவியத் முரண்பாடும் கம்யூனிஸ இயக்கத்தில் ஏற்பட்ட பிளவும் ஏகாதிபத்திய விரோதப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியதும் உண்மை. சோவியத் யூனியனின் இராணுவ விஸ்தரிப்பும் கிழக்கு ஐரோப்பாமீது அதன் இரும்புப்பிடியும் மூன்றாமுலக நாடுகளுடனான அதன் உறவும் சோஷலிச இலட்சியத்தையும் ஏகாதிபத்திய விரோதப் போராட்டத்தையும் முன்னோக்கி உந்தும் நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டவைதானா என்பது மிகவும் கேள்விக்குட்படுத்தப்பட்ட விஷயம்.

எவ்வாறாயினும், சோவியத் யூனியனின் ராணுவ வலிமையும் உலகநாடுகளிடையே அதன் செல்வாக்கும் அமெரிக்க ஏகபோக வலிமைக்கு ஒரு சவாலாக இருந்தது உண்மை. இரு பெரு வல்லரசுகளிடையிலுமான போட்டியைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு பல மூன்றாமுலக நாடுகளின் தலைமைகள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டதும் உண்மை. ஆயினும் சோவியத் தலைமையிலான சோஷலிஸ முகாமினது பெரிய பலவீனம் சமமான அந்தஸ்துடையதும் தேவைக்கேற்ப அமைத்துக்கொண்ட சோஷலிஸ முறையையுடைய நாடுகளதும் ஒரு சங்கமமாக இல்லாது சோவியத் தலைமையைப் பின்பற்றிய நாடுகளின் கூடாரமாகவே அது அமைந்தமை எனலாம். இதன் விளைவாக, சோவியத் முகாமிலிருந்த நாடுகள் தமது உடனடியான சூழலுக்கேற்ப தமது சமுதாய அமைப்பையும் அயல் உறவுகளையும் விருத்தி செய்வது மிகவும் கடினமாகியது. இதன் தவிர்க்கவியலாத ஒரு விளைவாக சோவியத் யூனியனின் பலவீனம் அதன் தலைமையிலான சோஷலிச முகாமின் பலவீனமாக மாறியது. இதன் வெளிப்பாடுகள் 1980கட்கு முன்னமே தென்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

சோவியத் பொருளாதாரத்தின் முக்கிய பலவீனம், மிகையாக மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிடலும் கனரக உற்பத்திகளின்மீது தங்கியிருந்தமையும் என்பதை முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள் சுட்டிகாட்டுமுன்னரே சீனத்தின் தலைமை அடையாளம் கண்டதன் விளைவாக அவர்களாற் சில தவறுகளைத் தவிர்க்க முடிந்தது. ஸ்டாலினின் தலைமையின் கீழ் சோவியத் யூனியன் கண்ட மாபெரும் பொருளாதார வளர்ச்சியும் சோவியத் யூனியனின் ராணுவ வலிமையும் பாஸிஸத்துக்கெதிரான இரண்டாவது உலக யுத்தத்தின்போது சோவியத் யூனியனால் பாஸிசத்துக்குப் பதிலடி கொடுக்க இயலுமாக்கின. ஆயினும் அதன் குறைபாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் களையப்பட்டிருக்க வேண்டும். மாறாக, கனரக உற்பத்திமீது அழுத்தமும் இராணுவ விஸ்தரிப்பும்



தொடர்ந்தன. இதன் விளைவாக, சோவியத் யூனியன் மேலும் மேலும் தன் அவசிய நுகர்பொருட்களுக்கு அயல்நாடுகளைச் சார்ந்திருக்க நேர்ந்தது.

சோவியத் யூனியனுள் வளர்ந்துவந்த அதிகார வர்க்கம் தனது அரசியல் அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்தது. நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு கள்ளச்சந்தையின் வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்தியது. சமுதாயத்தின் மேற்தட்டுக்களில் வாழ்ந்த கட்சி முக்கியஸ்தர்களும், நிர்வாகிகள், ராணுவ அதிகாரிகள் மற்றும் சலுகைபெற்ற சில சமுதாயப் பிரிவினரும் மிகவும் வசதியாகவே வாழ்ந்தனர். அவர்கட்கு மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் விளங்கவில்லை. ஊழல் மூலமும் களவாலும் ஏமாற்றாலும் பணம் சேர்ப்பது வழமையாகியது. வசதி படைத்த அதிகார வர்க்கத்தினர் மேலும் மேலும் மக்களிடமிருந்து தனிமைப்பட்டனர்.

பொருளாதார நெருக்கடி உணவுத் தட்டுப்பாட்டிற்கு இட்டுச்செல்லாத நிலையில், சோவியத் யூனியனின் சர்வதேசச் செல்வாக்கு மக்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பியக்கம் வளரமுடியாமல் மறித்தது. பிரெஷ்னெவ் காலத்தில் இத்தகைய எதிர்ப்புகள் மக்களது அன்றாடப் பிரச்சனைகளைவிட்டு, ‘ஜனநாயக, உரிமைகள், மத சுதந்திரம் போன்ற பிரச்சனைகள்மீது சிறுபான்மைக் குழுக்கள் நடத்திய எதிர்ப்புக்களாகவே வெளிப்பட்டன. இவற்றை மிக எளிதாகவே அரசால் அடக்கி நசுக்க முடிந்தது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீடு ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியனின் ‘வியற்னா’மாக்கியது எனலாம். மற்றைய நாடுகளிற் போலல்லாது இங்கு சோவியத் படைகள் நேரடியாகவே உள்நாட்டு யுத்தத்தில் பங்குபற்றின. சோவியத் தலையீடு ஆப்கானிஸ்தான் ஆட்சியை மக்கள் மத்தியில் செல்வாக்கிழக்கச் செய்தது. மேலைநாடுகளதும் பாக்கிஸ்தான், ஈரான் ஆகியவற்றினது நேரடி ஆதரவும் சீனா உட்பட்ட பிற மூன்றாமுலக நாடுகளது மறைமுக ஆதரவும் சோவியத் தலையீட்டுக்கு எதிரான போராட்டத்துக்கு உதவின. ஆயினும் ஆப்கான் மக்களது தேசிய உணர்வே சோவியத் படைகளின் தோல்விக்குக் காரணமாயிற்று. ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளின் தோல்விகளும் உயிரிழப்புகளும் சோவியத் தலைமைக்குள் புதிய ஐயங்களை எழுப்பின. சோவியத் ராணுவ மேன்மையை நிலைநிறுத்த சோவியத் யூனியன் மேற்கொண்ட விஸ்தரிப்பு நடவடிக்கைகள் அதன் பொருளாதாரச் சீர்குலைவை மேலும் உக்கிரமாக்கின. ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட தோல்வி கிழக்கு ஐரோப்பாவில் இருந்த சோவியத் எதிர்ப்புச் சக்திகட்கு உற்சாகமூட்டியது. சோவியத் யூனியனுள் ஒரு மாற்றம்



படிப்பகம்

www.padippakam.com

அவசியம் என்ற கருத்து சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வலுப்பெற்றாலும் அது எத்தகைய மாற்றம் என்பதிற் தெளிவு இருக்கவில்லை. பிரெஷ்னெவ் அதிகாரத்தில் இருந்தபோது அவரைத் தூக்கி எறியாமல் அந்த மாற்றம் சாத்தியப்பட்டிருக்க முடியாது. அத்தகைய நடவடிக்கையின் பாரிய பின்விளைவுகளைக் கருதியே பிரெஷ்னேவின் மரணத்தின் பின்பு சோவியத் யூனியனில் சீர்திருத்தம் பற்றிய சிந்தனைகள் தலைதூக்கின.

பிரெஷ்னெவ் இறந்து கொர்பச்சொவ் அதிகாரத்துக்கு வருவதற்கிடையிலான காலத்தில், இடைக்கால ஆட்சிகளென்று கருதக்கூடிய அந்ரபொவ், செர்னெங்கோ தலைமைகளின் காலத்தில் 'பெரெஸ்றொய்க்கா' எனும் பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கையும் 'க்ளாஸ்னொஸ்ற்' எனும் அரசியல் சீர்திருத்தக் கொள்கையும் இலைமறைகாயாக உருவாகின. இவற்றின் ஆக்கத்தின் ஒரு முக்கிய பங்காளியும் புதிய முனைப்பின் பிரதிநிதியுமான கொர்பச்சொவ் 1985இல் அதிகாரத்துக்கு வந்தபோது இக் கொள்கைகள் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆயினும் இவற்றை நடைமுறைப் படுத்துவதிற் பல சிக்கல்கள் இருந்தன.

ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றுக்குப் பழக்கப்பட்டுவிட்ட நிர்வாகிகள் தொழிற்துறையில் ஆதிக்கம் செலுத்தினர். தமது அதிகாரத்துக்கும் வசதிகட்கும் மிரட்டலாக அமைந்த எதையும் நடைமுறைப்படுத்த அவர்கள் ஒத்துழைக்க இடமிருக்கவில்லை. பெரெஸ்றொய்க்கா தனியார் முயற்சிக்கும் உற்பத்தி முறைகளின் மறுசீரமைப்புக்கும் மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதாரத் திட்டமிடலின் இடத்திற் பரவலாக்கப்பட்ட திட்டமிடல் நிர்வாகப் பொறுப்புகட்கும் வழிகோலும் என்பது எதிர்பார்க்கப்பட்ட விஷயம். சோஷலிசத்துக்குட்பட்ட சந்தைப் பொருளாதாரம் என்னும் கருத்தும் முன்வைக்கப் பட்டாலும் சோவியத் உற்பத்திகள் உலகச்சந்தையில் கிடைக்கவல்ல மலிவான பண்டங்களுடன் எவ்வாறு போட்டியிட முடியும் என்ற பிரச்சனையும் சோவியத் பொருளாதாரத்தையும் தொழில் உற்பத்தியையும் மறுசீரமைக்க அவசியமான நிதியை எவ்வாறு திரட்டுவது என்ற பிரச்சனையும் பூதாகரமாக நின்றன. சோவியத் ராணுவச் செலவும் ராணுவ உற்பத்தியும் மட்டுப்படுத்தப்படவேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாமலேயே முன்னின்றது. கொர்பச்சொவின் பெரெஸ்றொய்க்கா, சோவியத் யூனியனின் புனர் நிர்மாணத்திற்கு சோவியத் யூனியனின் சொந்த பலத்தைவிட அதிகமாக அந்நிய மூலதனத்தினதும் தொழில்நுட்பத்தினதும் வருகையை எதிர்பார்த்தது. எனவே ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட நிதி நிறுவனங்களை மட்டுமன்றி ஏகாதிபத்திய நாடுகளையும் திருப்திசெய்யும் தேவை உருவாயிற்று. சர்வதேச நிதி நிறுவனங்களதும் ஏகாதிபத்தியவாதிகளதும் நிபந்தனைக்குட்பட்டுப் பொருளாதார, தொழிற்துறைகளில் மாற்றங்களை மேற்கொண்ட மூன்றாமுலக நாடுகளில் 'சுதந்திரமான சந்தை' ஏற்படுத்தும் விலைவாசி ஏற்றம், வேலையின்மையின் அதிகரிப்பு, வறுமையின் விரிவு என்பன சோவியத் யூனியனையும் பாதிக்காமல் இருக்க முடியாது. எவ்வாறாயினும் பொதுமக்களின் ஒத்துழைப்பில்லாமல் பெரெஸ்றொய்க்காவை நடைமுறைப்படுத்த இயலாது என்பது எப்போதோ தெளிவாகியிருக்கும். அந்த ஒத்துழைப்பை எவ்வாறு பெறுவது என்பது ஒரு அரசியற் பிரச்சனை.

சோவியத் அரசின்மீது மக்களுடைய நம்பிக்கையை மீட்டும் நோக்குடன் முன்வைக்கப்பட்ட கிளாஸ்னொஸ்ற் என்ற 'திறந்த அரசியல்' முறை உண்மையில் முன்னர் கட்டுப்படுத்தப்பட்டிருந்த கம்யூனிஸ விரோதிகட்கும் குறுகிய தேசியவாதிகட்கும் உதவிய அளவுக்குப் பரந்துபட்ட மக்களது தேவைகளை வலியுறுத்தப் பயன்படவில்லை. கிளாஸ்னொஸ்ற், கம்யூனிஸ்ட் கட்சியையும் மக்களையும் நெருங்கப் பிணைக்கும் ஒரு வெகுஜன அரசியல் ஆயுதமாக விருத்தி செய்யும் தரமோ தகுதியோ அற்றுப் போனது. மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப்போன ஒரு கட்சித் தலைமையால் அது தமக்கு எதிரான ஒரு அரசியல் அலையாக எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அவர்களில் ஒரு பகுதியினர் சோஷலிசத்தைத் தூக்கி எறிந்துவிட்டு முதலாளித்துவ முனைப்புடைய பொருளாதாரச் சீர்திருத்தத்தையும் மேலை முதலாளித்துவ நாடுகளின் ஜனநாயகத்தையும் தழுவுவதற்கு ஆயத்தமானார்கள். இன்னொருசாரார் தமது அதிகாரத்தை விட்டுக் கொடுக்க ஆயத்தமின்றி மேலும் விறைப்பான முறையில் கட்சியினதும் ஆயுதப்படைகளினதும் செல்வாக்கை வலியுறுத்த முற்பட்டனர். இவர்கள் சோஷலிசத்தின் பேரால் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றாலும், மக்கள் மத்தியில் தமது சோஷலிச அரசியலைப் பரப்பி அதை வெகுஜன அரசியற் போராட்டமாக விருத்தி செய்ய இயலாதவர்களாகவே இருந்தனர். இதற்கான காரணங்கள் பல.

சோவியத் யூனியனில் விருத்தியடைந்துவந்த பொருளாதார நெருக்கடியும் மக்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையிலான உறவின் அந்நியத் தன்மையும் கட்சிக்காகவோ சோஷலிசத்துக்காகவோ மக்கள் உற்சாகமாக எழுந்து போராடக்கூடிய நிலையை விட்டுவைக்கவில்லை. சோஷலிசம் பற்றிய அவர்களது அறிவு சோவியத் யூனியனின் பிரச்சனைகட்கு முன்னோக்கிய பார்வையுடைய தீர்வு எதையுமே தரவில்லை.

அமெரிக்காவுடன் சமரசம் செய்வதன் மூலமும் ஆயுதக்குறைப்பு மூலமும் மேலைநாடுகளிடமிருந்து கூடிய பொருளாதார உதவியையும் தொழில்நுட்பத்தையும் பெறுவதோடு உள்நாட்டில் இராணுவச் செலவு குறைவதனால் சோவியத் பொருளாதாரத்தை முன்னேற்றலாம் என்று கொர்பச்சொவ் எதிர்பார்த்தார். ஆனால் ஏகாதிபத்தியம் சோவியத் யூனியனில் 'சோஷலிசத்தை' ஒழிப்பதில் காட்டிய உற்சாகத்தை சோவியத் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிற் காட்டவில்லை. சோவியத் யூனியனைப் பலவீனப்படுத்தி அதையும் தங்களது சந்தைப் பொருளாதாரத்துக்கு உட்படுத்துவதுதான் அவர்களது இலக்கு. இதைச் சாதிப்பதில் கிழக்கு ஐரோப்பிய நிலவரங்களும் அவர்கட்கு உதவின. கிழக்கு ஐரோப்பிய எழுச்சிகளின்போது தன் கூட்டாளிகளாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளை சோவியத் தலைமை ஆதரிக்க மறுத்ததன் விளைவாக அந்த நாடுகளில் துரிதமான அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

மாற்றங்கள் நடைபெற்றன. 1989இல் முழுக் கிழக்கு ஐரோப்பாவும் சோவியத் யூனியனின் செல்வாக்கிலிருந்து விடுபட்டது. எதிர்பார்க்கக் கூடியவாறு இது சோவியத் தலைமையின் பலவீனமாகவே காணப்பட்டது. எனவே சோவியத் யூனியனுள் தேசியவாதம் தலைதூக்கியது.

கிழக்கு ஐரோப்பாவின் பிரச்சனைகளின்போது கிளாஸ்னொஸ்ற் அரசியலை உபதேசித்த கொர்பச்சொவ் தலைமை சோவியத் யூனியனுள் தேசியவாதத்தை அதே அடிப்படையிற் கையாள ஆயத்தமாக இருக்கவில்லை. தன்னுடைய இருப்புக்கு ஆயுதப்படைகளின் ஆதரவு அவசியமென்று கருதிய கொர்பச்சொவின் நிலைப்பாடு கட்சியின் இரண்டு முனைகளிடையிலும் ஊசலாடியது. இதன் விளைவாக சோவியத் அரசின் பலவீனம் மேலும் வெளியானது. கொர்பச்சொவின் செல்வாக்கும் சரியத் தொடங்கியது.

கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கிற் சரிவை முன்கூட்டியே அறிந்த சந்தர்ப்பவாதியான போரிஸ் யெல்ற்சின் ரஷ்ய தேசிய வாதத்தையும் தாராளவாத அரசியலையும் முதளாளித்துவ முனைப்புடைய சீர்திருத்தங்களையும் மிகவும் தந்திரமாக இணைத்துத் தனது அரசியற் செல்வாக்கை அதிகரித்துக் கொண்டார். கட்சி அவர்மீது எடுத்த கடும் நடவடிக்கைகள் அவரது செல்வாக்கு வளரவே உதவின.

சோவியத் குடியரசுகளின் பிரிந்து போவதற்கான உரிமையை ஒவ்வொரு குடியரசும் வலியுறுத்தத் தொடங்கிய பின்னர் கொர்பச்சொவின் அரசியல் வலிமை மேலும் வீழ்ந்தது. இப் பிரச்சனையைக் கையாள்வதில் அவரது ஊசலாட்டமும் ஒரு முக்கிய குறைபாடாக இருந்தது. ஒருபுறம் சோவியத் யூனியனின் பிளவைத் தடுத்து நிறுத்தும் தேவைக்கும் கிளாஸ்னொஸ்ற் அரசியலுக்கும் இடையிலான மோதல்; மறுபுறம் மேலைநாடுகளை, முக்கியமாக அமெரிக்காவை, திருப்தி செய்யும் நிர்ப்பந்தத்திற்கும் ஏற்கனவே மேலைநாடுகளுக்கு விட்டுக் கொடுத்ததனால் அதிருப்தியடைந்த ஆயுதப்படைகளின் தலைமையைச் சமாளிக்கும் தேவைக்குமிடையிலான மோதல்; இன்னொருபுறம் பிரிவினைக்கு இணங்குவது பலவீனமாகக் காணப்படும் என்ற கருத்துக்கும் பிரிவினையை ஒடுக்கும் முயற்சி உள்நாட்டுக் கலவரத்துக்கு வித்திடும் என்ற அச்சத்துக்குமிடையிலான தடுமாற்றம். இதன் விளைவாக அதிக அரசியல் ஆதாயம் பெற்றவர் யெல்ற்சின் மட்டுமே.

சோவியத் யூனியனின் அதிகார வர்க்கத்தின் நலன்களை அப்படியே பேண வேண்டுமென விரும்பியவர்களின் பிரதிநிதியாக லிகச்சொவைக் குறிப்பிடலாம். கட்சிக்குள் அவர்கள் எதிர்நடவடிக்கை எடுக்க முயன்றபோது காலம் கடந்துவிட்டது. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட யெல்ற்சின் சந்தர்ப்பவாத அரசியல்மூலம் தன் செல்வாக்கை ரஷ்யா முழுவதும் அதிகரித்துக் கொண்டபின் கட்சி உறுப்பினர்களால் கொர்பச்சொவை விட எவரையுமே ஆதரிக்க இயலாது போயிற்று. கட்சியின் பழைய பெருச்சாளிகள் மேலும் தனிமைப்பட்டனர். ஆயுதப்படைத் தலைமைக்குள்ளும் தடுமாற்றம் அதிகமாயிற்று.

1990இல் சோவியத் ஜனாதிபதி பதவிக்குப் பொதுத் தேர்தல் மூலம் தன்னைப் பதவிக்குக் கொண்டுவர கொர்பச்சொவ் தயங்கினார். அதன் விளைவாக சுப்ரீம் சோவியத் அவரை அப் பதவியில் உறுதிப் படுத்திற்று. மக்கள் மத்தியில் தன் செல்வாக்கைப் பரீட்சிக்கத் தயங்கிய கொர்பச்சொவின் அரசியல் வலிமை 1990இல் சோவியத் குடியரசுகளில் நடந்த தேர்தல் முடிவுகளால் மேலும் ஆட்டங் கண்டது. தேசிய வாதிகளின் செல்வாக்கின் வளர்ச்சியும் குறிப்பாக ரஷ்யக் குடியரசில் யெல்ற்சினின் அமோக வெற்றியும் கொர்பச்சொவை நிலைகுலையச் செய்தன. மேலைநாடுகள் கொர்பச்சொவுக்குச் சமமான அளவுக்கு யெல்ற்சினைக் கருதத் தொடங்கின.

ரஷ்ய தேசிய நலன்களை வலியுறுத்தி சோவியத் யூனியனை உடைத்து முதலாளித்துவ சீர்திருத்தங்களைப் புகுத்த விரும்பிய யெல்ற்சினின் முயற்சிகட்கு கொர்பச்சொவ் விட்டுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. இதன் விளைவாக சோவியத் குடியரசுகளிடையே ஒரு புதிய ஒன்றிய உடன்படிக்கைக்கு ஏற்பாடு உண்டானது. இது நடைமுறைப்படுத்தப்படின் கம்யூனிஸ்ட் கட்சியின் 'பழைமைவாதிகள்' அரசியலிலிருந்து ஓரங்கட்டப்படுவது உறுதியாகிவிடும். எனவே தமது இறுதி யுத்தமாக ஒரு சதிப் புரட்சியில் அவர்களிற் சிலர் இறங்கினர்.

கொர்பச்சொவ் மொஸ்கோவிலிருந்து தனது விடுமுறை வாஸஸ்தலத்துக்குப் போயிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட இந்தச் சதிக்கு ஆயுதப்





படிப்பகம்

www.padippakam.com

படைகளிடையிற்கூட ஆதரவு இல்லை. மக்களிடையே செல்வாக்கில்லாத சிலர் சோஷலிசத்தின் பேரால் சட்டவிரோதமாக ஆட்சியைக் கைப்பற்றிய செய்கை துரிதமாகவே மக்கள் எதிர்ப்பைச் சம்பாதித்தது. கொர்பச்சொவ் ஒரு பணயக் கைதியின் நிலையில் சதிகாரரிடம் அகப்பட்டு இருந்த நிலையில் மக்களதும் உலகநாடுகளதும் அபிப்பிராயம் சதிக்கு விரோதமானது என்பதை அறிந்த யெல்ற்சின் மிகவும் தைரியமாக செயற்பட்டு இரண்டே நாட்களில் சதியை முறியடித்தார்.

இதன் விளைவு படிப்படியாக பலவீனப்படவிருந்த கட்சியும், கே.ஜி.பி. உளவு ஸ்தாபனமும், ஆயுதப்படைகளினதும் அரச, தொழில் நிர்வாகத்தினதும் முக்கியஸ்தர்களும் வெகு வேகமாகவே தம் வலிமையை இழந்தனர். வேட்டைக்காரர்கள் வேட்டையாடப்பட்டனர். கட்சியுடன் இருந்த தொடர்பு வசதிக்கும் வாய்ப்புக்கும் வாசலாக இருந்த நிலைமை மாறியது. கட்சித் தொடர்பு ஒரு தகுதியீனமாயிற்று. யெல்ற்சினின் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு வந்த கொர்பச்சொவ் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியைத் துறந்தார். கொர்பச்சொவின் உருக்கமான வேண்டுகோள்களையும் மீறிக் கட்சியின் ஒவ்வொரு அங்கமும் ரஷ்யாவில் நொறுக்கப்பட்டு வருகிறது.

சோவியத் யூனியனிலிருந்து எஸ்தோனியா, லித்துவானியா, லத்வியா ஆகிய போல்ற்றிக் குடியரசுகள் மூன்றும் விலகிச் சுதந்திர நாடுகளாயின. பிற குடியரசுகளும் பிரிந்து போகும் உரிமையைப் பிரகடனஞ் செய்தன. 1990வரை நாம் அறிந்திருந்த சோவியத் யூனியன் இல்லாத ஒன்றாயிற்று. இன்றைய சோவியத் யூனியன் பெயரளவில் மட்டுமே உள்ளது. இப்பொழுது போல்ற்றிக் குடியரசுகள் தவிர்ந்த சோவியத் குடியரசுகளைக் கூட்டுறவின் அடிப்படையில் இணைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. சோவியத் யூனியனிலிருந்த குடியரசுகள் பொதுவான ஆயுதப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தை கொர்பச்சொவ் வலியுறுத்தினாலும் அதைச் சகல குடியரசுகளும் ஏற்கத் தயாராக இல்லை.

சோவியத் குடியரசுகளின் தேசியவாதம் மட்டுமன்றிக் குறுகிய இனவாத, மதவாத உணர்வுகளும் எழும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன. குடியரசுகளிடையே மோதல்கட்கான வாய்ப்புகளும் உள்ளன. இவையெல்லாம் சோவியத் குடியரசுகள் தம் பொருளாதார நெருக்கடிகட்கு எவ்வாறு முகங்கொடுக்கப் போகின்றன என்பதிற் தங்கியுள்ளன. சோஷலிசத்தை நிராகரிக்கும் பேரில் சோவியத் யூனியனை மேலைநாடுகளின் சந்தையாக மாற்றும் முயற்சிகளையே யெல்ற்சின் மேற்கொள்ள விரும்புகிறார். உண்மையான அதிகாரம் அற்ற கொர்பச்சொவால் தான் அவிழ்த்துவிட்ட 'பெரெய்ஸ்றொய்க்கா' பூதத்தைக் கட்டுப்படுத்த முடியாது போய்விட்டது. சோவியத் குடியரசில் மேற்கொள்ளப்படவுள்ள சீர்திருத்தங்கள் குறுகிய காலத்தில் 300% விலைவாசி உயர்வுக்கும் 15-20% வேலையின்மைக்கும் வழிகோலக்கூடுமென ஊகிக்கப்படுகிறது. மேலை நாடுகள் சோவியத் யூனியனை அதன் பொருளாதார நெருக்கடியினின்று எவ்வாறு, எவ்வளவுதூரம் மீட்பது என்பதிற் கருத்து வேறுபடுகின்றன. இது அமெரிக்காவுக்கும் ஐரோப்பியப் பொருளாதார வல்லரசுகளான ஜேர்மனி, பிரான்சுக்குமிடையிலான போட்டியின் வெளிப்பாடும் ஆகும். எவ்வாறாயினும் குறுகிய காலத்தில் சோவியத் யூனியனில் சாதாரண மக்களின் வாழ்க்கை மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகும் என்பது நிச்சயம். இக் கஷ்டங்கள் நீண்டகால சுபீட்சத்துக்கு உத்தரவாதமில்லை.

கொர்பச்சொவ் அதிகாரத்துக்கு வந்தபின் ஏற்பட்ட சில மாற்றங்கள் சர்வதேச ரீதியாக வரவேற்கத் தக்கவையே. சீன-சோவியத் உறவில் முன்னேற்றம், ஆயுதக் குறைப்பு என்பன வரவேற்க வேண்டியவை. அதேவேளை அமெரிக்காவைத் திருப்தி செய்யும் நோக்கில் சோவியத் தலைமை சர்வதேச அரங்கில் தன் முன்னாள் நண்பர்களைக் கைவிட்டுள்ளது. ஆப்கானிஸ்தான், வியற்னாம், நிக்கராகுவா, எதியோப்பியா, இன்று கியூபா என்று பட்டியல் நீள்கிறது. சில சூழ்நிலைகளில் இது சமாதானத்துக்கு உதவினாலும் அடையப்பட்ட சமாதானம் ஏகாதிபத்தியவாதிகட்கு வசதியான முறையிலேயே அமைந்தது. இதற்கு முக்கிய உதாரணமாக அங்கோலாவைக் குறிப்பிடலாம். ஈராக் மீதான அமெரிக்க யுத்தம் சோவியத் யூனியனின் கையாலாகாத்தனத்தை நிரூபித்தது. இன்று தென்னாபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் நடக்கும் சமாதான முயற்சிகளில் சோவியத் யூனியன் ஒதுக்கப்பட்டு விட்டது.

சோவியத் தலைமையின் நலன்கட்காக மேற்கொள்ளப்பட்ட கெடுபிடி யுத்தகாலக் கொள்கைகள் சில மூன்றாமுலக நாடுகளின் தலைமைகட்கு உதவியாக இருந்தன. கெடுபிடி யுத்தத்தின் முடிவு சோவியத் யூனியனின் அழிவுடன் இணைந்தே நிகழ்ந்துள்ளது. எனவே குறுகிய காலத்தில் இது அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கே வசதியாகிவிட்டது. இது மூன்றாமுலகின் விடுதலை இயக்கங்கட்கும் சில சூழ்நிலைகளில் ஒரு பின்னிடைவுதான். ஆயினும் நீண்டகாலத்தில் மூன்றாமுலகின் மக்களும் விடுதலை இயக்கங்களும் தமது சொந்த வலிமையை நம்பியிருக்கும் நிலைக்கு இது வழிவகுக்கும். கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் குடியரசுகளிலும் முதலாளித்துவம் ஏற்படுத்தவுள்ள சிக்கல்கள் பல. அந்த நாடுகளில் புதிய சோஷலிசச் சிந்தனை உருவாகவும் பழைய தவறுகளைத் தவிர்த்துப் புதிய பாதை வகுக்கப்படவும் இடமுண்டு.

சோஷலிசத்தை உச்சரித்துக்கொண்டு நடைமுறையில் சோஷலிஸத்துக்கும் உலகின் விடுதலைப் போராட்டங்களுக்கும் ஏகாதிபத்திய விரோத முயற்சிகட்கும் ஆப்பு வைத்த ஒரு அமைப்பு விழுந்தது தவிர்க்க முடியாதது. அதன் வீழ்ச்சிபற்றி என்னால் மகிழ முடியாமைக்குக் காரணம் அதனை வீழ்த்தியது அதனைவிட ஒரு நல்ல சக்தி அல்ல என்பதுதான். அதன் வீழ்ச்சி இன்று உலக மக்களின் பிரதான எதிரியைப் பலப்படுத்தி விட்டது. இது தற்காலிகமான பின்னிடைவு. சோவியத் அனுபவங்களின் பாடங்களை உலகின் முற்போக்குச் சக்திகள் கற்றுச் சரியான மார்க்கத்தை நடைமுறைப்படுத்தும் என்பது என் நம்பிக்கை. அது நடவாது என்றால் மனித குலத்திற்கு எதிர்காலமே இல்லை.

(நவெம்பர் 1991இல் எழுதப்பட்டது)



படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்துக் கவிஞர் அறிமுகம் 4:

## சண்முகம் சிவலிங்கம்

*1940இல் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டிருப்பு கிராமத்திற் பிறந்த இவர் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். 1960 முதல் கவிதை எழுதிவரும் இவரது எழுத்தில் மரபின் தாக்கம் அதிகமாகவே இருப்பினும் இவர் மரபுவழிக் கவிஞர் அல்ல. அதேவேளை 'புதுக்கவிதைப்' போக்கும் இவரது எழுத்தில் இருப்பதாகக் கூறமுடியாது. இவைபற்றி இவரது கவிதைத் தொகுதிக்கு நு:மான் எழுதியுள்ள முன்னுரையின் பகுதிகளை உங்கள்முன் வைக்கிறோம். சண்முகம் சிவலிங்கம் தனது கவிதைகள் பற்றிக் கூறிய சில வார்த்தைகளும் கீழுள்ளன. இவரது கவிதைகளின் உள்ளடக்கத்திலும் தன்மையிலும் உள்ள வேறுபாடுகள் காரணமாக இவரது கவித்துவத்தின் பரப்பைப் பிரதிபலிக்கும் கவிதைகளைத் தெரிவது மிகவும் சிரமமானது. ஆயினும் வேறுபட்ட தன்மையுடைய மூன்று கவிதைகளைத் தருகிறோம்.*

*சண்முகம் சிவலிங்கத்தின் தன்னடக்கங் காரணமாகத் தமிழ் இலக்கியம் பல நல்ல படைப்புக்களை இழந்துள்ளது என்றே நினைக்கிறோம். இவரது முதற் கவிதைத் தொகுதி, நீர்வளையங்கள், 1988இற்தான் வெளியாயிற்று. அதில் உள்ள பல கவிதைகள் இதற்குமுன் பிரசுரமாகாதவை. அவர் எழுதிய சிறுகதைகளும், இலக்கியக் கட்டுரைகளும், பிரசுரமாகாத சிறு நாவல்களும், மொழிபெயர்த்த அயல்மொழிக் கவிதைகளும் இன்னும் நூல்வடிவம் பெறாமை ஈழத்து இலக்கியத் துறைக்கு ஒரு குறைபாடு. அது விரைவில் நடைபெறாவிடின் அது ஒரு பாரிய இழப்பாகவும் நேர இடமுண்டு. தமிழ்க் கவிதைபற்றி அறிய விரும்புவோர் எவரும் அறிய மிக அவசியமான ஒரு கவிஞர் சண்முகம் சிவலிங்கம். மிகுதியை நு:மானும் அவரும் உங்களுக்குப் பரிமாறட்டும்.*

*- பனிமலர் ஆசிரியக் குழு.*

எனது நாட்டின் இலக்கிய வரலாற்றில் அறுபதாம் ஆண்டுகள் மிக முக்கியமானவை. எழுபதாம் ஆண்டுகள், குறிப்பாக எழுபத்திரண்டுக்கு பிற்பட்ட தசாப்தப் பகுதி அறுபதுகளில் ஏற்பட்ட சில வளர்ச்சிப் போக்குகளை நிதானிப்பதாகவும், மறுகண்ணோட்டம் செலுத்துவதாகவும் அமைந்தது. எண்பதுகளில், 83க்கு பிற்பட்ட காத்திரமான படைப்புகள் ஒரு திடீர் திருப்பம் பெற்றவைகளாக அமைந்தன. இந்தப் போக்குகள், இலங்கையின் பொதுத் தேசிய உணர்வோட்ட பரிணாமத்திலிருந்து, இன ஒடுக்குமுறையின் காரணமாக எழுச்சிபெற்ற தமிழ் தேசியவாத வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டவை என்பது இன்று எல்லோரும் கிரகித்துக் கொள்ளக்கூடிய ஒன்று.

எல்லோரும் சொல்வது போல் நானும் சொல்லலாம்: இந்த கவிதைகளில் இன்பமும் உண்டு, துன்பமும் உண்டு. வேதனையும் விரக்திகளும் உண்டு. அவை தந்த வெளிச்சங்கள் உண்டு. இந்த வெளிச்சங்களைத்தான் நான் முக்கியமானதாகக் கருதுகிறேன். இன்பத்தினூடும் துன்பத்தினூடும், வேதனையினூடும் விரக்தியினூடும் வரும் எனது வெளிச்சத்தைக் காணுங்கள் என்பதுதான் எனது கோரிக்கை. வெளிச்சம் ஒன்றைத் தருவதுதான் ஒரு கலைப்படைப்பின் வாழ்தலுக்கான நியாயம் என நான் கருதுகிறேன். எனது, 'காற்றிடையே'வில் என்ன வெளிச்சத்தைக் காண்கிறீர்கள், எனது 'நண்டும் முள்முருக்கு'வில் என்ன வெளிச்சத்தைக் காண்பீர்கள் என்பதெல்லாம் எனக்கு முக்கியம். இருத்தலும், இருத்தலுக்குப் பிரக்ஞையாய் இருத்தலும்கூட முக்கியமான வெளிச்சங்கள் என்பது வெளிச்சமானால் சரி. எனது 'சனங்கள்'இல் கூட வெளிச்சத்தைக் காணாதவர்கள் முன்பு இருந்தார்கள். இப்போது எப்படியோ? எனது கவிதைகளில் சிலது கருகலானவை எனச் சொல்பவர் பலர். அவர்களை நோக்கியே கறுத்தப் புள்ளிகளை எழுதினேன். கறுத்தப் புள்ளிகள் அவர்களுக்கு இன்னும் கருகலாகத் தெரியக்கூடும். 'மென்மையின் தளைகள்' சற்றுக்கூடுதலான உள் இடைவெளிகளை உடையவை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்த வினாடிகளின் அழுத்தமும் அமுக்கமும், தொலைவும் தொலைவுச் சுருக்கமும் அப்படி. உள் இடைவெளிகளின் ஊகமும் உள்ளுணர்வுமே சிலவேளை வாசகனின் வெளிச்சமாய் அமையக்கூடும்.

சண்முகம் சிவலிங்கம்
'அமலபதி'
பாண்டிருப்பு
கல்முனை (இலங்கை)



படிப்பகம்

www.padippakam.com

தற்காலத் தமிழ்க் கவிதையில் சற்றுப் பரிச்சயம் உடையவர்கள் சசியின் கவிதைகள் வித்தியாசமாக இருப்பதை உணர்ந்து கொள்வர். அவரைப்போல் பிறிதொரு கவிஞரை, அவருடையதைப்போல் பிறிதொருவருடைய கவிதையை அடையாளங் காட்டுவது கடினம். அவருடைய தனித்துவம் அப்படி. தனித்துவமான இலங்கைத் தமிழ்க்கவிதை மரபின் ஒரு தீவிர வளர்ச்சி நிலையை - பாய்ச்சலை இவரது கவிதைகளில் காண முடிகிறது.

அறுபதுகளின் பின் அரைவாசியில்தான் சசி கவிதை எழுதத் தொடங்கினார். அவர் ஆரம்பத்தில் எழுதிய சில கவிதைகளில் சற்றுச் செந்நெறிப் பாங்கான (Classical) நடையினைக் காணமுடியும். 'கண்படுவரை நீள் கரைவாகு வட்டை' எனத் தொடங்கும் கவிதை அவ்வகையில் நான் படித்த அவரது முதலாவது கவிதை என்று நினைக்கிறேன். அது இத்தொகுப்பில் இடம்பெறவில்லை. இத்தொகுப்பில் உள்ள அவள் நினைவிலும் இதன் சாயலைப் பார்க்கலாம். 'இளைய சிவப்பரும்புகளில் இலைமறையும் புதுரோசா', 'பளபளென்ற சிவப்புநிறப் பரல் கல்லில் நீரோடும்'. இதன் மொழிதான் செந்நெறிப் பாங்கானதாக இருக்கின்றதே தவிர இக்கவிதை - இதன் அமைப்பு - தமிழுக்கு மிகவும் புதிது.

செந்நெறிப் பாங்கு சசி கவிதைகளின் ஒரு பண்பல்ல. இத் தொகுதியில் அத்தகைய கவிதைகள் அவள் நினைவு ஒன்றுதான். அதுகூட முற்றிலும் செந்நெறிப்பாங்கானது அல்ல. பொதுவாக அவரது மொழி மிகச் சாதாரணமான இன்றைய நடைமுறைத் தமிழ்தான்.

*"நீ வந்திருக்கிறாய்*
*நான் எழுதவேண்டும்*
*ஏன்?*
*நீயே எனது மையமா?"*
*என்று தொடங்குகிறது ஒரு கவிதை.*

*"அற்ப நிகழ்வும்*
*அர்த்தமற்றதும்*
*என்னுடன் வருக"*
*என்று தொடங்குகிறது பிறிதொரு கவிதை.*

*"எல்லாம் முடிந்தது*
*இனி என்ன, நாம் நடப்போம்"*
*என்று தொடங்குகிறது வேறொரு கவிதை.*

*"சந்தியில் நிற்கிறேன்*
*பகல் சாய்கிறது"*

என்பது இன்னொரு கவிதையின் தொடக்கம். இப்படி பெரும்பாலும் சாதாரண மொழிதான். ஆனால் இந்தச் சாதாரண மொழியில் அசாதாரண உணர்வுகளை எழுப்பி அந்த மொழிக்கு ஒரு அசாதாரணத் தன்மையை, ஒரு கனதியை, வேறு ஒரு பரிமாணத்தைக் கொடுப்பன அவரது கவிதைகள். இது மகாகவி, நீலாவணன், முருகையன் போன்றோர் மூலம் ஈழத்தில் வளர்ச்சியடைந்த ஒரு கவிதை மரபின் தொடர்ச்சி. சண்முகம் சிவலிங்கம் இம்மரபின் உண்மையான வாரிசுகளில் ஒருவர். அதற்கு ஒரு புதிய வளத்தைக் கொடுத்தவர். ஈழத்தில் வளர்ந்த இம்மரபு தமிழகத்தில் வளர்ந்த பாரதிதாசன் பரம்பரையினரின் சத்தற்ற எளிய செய்யுள் மரபிலிருந்து வேறானது. பிற்காலத்தில் வானம்பாடிக் குழுவினர் வளர்த்த ஜனரஞ்சகமான அலங்கார வசன மரபில் இருந்தும் வேறானது. இந்தக் கவிதைகள் முதல் பார்வையில் மிகச் சாதாரணமாகத் தெரியக்கூடும். ஆனால் இவற்றைப் போலியாகப் பிரதிபண்ண முடியாது. இவை எளிமையாகத் தோன்றினாலும் இது ஏமாற்றும் எளிமை. இதை உண்மையான கவிதையின் ஒரு லட்சணமாகவும் சொல்லலாம்.

தற்காலத் தமிழ்க்கவிதைபற்றிப் பேசுபவர்கள் மரபுக் கவிதை என்ற இருமைமுரண்பற்றி இன்னும் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சசிகூட புதுக்கவிதை, அகலித்த புதுக்கவிதை பற்றியெல்லாம் பேசியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரை இந்த இருமைமுரண் இப்போது அபத்தமானதாகவே தோன்றுகிறது. இந்த இருமைமுரணின் அடிப்படை என்ன? வேறு எதைச் சொன்னாலும் சாராம்சத்தில் யாப்பும் யாப்பின்மையும்தான். யாப்பில் எழுதுவது மரபுக்கவிதை. யாப்பை மீறி எழுதுவது புதுக்கவிதை. புதுக் கவிதையாளர்கள் மரபுக்கவிதையை ஒரு பத்தாம் பசலியாகவே நோக்குகின்றனர். மரபுக்கவிஞர்கள் புதுக்கவிதையை ஒரு சவலைக் குழந்தையாகவே பார்க்கின்றனர். இன்றுகூட இந்த நோக்கு, கவிதைபற்றிய நமது விமர்சனப் பார்வையைப் பெரிதும் பாதிக்கவே செய்கின்றது.

சரி. சசி ஒரு மரபுக் கவிஞரா? புதுக் கவிஞரா? இந்தத் தொகுப்பில் உள்ள சுமார் அரைவாசிக் கவிதைகள் சுத்தமான யாப்பில் - வெண்பா, அகவல், விருத்தம் போன்ற செய்யுள் வடிவங்களில் - அமைந்தவை. ஏனைய கவிதைகளும் பெரிதும் "யாப்பு இடையிட்டவை"தான். இதே காரணத்துக்காக சசி யாப்பை (பத்தாம் பசலித்தனமாகக்) கையாளும் மரபுக் கவிஞர்களுள் ஒருவராகி விடமாட்டார். யாப்பில் பரிச்சயமில்லாதவர்களுக்கு சசியும் யாப்பை நிராகரித்து கவிதை எழுதும் ஒரு புதுக் கவிதைக்காரர்தான். என்னைப் பொறுத்தவரை சசி இரண்டும் இல்லை. அவர் ஒரு கவிஞர். நல்ல கவிஞர். மரபுவழிச் சிந்தனை முறையில் இருந்தும், வெளிப்பாட்டு முறையில் இருந்தும் விலகி, நவீன வாழ்வின் நெருக்கடிகளை நவீன முறையில் வெளிப்படுத்தும் ஒரு நவீன கவிஞர்.

யாப்பிலே எந்த அளவுக்கு மோசமான கவிதைகள் உள்ளனவோ அந்த அளவுக்கு - சிலவேளை அதைவிட அதிகமாக - யாப்பை மீறி, வசனத்தில் எழுதப்பட்டவற்றிலும் மோசமானவை உண்டு. ஆகவே யாப்பு அல்லது யாப்பின்மைக்கு தானே ஒரு கவித்துவத் தகைமை இல்லை. செய்யுளும் வசனமும் கவிதைக்கான ஊடகங்கள் மட்டும்தான். ஊடகம், தானே கவிதையாவதில்லை. அது கவிதையைத் தாங்கி நிற்கும் சாதனம்; அவ்வளவுதான். கவிதை என்பது கவிதைப் பொருளும், பொருளின் வெளிப்பாட்டு முறையும் இணைந்த ஒன்று. வெளிப்பாட்டுமுறைதான் கவிதைப் பொருளுக்கு ஒரு கவித்துவத் தன்மையைக் கொடுக்கின்றதே தவிர செய்யுள் அல்லது வசனம் என்ற ஊடகம் அல்ல.



படிப்பகம்

www.padippakam.com

கவிதை கவிஞனின் சமூக, அரசியல் பிரக்ஞையின் வெளிப்பாட்டுச் சாதனம் மட்டுமல்ல; அது அவனது முழுமையான உணர்வுலகையும் தழுவி நிற்பது. மொத்தமான வாழ்க்கை அனுபவத்தின் ஒரு வெளிப்பாட்டுச் சாதனம் அது. இரத்தமும் சதையும் உள்ள எல்லா மனிதர்களையும் போலவே கவிஞனும் பல்வேறுவகையான வாழ்க்கை அனுபவங்களுக்கு உள்ளாகின்றான். அதனாலேயே ‘எகிப்தின் தெருக்களிலே’ எழுதிய ஒரு கவிஞனால் ‘இன்று இரவு’ எழுதுவதும் சாத்தியமாகின்றது. ‘நண்டும் முள்முருக்கும்’ எழுதிய ஒரு கவிஞனால் ‘நத்தைச்சுகம்’ எழுதுவதும் சாத்தியமாகின்றது. இது கவிஞன் மனிதனாக இருப்பதன் அடையாளம். அவன் தன் இருத்தலுக்குப் பிரக்ஞையாக இருப்பதன் அடையாளம். ஆனால் நமது பெரும்பாலான கவிஞர்களைப் பொறுத்தவரை கவிதை இத்தகைய ஒன்று அல்ல. பலருக்கு அது சமூக மாற்றத்துக்கான ஒரு கருவி மட்டும்தான். சமூக, அரசியல் பிரச்சினைகளைச் சொல்வதற்கு மட்டுமே அவர்கள் கவிதையைப் பயன்படுத்துகின்றனர்; பயன்படுத்த வேண்டும் என்கின்றனர். வேறு பலருக்குக் கவிதை, வடிவம் சார்ந்த ஒரு பரிசோதனைக் கவிதைதான். எதிர்க் கவிதை, படிமக் கவிதை, ஹைக்கூக் கவிதை என எழுதி, தாங்களே இவற்றை தமிழில் முதலில் அறிமுகப்படுத்தியதாகவும் சுயதிருப்தி உறுவர். இவர்களைப் பொறுத்தவரை கவிதை மூளை சார்ந்தது. தங்கள் கெட்டித்தனத்தைக் காட்டும் ஒரு வித்தை. தங்கள் சுயத்தின் குரல் அல்ல. இவர்கள் எல்லாருமே தங்கள் சுயத்தின் பெரும்பகுதியை மறைத்துக் கொண்டு தங்களுக்குச் சமூக அங்கீகாரம் பெற்றுத் தரக்கூடிய ஒரு சிறு பகுதியை மட்டும் கவிதைக்குள் கொண்டு வருபவர்கள். அந்த வகையில் ஒற்றைப் பரிமாணிகள்.

சண்முகம் சிவலிங்கம் இவர்களுள் ஒருவரல்ல. அவர் தன் சுயத்தை முமையாக வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதை விரும்பும் ஒரு கவிஞர். "இருத்தலும் இருத்தலுக்குப் பிரக்ஞையாய் இருத்தலும்" முக்கியமானது என்று கருதுபவர். தனது மூல விக்கிரகத்தையும் தரிசிக்கவேண்டும் என்பதற்காக - அதில் நமது மூல விக்கிரகத்தையும் தரிசிக்கவேண்டும் என்பதற்காக - தன்னைத் திரைநீக்கிக் காட்டுகிறார் அவர். எல்லா நல்ல கவிஞர்களினதையும் போல அவரது கவிதையும் அவரது முகமாக இருக்கிறது. அவரில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாக அமைகிறது. அவரது உணர்வுகளையெல்லாம் பிரதிபலிக்கிறது. அவரது மன அமைப்பின் வெவ்வேறு பரிமாணங்களை அவரது கவிதைகள்மூலம் நாம் காண்கின்றோம். அவரது சமூக, அரசியல் கவிதைகள் அவரின் ஒரு பக்கத்தைக் காட்டுகின்றன என்றால், அவரது தன்னிலைக் கவிதைகள் (Personal poems) அவரின் வேறொரு பக்கத்தைக் காட்டுகின்றன. அவரது கவிதைகளில் கணிசமானவை அவரைப் பற்றிய கவிதைகள்தான்.

தற்காலத் தமிழில் சசி ஒரு வித்தியாசமான, தனித்துவமான கவிஞர் என்று ஏற்கனவே சொன்னேன். இவர் மூலம் நவீன தமிழ்க்கவிதை சில சிகரங்களை எட்டியிருக்கிறது என்பதை இத்தொகுப்பைப் படிப்பவர்கள் காண்பார்கள். சந்தியில் நிற்கிறேன், மண்ணும் மனிதரும், ஆக்காண்டி, பரவளைவுக்கோடு, மென்மையின் தளைகளிலிருந்து, ஆதாம்கள் ஆயிரம், மறுதலை, மரியாத உயிர்ச் சுவடும் விலகிச் செல்லும் மையங்களும், வெளியார் வருகை என்பன எனக்குச் சிகரங்களாகத் தெரிகின்றன. வேறு சிலருக்கு வேறு சில சிகரங்கள் தெரியலாம். ஆனால் அற்பம் என்று ஒதுக்கக்கூடியவை இந்தத் தொகுப்பிலே யாருக்கும் அதிகம் கிடைக்காது என்று சொல்வேன்.

சிவலிங்கம் தன் கவிதைகள்பற்றி ஒருபோதும் பெருமைப் பட்டுக் கொண்டவர் அல்ல. இத் தொகுப்பில் உள்ளவற்றுள் சுமார் மூன்றின் ஒரு பங்குக் கவிதைகள்தான் இதுவரை பத்திரிகைகளில் பிரசுரமாகி இருக்கின்றன. அவற்றைக்கூட கவனமாகச் சேர்த்து வைத்துப் பேணும் பழக்கம் அவரிடம் இல்லை. எழுதியவற்றில் கையெழுத்துப் பிரதியிலேயே காணாமற்போனவை பல. அவருடைய பெரும்பாலான கவிதைகளுக்கு நான்தான் முதல் வாசகனாக இருந்திருக்கிறேன். நீண்டகால வற்புறுத்தல்களுக்குப் பிறகு சங்கோசத்துடன்தான் என்றாலும் இந்தத் தொகுப்பை வெளிவிட அவர் சம்மதித்திருக்கிறார். இத்தொகுப்பின் மூலம் இன்றைய தமிழ்க் கவிதை ஒரு புதிய வெளிச்சத்தைப் பெறும் என்பதே என் நம்பிக்கை.

எம்.ஏ.நு.்.மான்.
27.10.1988

## மண்ணில் முளைக்கும் ஒரு வால் நட்சத்திரம்

*இளைஞரே*
*நீங்கள் எங்கே போகிறீர்?*
*காலி வீதி முழுவதும்*
*உங்களின் ஆயிரமாயிரம் முகங்களைக் காண்கிறோம்.*

*கண்டிப் புறத்திலும்*
*யாழ்ப்பாணத்திலும்*
*உங்கள் தலைகள் உயர்ந்தும் தாழ்ந்தும்*
*செல்லும் நீண்ட திசைகளைக் காண்கிறோம்.*

*பேராதெனியா*
*கட்டுப்பெத்த*
*புறக்கோட்டை*
*போபஸ் ஒழுங்கை*
*பஸ் நிறுத்தங்கள்*
*ரயில் நிலையங்கள்*
*பண்டாரநாயக விமான நிலையம்*
*கூட்டுத் தாபனக் குறுக்கு மூலைகள்*
*எங்கும்*
*நீங்கள் ஓர் இராட்சச உடலில்*
*சொட்டும் குருதியில் துளிர்த்த கணங்களாய்*
*வந்து தோன்றி வளர்வதைக் காண்கிறோம்.*



படிப்பகம்

www.padippakam.com

இளைஞரே
நீங்கள் எங்கே போகிறீர்?

பாண்டிருப்பிலும் உங்களைப் பார்க்கிறோம்
கோயிலடியின் கிணற்றுக் கொட்டிலே
கவடா வீட்டின் செங்கற் கட்டிலே
தலைமயிர் குழம்பித்
தசைகள் முறுகித்
தெரியும் உங்களைத் தினமும் பார்க்கிறோம்

மட்டக்களப்பு பஸ்சில் செல்கையில்
ஊர் ஊர் தோறும்
றோட்டுக் கரையில்
எங்கும்
நீங்கள் - ஓர் இராட்சச உடலில்
சொட்டும் குருதியில் துளிர்த்த கணங்களாய்
உற்பத்தியாகி உள்ளதைக் காண்கிறோம்.

'மக்கள் எழுச்சி என்னும் ஓர்
வால் நட்சத்திரத்தை நாங்கள் வானிலே
காத்து நிற்கையில்
எங்கள் காலிடை வளர்ந்த உங்களை
மறந்தே போயினோம்.

மக்கள் எழாத வரையில்
எந்த நட்சத்திரமும் நமக்கில்லை என்பதால்
ஒவ்வோர் இரவும்
ஒவ்வோர் சாமமும்
முப்பது வருஷமாய் முழித்திருக்கின்றோம்
இரவின் குளிரை இதமாய்க் கடக்க
மூடும் இமைக்கு முட்டுகள் நல்க
நாங்கள் பலப்பல யுக்திகள் செய்தோம்

தணலை மூட்டினோம்
சமையல்கள் செய்தோம்
கோப்பி போட்டோம்
கூத்துகள் ஆடிப் பாட்டும் பாடினோம்
எனினும்
அந்த - வால் நட்சத்திரம் வரவே இல்லை.

காரணம் என்ன?
திரும்பிப் பார்க்கிறோம்
"வால் நட்சத்திரம் வானில் வரும்" எனச்
சொன்னவர் எங்கே?
திரும்பிப் பார்க்கிறோம்
அவர்களோ -
செஸ் ஆடுகிறார்கள்
வொலி ·பிஷ்ஷரும், ஸ்ப்பாஸ்கியும்
பின்னால் நின்று பிச்சை இரக்க
அவர்கள் ஒரு செஸ் ஆடுகிறார்கள்.

பாவம்
இன்று அவர்கள் பழுத்த கிழவர்கள்
மண்டையோடு வழுக்கை யாயினார்
வழுக்கை விழாத மற்றவர்களும்
நரைத்துப் போயுளார்
நாட்பட நாட்பட

அறனை பெயர்ந்து
ஆட்டமே கதியென மயங்கி விட்டார்கள்.

"வால் நட்சத்திரம்,
எங்கே?" என்று அவரை இறுதியில் கேட்டோம்

"வந்து போனதே வானத்தில் நேற்று" என
கறுப்பும் வெள்ளையுமான அக்காய்களை
நகர்த்திச் சொன்னார்_
நாங்கள் கசந்து வெளியிலே வந்தோம்
வெளியில் வந்ததும்

"வானத்தை விட்டு,
இம் மண்ணில் நாம் ஓர்
நட்சத்திரத்தை நடுவோம் வாரீர்"

எனும் குரல் கேட்டுத்
திரும்பிப் பார்க்கிறோம்

காலி வீதியில்
கண்டிப் புறத்தில்
பாண்டிருப்பில்
யாழ்ப்பாணத்தில்
புறக்கோட்டையில்
போபஸ் ஒழுங்கையில்
கூட்டுத் தாபனக் குறுக்கு மூலையில்
மட்டக்களப்பு பஸ் செல்லும் பாதையில்
ஊர் ஊராய்
கூட்டங் கூட்டமாய்
எங்கும்
நீங்கள் - ஓர் இராட்சச உடலில்
சொட்டும் குருதியில் துளிர்த்த கணங்களாய்
உற்பத்தியாகி ஊர்வலம் ஆயினீர்.

ஓமோம்
நாங்கள் இப்போது உணர்கிறோம்.
நாங்கள் வானில் ஓர் நட்சத்திரத்தைக்
காத்து நிற்கையில்
எங்கள் காலிடை வளர்ந்த உங்களை
மறந்தே போயினோம்.

நீங்களோ
எம்மிலும் நிறைய உழன்றதால்
வானத்தை விட்டு
இம் மண்ணிடை அந்த
நட்சத்திரத்தை நாட்டத் துணிந்ததோ?

எங்கே போகிறீர்? ஓ! என் இளைஞரே
எங்கே போகிறீர்?
எங்கே போகிறீர்?
(1971)



படிப்பகம்

## பாடாத பாடல்கள்

கண்ணி கட்டும் போதே
பூக்கள் உதிர்ந்து விடுகின்றன.
கர்ப்பம் தரித்த மறுகணமே
கருச்சிதைவு நிகழ்கின்றது.

முனியாய் சிலவேளை முளைகள் தெரிந்தாலும்
திடீரென
துவாலை இறைத்துக் கட்டி விழுகின்றது.
ரணவாடை வீசுகின்றது.
முட்டைக்குள் கோழிக்குஞ்சு
சிறகு ரோமங்களுடன் மாணித்துப்
போகின்றது.
ஆனாலும்
நீ என்னைப் பாடச் சொல்கின்றாய்.

தெருவில் பிணங்கள் நாறுகின்றன.
பூட்டை ரவைகள் உடைக்கும் பொழுதில்
வெண்புறாக்கள்
தலைகெழிய வீழ்ந்து
சிறகொடியச் சுருண்டு கிடக்கின்றன
பையன்கள் சொல்லாமல் போகின்றார்கள்
கரையில் பிணங்களை தேடச் சொல்கிறார்கள்
கரையில் ஒதுங்கிய பிணங்கள்
கடலில் கொட்டப்பட்டவை என்றும் சொல்கின்றார்கள்
ஆனாலும்
நீ என்னைப் பாடச் சொல்கிறாய்.

குருதி உறைந்த பாடல்கள்
பிணங்கள் அழுகும் பாடல்கள்
இருள்
கன்னங்கரிய புகைகளாய்
தலைமேல் கவியும் பாடல்கள்
கருச்சிதையாமல்
முனியாய்
துவாலை இறைத்துக் கட்டி விழாமல்
நெஞ்சைப் பிளந்து
குரல்வளையில் இடறி
நாவில் வெடிக்கின்ற காலம் ஒன்று வரும்
அப்போது கேள்-
இப்போது அல்ல
(1984)

## நண்டும் முள்முருக்கும்

சிவப்புப் பூக்கள்
முள் முருக்கம்.
மைனாக்கள் வரும், போகும்.

இலைகள் உதி-ர்-ந்-து
வெறும் கிளைகள்
முட்களுடன்.

நுனிகளில்
வளைந்த பூந்தண்டுகள்.

அடியில் உள்ள பெரிய பூக்களை
மைனா கோதும்.
அலை பின்னரும் கோத,
நுனியில்,
வரவர, சிறிய
நலிந்து நீண்ட
மொட்டுகள்,
நண்டின் பூப்போல.
ஆமாம்
நண்டின் பூப்போல.
அம்மா சொன்னாள்!
நண்டு சினைக்க
பூக்கும் முள்முருக்கு
முள்முருக்குப் பூக்க
சினைக்கும் நண்டுகள்.

நாளைக் காலை
சந்தைக்குப் போகலாம்.
(1979)

www.padippakam.com

ஜெ

# ஓநாய்களின் கண்ணீர் மழை

## அல்பானியா: பஞ்சமோ பஞ்சம்

அல்பானியச் சீர்திருத்தங்களையடுத்து நடந்த தேர்தலில் அல்பானியத் தொழிலாளர் கட்சியினர் (கம்யூனிஸ்ட்டுகள்) வெற்றி பெற்றனர். இது உலகின் ஜனநாயகத்தின் காவலர்களுக்குக் கசந்தது. எனவே திட்டமிட்ட கலவரங்கள் தலைநகரில் நடத்தப்பட்டன. இறுதியில் அரசியல் அதிகாரத்தை முதலாளித்துவத்துக்குச் சாதகமானவர்களுடன் பகிருமாறு கம்யூனிஸ்ட்டுகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அரசுடைமையான தொழில்களைத் தனியார் மயமாக்கும் யோசனைகளை நிறைவேற்றுவது எளிதல்ல. எனவே அவசர அவசரமாக விவசாயம் கூட்டுப்பண்ணை முறையினின்று விடுவிக்கப்பட்டுத் தனியார் மயமாக்கப்பட்டது. பொதுச் சொத்தாகவிருந்த பண்ணை விலங்குகளும் காணியும் கிராம மக்களிடையே பகிரப்பட்டன. இதன் விளைவாக உணவு உற்பத்தி சீர் குலைந்தது. இரண்டாம் உலகயுத்தத்தின் பின் முடியாட்சியினின்றும் பாஸிஸத்தினின்றும் விடுதலை பெற்ற அல்பானியா தன் குடியாட்சி வரலாற்றில் முதன்முறையாக உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கியது. வரலாறு கண்டிராதளவுக்கு மக்கள் பட்டினியால் வாடும் நிலை 1991இல் ஏற்பட்டது. மேனாட்டுச் செய்தி நிறுவனங்களோ முன்னைய அரசாங்கத்தின் குறைபாடுகளைக் கிளறுகிறார்கள். இன்றைய அவலத்திற்கான காரணம் அல்பானியாவில் சமுதாய மாற்றம் அல்பானிய மக்களது தேவைகளை உணராதவர்களின் பொறுப்பில் இருப்பதுதான். அவர்கட்கு ஆதரவு தருவோர் யாரென்று நான் சொல்ல அவசியம் இல்லை.

## ஈராக்: சதாம் போடாத குண்டு.

ஈராக் அணுகுண்டைத் தயாரிக்கும் நிலையை நெருங்கிவிட்டது என்ற பரவலான கருத்து சர்வதேச அணுசக்தி அதிகாரமன்றத்தினால் (IAEA) திட்டவட்டமாக மறுக்கப்பட்டது. அமெரிக்கத் தலைமையில் ஐ.நா.சபையின் பேரால் ஈராக் மீது தொடுக்கப்பட்ட யுத்தத்தை அடுத்து ஈராக்கில் அணுசக்தி அணுஆயுத உற்பத்திக்குப் பயன்படுகிறதா என ஆராய ஐ.நா. சபையால் ஒரு சர்வதேச விசாரணைக்குழு அனுப்பப்பட்டது சகலரும் அறிந்ததே. அதன் தலைவராக நியமிக்கப்பட்ட கலாநிதி டேவிட் கே ஒரு சி.ஐ.ஏ ஏஜன்ட் என்று ஈராக் ஆட்சேபித்தும் அவர் தலைமையிலேயே அக் குழு இயங்கியது. விசாரணைக் குழுவின் அத்துமீறிய நடவடிக்கைகள் பற்றி ஈராக்கும், ஈராக்கிய அரசாங்கம் ஒத்துழைக்க மறுத்தமைபற்றி விசாரணைக் குழுவும் குற்றஞ் சாட்டின. கலாநிதி கே தன்னிச்சையாகச் சொன்ன கருத்துக்கள் ஈராக் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் நிலையில் இருந்தது என்ற அபிப்பிராயத்தையே உருவாக்கின. கலாநிதி கே தன்னை நியமித்த ஐ.நா. சபையின் அதிகாரத்தை மீறி அமெரிக்க அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தெரிவித்தமை ஐ.நா. சபையில் பலருக்கு ஆத்திரமூட்டியது. கலாநிதி கேயின் நடத்தையின் விளைவாக ஐ.நா. சபையின் விசாரணைக் குழுவின் தகுதியும் கலாநிதி கேயின் தகுதியும் கேள்விக்குள்ளாகின. குழு உறுப்பினர்கள் 44 பேரில் மூவரே IAEA உறுப்பினராவர். மற்றோர் ஐ.நா. பாதுகாப்பு சபை உறுப்பினர்களால் தெரியப்பட்டோராவர். அவர்களுட் பலர் அணு ஆயுத உற்பத்தியில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள். ஈராக்குக்கு அணு ஆயுதம் உற்பத்தி செய்யும் உரிமையை விசாரிக்க இவர்கட்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்ற கேள்வியும் சிலரால் எழுப்பப்பட்டது.

சதாமின் அணுகுண்டு பற்றி நாளாந்தும் எழுதித்தள்ளிய பிரித்தானிய நாளேடுகள் IKEA அறிக்கை பற்றி எதுவுமே எழுதவில்லை. விதிவிலக்காக The Independent (5.10.91) மட்டும் இவ் விஷயம் பற்றி ஒரு நீண்ட செய்தி அறிக்கையை வெளியிட்டது.



## எல் ஸல்வடோர்: சமாதானமும் விடுதலையும்

எல் ஸல்வடோரின் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் (FMLN) நாட்டின் அமெரிக்கச் சார்பு (ARENA) அரசாங்கத்துக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இதன் விளைவாக 1989இல் 'யேசுவிற்' பாதிரிமார் ஆறுபேரைக் கொலைசெய்ததாகக் கருதப்பட்ட ராணுவ உறுப்பினர்கள்மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா என்பது இன்னொரு கேள்வி. எவ்வாறாயினும எல ஸல்வடோரில் ஏற்படும் மாற்றங்கள் அங்குள்ள தீவிர வலதுசாரிகளின் எதிர்ப்புக்குள்ளாகின்றன. அவர்களது அமெரிக்க எஜமானர்கள் அவர்களைக் கைவிடக்கூடும் என்ற அச்சமும் ஓங்கியுள்ளது. அமெரிக்க அரசாங்கத்தினுள் உள்ள அவர்களது ஆதரவாளர்கள் சமாதான உடன்படிக்கையைக் குழப்ப முற்படுகின்றனர். FMLN பலவீனமான நிலையிலன்றிப் பலமான நிலையினில் இருந்தே பேச்சுவார்த்தைகட்கு



படிப்பகம்

இணங்கியிருப்பதால் அமெரிக்க அரசாங்கம் அங்கு புரட்சி பூரண வெற்றி அடைவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனேயே சமாதானத்துக்குத் தன் ஆசியை வழங்கியது. ARENA அரசினதும் ராணுவத்தினதும் மரணப் படைகளையும் அவர்களது சகல ஆதரவாளர்களையும் அம்பலப்படுத்தும் நிலைமை உருவாகுமாயின் சமாதானத்தை அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரிக்குமா?

## அமெரிக்கக் கண்டம்: கொலம்பஸைக் கண்டுபிடித்தது யார்?

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த 500ம் ஆண்டு 1992இல் கொண்டாடப்படவுள்ளது. இது ஐரோப்பியக் குடியேற்றத்தால் பலவகையிலும் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டுச் சிதைக்கப்பட்ட அமெரிந்தியச் சமுதாயங்களின் பரம்பரையினரது மனதைப் புண்படுத்தும் ஒரு விஷயம். கொலம்பஸின் வருகையைத் துக்கதினமாகக் கொண்டாடும் முடிவு கொலம்பியாவின் 'அருவாகோ' சமுதாயத்தினரால் ஏற்கப்பட்டுள்ளது. இது பிற அமெரிந்தியச் சமுதாயத்தினராலும் ஏற்கப்படலாம். அமெரிந்திய விழிப்புணர்வுபற்றி மேலைநாடுகள் என்ன செய்வன என்று பொறுத்திருந்து பார்ப்போம். வெட்கப்படவேண்டிய ஒரு வரலாற்றுத் திருப்பத்தை விழாவாகக் கொண்டாடுவதைத் தடுத்து நிறுத்த யாரும் முன் வருவார்களா? சில வருடங்கள் முன்பு கப்டன் குக் அவுஸ்திரேலியாவைக் கண்டுபிடித்த 200ம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அவுஸ்திரேலிய ஆதிவாசிகளை அது மனவேதனைக்கு உட்படுத்தியது பற்றி வெகு சிலரே கவனஞ் செலுத்தினர் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

## லிபியா: ஊருக்கு இளைத்தவன்?

லொக்கர்பி மீது மூன்று வருடங்கள் முன்னர் குண்டு வெடித்து விழுந்த போயிங் விபத்தின் பின் உலகம் கொஞ்சம் மாறிவிட்டது. விபத்தை அடுத்து லிபியா, சிரியா, ஈராக், ஈரான் என்ற திசைகளில் சந்தேகம் பரவினாலும் முடிவில் சிரியாவும் ஈரானுமே அதிகம் சந்தேகத்துக்குரியவையாகக் கருதப்பட்டன. இன்று மத்திய கிழக்கில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து சிரியாவையும் ஈரானையும் நல்ல பிள்ளைகளாகக் காட்டும் அவசியம் மேலை நாடுகட்கு ஏற்பட்டுள்ளது. லிபிய வெளிநாட்டு அமைச்சே குண்டு வெடிப்பிற்குக் காரணமென்றும் வெளிநாட்டு அமைச்சின் ஊழியர் இருவர் முக்கிய சந்தேக நபர்களென்றும் அமெரிக்க அரசாங்க உளவுத்துறை பிரகடனம் செய்துள்ளது. அமெரிக்கா அந்த இருவரையும் குற்றஞ்சாட்டி வழக்கு விசாரணைக்கு உட்படுத்த லிபியாவினின்று அவர்களை அனுப்புமாறு வற்புறுத்துகிறது. லிபியா தன் மீதான குற்றச்சாட்டை மறுப்பதோடு போதிய ஆதாரமின்றி சம்பந்தப்பட்டவர்களை அனுப்ப முடியாதென்கிறது. இது நியாயமான ஒரு நிலைப்பாடு. அமெரிக்காவின் அரபு ஆதரவாளர்களும் இவ்விஷயத்தில் லிபியாவை மறைமுகமாக ஆதரிக்கவேண்டிய நிலையில் உள்ளனர். அரபுப் பத்திரிகைகள் பல சிரியாவிலிருந்த சந்தேகம் எப்படி லிபியாமீது திரும்பியது என்று கண்டனக் கேள்விகளை எழுப்புகின்றன. ரேகனால் லிபியாமீது நடத்தப்பட்ட குண்டு வீச்சை உலகம் இன்னும் மறந்துவிடவில்லை.

KRITHIKA CATERING
விசேட வைபவங்களுக்கு சகல விதமான இலங்கை,
இந்திய உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும்
செய்து விநியோகிக்கப்படும்.
24 மணி நேர அவகாசத்தில் உங்கள் ஓடர்கள் பரிமாறப்படும்
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல
081 470 7883

www.padippakam.com

# சுகமில்லாத மனிதர்கள்
## அல்லது
## மனநோய்
### (ஓரங்க நாடகம்)

காட்சியமைப்பு: வயல்வெளியில் இருந்து ஒரு சிறிய தெருவால் பெரிய தெருவுக்கு ஏறும் திரை மட்டும் போதுமானது.

பங்குபற்றுவோர்: சம்பந்தன், சிவசொரூபநாதன்.

ச: கொலை! கொலை! கொலை! கோரக்கொலை! அநியாயம்!
சி: என்ன! என்ன!
ச: அ...ஹஹ்ஹா...
சி: ஏன் சிரிக்கிறாய்?
ச: யாரென்று கேட்க முனையாது 'என்ன?' என்று கேட்கிறாய், அதுதான்!.
சி: அ...ஹ.ஹ.ஹா... ஆ...ஹ.ஹ.ஹா
ச: நீயேன் சிரிக்கிறாய்?
சி: மனிதனும் பொருளாயோ விலங்காயோ அன்றி கல்லாய்ப் போய் எவ்வளவு காலம்..? அதி உச்சமான ஜீவகாருண்யமாக, சத்தமில்லாமல் கொலைசெய்து, மனிதனைத் தின்னும்போது சிறிய பூவின் மெல்லிய இதழ்களை ஈரமான உதட்டினால் மெதுவாகப் பிய்ப்பதைப் போலல்லாது, அதுவும் இரத்தம் நிலத்தில் விழுமுன்னே, உடல் விழும்படி குண்டைக் குறி தவறாமல் எவ்வளவு கவனமாகச் செலுத்துகிறான்! அவன் கருணையே கருணை, அவனே மனிதன்! ஆனால் குண்டு கண்ணில் படுமுன்னே கண்ணீர் விடுகிறானே அவனை...! கோழை! கோழை! நீ...
ச: நிறுத்து! நிறுத்து!
சி: எதை..? எதை..?
ச: ஐயோ நீ சொல்வதை முதலில் நிறுத்து.

[திரைக்குப் பின்னால் உரத்த குரல்: முதல் விலங்கு குரங்காயோ, மனிதனாயோ இன்றி ஒரு குட்டி முயலாக இருக்கும் போது எழுப்பிய ஓசை எதற்கு..?]

சி: அதனுடைய வெளிப்படுத்தலுக்கு!
ச: வெளிப்படுத்தல் என்றால் என்ன...?
சி: வாழ்க்கைக்கு!
ச: என்றால்?
சி அதை நீ இப்போது கேட்கும் இந்த நிலைக்கு வராமல் இருப்பதற்கு.

[சொல்லிவிட்டுப் போதல், கொலை செய்யப்பட்ட உடல் வீதியில் கிடத்தல்]

ச: நில்! நில்! இந்த மனித உடலை ஓரமாக அகற்றிவிடுவோம் வா!
சி: ஆ..ஹ...ஹ...
ச: ஏன் சிரிக்கிறாய்?
சி அப்பனே! உன்னை எனக்குத் தெரியும். இப்போது ஓரமாக அருகில் கிடத்துவோம் வா என்பாய், பின்பு வெய்யில் படாமல் அதன்மேல காய்ந்த சருகுகளையோ கள்ளிகளையோ எடுத்து மூடிவிடுவோம் பாவம் என்பாய்! சற்று தீமூட்டி விடுவோமா என்பாய் பின்பு.
ச: பின்பு! பின்பு!

[சிவசொரூபநாதன் அவ்விடம் விட்டுப் போதல்]

ச: நில் நில் 'பின்பு என்ன?' என்பதையாவது சொல்லிவிட்டுச் செல்!
சி: அ...ஹ...ஹ...ஹ.

ச: [ஓடிச்சென்று அவனுக்கு முன் நின்று] சொல்! சொல்!
சி: நான் தீமூட்ட நீ குண்டைக் குறிதவறாமல் எனமீது....

[சி.: சொல்லிமுடிக்குமுன்பே இடுப்பில் மறைந்திருக்கும் அதை எடுத்து ஒற்றைக் கன்னமயிரை இடக்கையால் இறுக்கிப்பிடித்து பல்லை நரும்பி வலது காதுக்குள்.. பின் இதயத்தினுள்...]

ச: அ...ஹ...ஹ...ஹ
சி: நீ யாரென்று தெரிந்தும்... உனக்கு வைத்தும் நீ ஏன்...?
ச: ஏற்கனவே உன்னால்... ஆனால் அதோ பார்.

[வீதியோரத்தில் ஒரு பெண் இறந்து கிடத்தல். 45 வயதிற்கு மேல் இருக்க வேண்டும்.]

சி: அப்போது நீ...?
ச: இனியென்ன, அங்கு போ! மீண்டும் தொடங்கு.

பெண்ணின் உடல்.... வீதியோரம்..... காய்ந்த சருகு..... கள்ளிகள்.....

[மனம்போன போக்கில் ஒரு ஏழை விவசாயித் தாயைச் சுட்டு அன்னிய இராணுவத்தினருக்குத் துணை போனார் என மகுடம் சூட்டப்பட்ட பெயர் மாந்துபோன அந்த உயிருக்கு]

*-சகன்*

*30.05.90*



படிப்பகம்

www.padippakam.com

( 2ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் தான் பொறுப்பாளராக இருந்த பகுதிக்கு கிட்டு கொஞ்ச புலிகளை ஒரு வீட்டில் கொள்ளையடிக்க அனுப்பியதாகவும், கொள்ளையடிக்கப் போகுமுன் கிட்டு தான் அனுப்பும் புலிகளிடம் "'XXX' எப்படியும் மோப்பம் பிடித்து உங்களைப் பிடிக்க வருவான். அப்படி வந்தால் அவன்ர ('XXX'சின்) மண்டையை உடைத்துப் போட்டு வாங்கோ! அப்பதான் சனம் நினைக்கும் இது வேறு இயக்கப் பெடியள்தான் கொள்ளையடிச்சு இருக்கிறாங்கள்" என்று சொல்லி அனுப்பியதாகவும், தான் ஒரு வீட்டில் (தனது பகுதியில்) கொள்ளை நடைபெறுவதாகக் கேள்விப்பட்டு சம்பந்தப்பட்ட வீட்டுக்கு விரைந்து கொள்ளையடிக்க வந்தவர்களை பிடிக்க முற்பட்டதாகவும் ஆனால் அதற்கிடையில் அவர்கள் தங்களைத் தாக்கிவிட்டு ஓடிவிட்டதாகவும் ('XXX'சிற்கு உண்மையிலேயே தலையில் தாக்கிவிட்டுத்தான் போனார்களாம்) பின்பு தானும் தனது சகாக்களும் ஆஸ்பத்திரியில் மயக்கம் தெளிந்து பார்த்தபோது கிட்டு தன்னை நலம் விசாரித்து சம்பவம் நடந்த வீட்டில் கொள்ளையடித்தவர்கள் PLOTE கும்பலாகத்தான் இருக்கும் என்று சொன்னதாகவும், பின்பு இயக்கத்துக்குள் ஏற்பட்ட பிரச்சனையால் கிட்டு நாட்டைவிட்டு வெளியேறித் தான் பிரதேசப் பொறுப்பாளராக வந்தபின் சம்பந்தப்பட்டவர்களை (கொள்ளையில்) அடையாளங்கண்டு விசாரித்தபோதுதான் மேற்கூறிய செய்தி தனக்குத் தெரியவந்ததாகவும் கூறி, புலிகள் இந்த விடயத்தில் மட்டும் உலகத்திலேயே 'நம்பர் வண்' என்று சொல்லிச் சிரித்தார். எனவே இனிமேலாவது சிவசேகரம் போன்றோர் உண்மை நிலைகளை அறிந்து விமர்சனம் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும்.

-ஜீவா, கனடா.

## முறிந்த பனை: விமர்சகரின் பதில்.

விடுதலைப்புலிகள் பற்றிய வாசகர் ஜீவாவின் விமர்சனம் பற்றி இங்கு பதில் எழுதும் அவசியம் எனக்கில்லை. முறிந்த பனை ஒரு சமுதாய விமர்சனம். அதில் ஒரு இயக்கம்பற்றி அதிகம் எழுதப்பட்டதை நான் தவறென்று எங்குமே கூறவில்லை. ஆயினும் சில விமர்சன அளவுகோல்களில் சமனின்மையை எடுத்துக் காட்டினேன். அனைத்திலும் முக்கியமாக, உண்மைக்கும் ஊகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் இத்தகைய நூலிற் குழப்பப்படும் சந்தர்ப்பங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டினேன். இவை நூலின் தகுதிக்கு ஊறு செய்வன என்பது என் மதிப்பீடு. சந்தேகம் மற்றோர்மீது விழுமாறான செயல்களை எவருமே செய்யக்கூடும் என்பதாலேயே ஆசிரியர்கள் விஷயங்களைக் கூடிய தெளிவுடன் கூறுவது அவசியம் என வலியுறுத்தினேன். நான் எழுதியது நூல் விமர்சனமே ஒழிய அரசியல் ஆராய்வல்ல. "விமர்சனம் = மறுப்பு = கண்டனம் = நிராகரிப்பு" என்று ஒரு வாய்ப்பாடு இருந்தால் நான் குற்றவாளிதான்.

-சிவசேகரம்-

With Compliments

PENTEN
ESTATE AGENTS

MANAGEMENT
LETTING &
MORTGAGES

816 GARRATT LANE
TOOTING
LONDON SW17 OLZ
☎ 01-672 0303
FAX: 01-672 7222



படிப்பகம்

www.padippakam.com


# Raja & Co

**SOLICITORS**

295 Balham High Road
Tooting Bec
London SW17 7Ba

Tel: 081-682 2585
Fax: 081-672 2575

- **Conveyancing – Residential & Commercial**
- **Immigration**
- **Matrimonial**
- **Police station representation**
- **Legal Aid work undertaken**

Also at
338 Hoe Street, Walthamstow, London E17
Tel: 081-503 6311 Fax: 081-503 7523


CHANCE-HIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark


யாழ்கோ

இன்சுவை உணவு

உழுந்து வடை-இட்டலி-மசாலா வடை
(குளிருட்டி உறைந்த வடிவில்)
முறுக்கு
(உண்ண ஆயத்தமான நிலையில்)

அறிமுக விலைகளிற் பெறலாம்

விருந்துகட்கும் திருமண வைபவங்கட்கும்
உணவு தயாரித்தளிக்கப்படும்

**JARLCO**
**7 Windsor Road, Harrow Weald, Middlesex**
**081-861 4485**



**SPK VIDEO FILMING**

for
*Weddings*
*Engagements*
*Birthdays*
*&*
*All Stage Performances*
such as
*Bharatanaatya Arangetram*

*call*
*S.P.KUMAR*
***081 - 863 3040***


PAM 1